பதினாறு பக்கங்கள் விலை ரூபா நான்கு

உங்கள் மங்கள
வைபவங்களை என்றும்
வண்ணத்தில் நிலைநிறுத்த
சுரேஷ் போட்டோ
&
வீடியோ

# வார முரசொலி

சுரேஷ் போட்டோ
&
வீடியோ
569, பீச் ரோட் - குருநகர்
யாழ்ப்பாணம்

முரசு 03 ஒலி 220 ஞாயிற்றுக்கிழமை 20 - 08 - 1989 ஆவணி 04 முஹர்ரம் 17

# ஜே. வி. பியின் வன்முறைகள் இவ்வாரத்தில் அதிகரிக்கலாம்!

## தீவிரவாதக் குழுக்களை யுத்தநிறுத்தம் செய்யுமாறு ஜனாதிபதி கோரிக்கை

ஜே. வி. பியின் வன்முறை நடவடிக்கைகள் இவ்வாரத்தில் மேலும் அதிகரிக்கப்படலாம் எனத் தெற்கில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை ஆயுதப்படையினரைத் தத்தம் பதவிகளை இன்றுமுதல் உடனடியாகத் துறந்து விடவேண்டும் என ஜே. வி. பி. எச்சரித்துள்ளது.

இவ்வாறு செய்யாதவர்களின் குடும்பங்கள் அழிக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது!

இதனையடுத்து முப்படைத் தளபதிகளும் விடுத்த அறிக்கையில் ...க்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்க்க படையினர் இடம்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். வைத்தியசாலையில் மனிதனுக்கு மிருகக்கொம்பு!

ஆட்டினுடைய கொம்பைப் போன்ற ஒரு கொம்பு வயோதிபர் ஒருவரின் தோளில் முளைத்துள்ளது. ஆட்டினுடைய கொம்பைப்போல் வைரமாகவும் நுனிப்பகுதி கூரானதாகவும் இது காணப்படுகிறது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது நாவற்குழி கோகிலாக்கண்டியைச் சேர்ந்த கனகசபை (75) என்ற வயோதிபருக்கே இவ் அதிசயக் கொம்பு — 16 ஆம் பக்கம் பார்க்க

## வடக்குக் கிழக்குப் பெற்றோர், மாணவருக்கு அரசியல் இணைப்பாளர் விடுத்த வேண்டுகோள்

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் மாணவர்களைப் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்குமாறு பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ஆ. முருகநேசன் அவர்கள் பத்திரிகைகள் மூலம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இலங்கையின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள நெடுபிடிகள் காரணமாக அரச நிர்வாகம் செயற்பட முடியாத இக்கட்டான நிலையில் இருப்பதால், பாடசாலைகளை நடாத்த முடியாது காலவரையறையின்றிச் சகல பாடசாலைகளையும் கல்வி அமைச்சு மூடுமாறு உத்தரவிட்டது. ஆனால்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்
## படைவிலகுதலை இலங்கை அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டும்

மன்னாரில் அண்மையில் இருபத்துநான்கு இந்தியப்படை ஜவான்கள் கொல்லப்பட்ட சம்பவத்தால் இந்தியப்படைகளை வாபஸ் பெறுமாறு கோருவதை இலங்கை அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டும் என இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் கூறியிருக்கிறார்.

பஞ்சாப்பில் செய்தியாளர்

→ 16 ஆம்பக்கம் பார்க்க

## மின்தடை பற்றி ஈ. ஜ. மு. ஜனாதிபதியிடம் ஆட்சேபம்

வடக்குக் கிழக்கு மாகாணத்திற் கடந்த ஒன்றரை மாதங்களாகத் தடைப்பட்ட மின்சார நிலைமை இன்னமும் தீர்க்கப்படாதது குறித்து இலங்கை ஜனாதிபதியிடமும், மின்துறை அமைச்சரிடமும் ஈழவர் ஜனநாயக முன்னணி தமது ஆட்சேபத்தைத் தெரிவித்து இருக்கிறது.

கடந்த ஒன்றரை மாதங்களாகச் சேதமாக்கப்பட்ட மின்கோபுரங்கள் இன்னமும்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளே

பண்டிதமணி சிறப்பிதழ்

8 ஆம் 9 ஆம் பக்கங்களில்

## அதிகாரப்பரவல் பிரேரணைகள் மாகாணசபை தயாரித்துள்ளது

வடக்குக் கிழக்கு மாகாணசபைக்கு கூடுதலான அதிகாரங்களைப் பெறுவது தொடர்பான பிரேரணைகளை வடக்குக் கிழக்கு மாகாணசபை தயாரித்துள்ளது.

முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தலைமையிலான குழுவினர் தயாரித்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். மாவட்டத் தொலைபேசிச் சேவைக்குப் புதிய பரிவர்த்தனை நிலையம் பண்ணையில் அமைக்கப்படும்

சீர்குலைந்த நிலையில் தற்போது உள்ள யாழ்மாவட்டத் தொலைபேசிச்சேவையைப் புனரமைக்கும் நடவடிக்கையாக நூறு இணைப்புக்கள் கொண்ட பரிவர்த்தனை நிலையம் ஒன்று பண்ணையில் அமைக்கப்படவுள்ளது.

நான்கு கோடி ரூபா செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். இந்தப் புதிய இணைப்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## ரயில்வே ஊழியர் கைதானதால் நேற்று ரயில் சேவை நிறுத்தம்

(கொழும்பு)

நேற்றுக்காலை புகையிரதப் பகுதி ஊழியர்கள் மூவர் கைது செய்யப்பட்டதால் ரயில் சேவைகள் நேற்று திடீரென நிறுத்தப்பட்டன.

இச் சம்பவத்தால் ரயில்வே திணைக்கள ஊழியர்கள் தத்தமது வேலைகளுக்குச் செல்லவில்லை. இதனால் நேற்றைய யாழ்தேவி ரயிலும் யாழ்ப்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## நெல்லியடியில் ஷெல் தாக்குதல்

(பருத்தித்துறை)

நெல்லியடியில் நேற்று நண்பகலுக்குப் பின்னர் சரமாரியாக 'ஷெல்' தாக்குதல்கள் நடந்தன. நெல்லியடி. கொடிகாமம் வீதியில் அரசடிச் சந்தியில் கிரி என்ற இளைஞர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

இவர் இராச (மாதிரிக்) கிராமத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது கரவெட்டிப் பகுதியிலும் வெடிச் சத்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## நல்லைக் கந்தன் உற்சவ சொற்சித்திரப் போட்டி

நல்லூர் முருகன் ஆலயத்தில் அதிகாலையிலிருந்து அர்த்தசாமம் வரை நடைபெறும் பூஜைகள், வழிபாடுகள் பற்றியும், கோவில் விசேட விழாக்கள், அலங்காரம் திருக்கோவிற் சூழலில் நடைபெறும் திருப்பணிகள், சுற்றுப்புறத்துத் தூய்மை, பஜனை, பக்தர்கள் அநுஷ்டிக்கும்படி விரதம், எடுக்கும், காவடி, கற்பூரச்சட்டி ஆகியனபற்றியும், இந்நிகழ்ச்சிகளின் உட்பொருளை, சிறப்பை, நிர்வாக ஒழுங்கை, நல்லூர்ச்சூழல் நம் உள்ளத்தில் ஏற்படுத்தும் புனித உணர்வை, இன்னும் இவை போன்று எம் உள்ளத்தை ஈர்க்கும் பிற நிகழ்வுகளை விபரித்துச் சொற் சித்திரமாகத் தாருங்கள்.

எளிய, இனிய, சரளமான நடையில் உங்கள் கைவண்ணம் மிளிரட்டும் உரையாடல், வருணனை, போட்டி என்று உத்திகள் பல உண்டே அவற்றுள் எதைவேண்டுமானாலும் நீங்கள் கையாளலாம்.

தகுதியானவை முரசொலியில் பிரசுரிக்கப்படும். மிகச்சிறந்த முதல் மூன்று சித்திரங்களுக்குப் பரிசு வழங்கப்படும்.

முதலாம் பரிசு : ரூபா 1000
இரண்டாம் பரிசு : ரூபா 500
மூன்றும் பரிசு : ரூபா 300

முடிவுத் திகதி: 01-09-1989

முரசொலி ஆசிரிய குழுவின் தீர்ப்பே முடிவானது.

## உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

லண்டன், ஹொலண்ட், ஜேர்மன்
கொழும்பிலிருந்து நேரடிப்பயணம்

இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மன், கனடா, சுவிஸ்

இந்நாடுகளுக்கு இங்கிருந்து செல்ல விசாமற்றும் ஒழுங்குகள் நாம் செய்து தருகின்றோம்.
அரைவாசிக் கட்டணம் எகிப்தில் செலுத்த வசதியுள்ளவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.
இந்நாடுகளில் தங்கியுள்ள உறவினர்களிடம் செல்ல முயற்சிப்பவர்களுக்கும் சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும்.
மத்திய கிழக்கு நாடுகளிலும் வேலை வாய்ப்புகள் உண்டு.

### ட்ரவல்ஸ் மகேந்திரா

155|5, குருசோ வீதி, சுண்டுக்குளி.
யாழ்ப்பாணம்.

கொழும்பு:
112, கதிரேசன் வீதி, கொழும்பு-13

08274



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

★ Computer Programming In Basic Language ஆரம்பம்; 26.08.89
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)
பயிற்சிக்காலம்: 3 மாதம்

★ Computer Programming In d Base IV. ஆரம்பம் 24. 08. 89
(செவ், வியா) பயிற்சிக்காலம்: 2 மாதம்

சேரும்பொழுது செலுத்த வேண்டியது
ரூ. 500/- மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப்பயிற்சி I. B. M (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும். தமிழிலும் விளக்கம் அளிக்கப்படும். பயிற்சிமுடிவில் Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப் பத்திரத்தைப்பெற்று பதிவு செய்யவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 23. 08. 89




### Unikco Computer Centre

இல5, மின்சாரநிலைய வீதி
2-ம் ஒழுங்கை யாழ்ப்பாணம்
(உபதபாற்கந்தோர் அருகாமை)

08215


## காணவில்லை



முல்லைத்தீவு செல்வபுரத்தைச் சேர்ந்த பொ. சத்தியரூபன் (மூர்த்தி) என்பவரை (வயது 22) 2.8.1989 இல் இருந்து காணவில்லை. வல்வெட்டித்துறைக்கு சென்றவர் இதுவரை வீடுதிரும்பவில்லை. அடையாளம் காண்பவர் பின்வரும் விலாசத்திற்கு அறிவிக்கவும்.

நவமணி செல்லையா
சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

08244

## பலாலியில் சம்பவம்

பலாலியில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் இரு பொதுமக்களும் ஜவான் ஒருவரும் மரணமானதாக அகில இந்தியவானொலி அறிவித்தது.

## சிறு விளம்பரம்

### தேவை

இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த, கொழும்பில் சொந்த வீடு உள்ளவரும் சொந்தத் தொழில் மூலம் மாதம் ரூபா 20,000 /=க்கு மேல் வருமானம் பெறுபவரும் 28 வயதும் 5 அடி 11 அங்குலம்உயரமுமுடையசிவந்த அழகிய மணமகனுக்கு 25 வயதுக்குட்பட்ட அழகிய நல்லொழுக்க, குடும்பப்பாங்கான மணமகள் தேவை. தொடர்பு கொள்பவர் முதல் கடிதத்திலேயே சாதகக் குறிப்புடனும் படத்துடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 279, C/o முரசொலி, யாழ்ப்பாணம்.
08289

### பயிற்சி

பாலர் ஆசிரியர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன க. பொ. த (சா/தா) சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம் சனி ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் நடைபெறும் நேரில் வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர்சங்கம் மே/பா. உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 08222

### கல்வி

G. C. E. (O/L) ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கு 22 வருட அநுபவமுள்ள ஆசிரியரினல் 2 மாதத்திற்குள் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10 கச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.
08285


CLASSES IN ENGLISH
TYPING
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3 RD. CROSS ST, JAFFNA.



89 சனி, ஞாயிறு
வகுப்பு

மாணவர்களுக்கான வகுப்பு திங்கள் காலை 9 மணிக்கு நடைபெறும்

ஆசிரியர்:
திரு. ரவிமோகன்
யாழ்ப்பாணம்
08279



A/L MATHS
ஆசிரியர்:
ரவிமோகன்
யாழ்ப்பாணம்
[பெருமாள்கோவிலடி]



## வெளிநாட்டுப் பயணம்

அவுஸ்திரேலியா ஜேர்மனி

அடுத்த ஜேர்மனி பயணம்

**26 - 08 - 89**

விரும்புவோர் 21-ம் 22-ம் திகதிகளில்
நேரில் சந்திக்கவும்

★ சவூதி அரேபியா
கிளினேர்ஸ், ஹவுஸ் டிறைவர், காப்பென்ரர்ஸ்

★ ஓமான்
ரெயிலேர்ஸ்

★ குவைத்
பணிப்பெண்கள்

★ சிங்கப்பூர்
பணிப்பெண்கள், தாதிகள் (Nurse)

க. இந்திரலிங்கம் (சந்திரன்)

### நிரோஷன் என்ரபிறைஸ்

பருத்தித்துறை வீதி
மயிலிட்டி காங்கேசன்துறை
(T. B. வைத்தியசாலை அருகில்)

08 259


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பட்டமளிப்பு விழா

கரம்பனை வதிவிடமாகக் கொண்டு ஆசிரியப் பணி புரிபவரான ம. ஜெயராம சர்மா அவர்கட்கு அனலைதீவு ஐயனர் ஆலயத்தில் நடந்து முடிந்தஆடித்திருவிழாவின்போது தொடர்ந்து சைவச்சொற்பொழிவு ஆற்றியமைக்காக அக்கோவிலின் அடியார், பரிபாலன, இளைஞர், தொண்டர் சபைகளால்

"மனோ ரஞ்சித மித்திரன்"

என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.
08284


## புதிய உயர் கல்லூரி

ஆங்கில வகுப்புக்கள்

ஆசிரியர்: பிரிட்டோ

புதிய பிரிவு: சனி, ஞாயிறு ஆரம்பம் 3. 9. 89
9. 00 - 6. 00

இவரது வகுப்புக்கள் கொக்குவிலில் வழமை போல் நடைபெறுகின்றன.

நிர்வாகி

08286


## உங்களிடம் உண்டா?

உடனே தொடர்பு கொள்ளவும்

மன்னார், வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சிப் பகுதிகளில் சகல வசதிகளுடன் வாடகைக்கு வீடு ஒன்று ஒரு சமூகசேவைக் குடும்பத்துக்கு உடனடியாகத்தேவைப்படுகிறது. முற்பணம் கொடுக்கத்தயார். முதற் கடிதத்திலேயே சகல விபரங்களுடன் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

செயலாளர்நாயகம்
தபாற் பெட்டி இல: 1253
கொழும்பு- 03
தொலைபேசி 5/585851

08281




# தவப்பயன்

பண்டிதமணி அவர்கள் கசடறக் கற்ற மேதை. கசடறக்கற்றல், உயிர்க்கு உறுதிபயக்காத, பொருளற்றவற்றிற்கு முக்கியத்துவம் அனுகாதவகை நெறிப்பட்ட சான்றோர் நிழல் நின்று கற்றல்.

மேதை-அறிஞன்; அறிவு கல்விப்பயனாய தூய ஒழுக்கத்தில் நிலைக்கச் செய்வது. ஒழுக்கம் தர்மத்தின் நிழலை என்றும் அகலாத வாழ்வு.

அங்கே செல்வத்துக்கு, அதிகாரத்துக்கு சுகானுபவத்துக்கு அணுப்பிரமாண இடங்கூட ஒதுக்கப்படமாட்டாது.

அவர்கள் புகழையும் பொருள் செய்யாத புகழாளர் புகழ், பொருளைப் போல இல்லையாயினும், கண்ணுக்குப் புலனாகாமலே நின்று மனத்தை மயக்கவல்லது. ஆணவ விருத்திக்கும் அது உபகாரமாவதுண்டு. பாவத்தின் பயங்கரச் சுமையாகி, திரண்டு கிடக்கும் செல்வம் குவிந்த இடத்தைப் புகழ்தானகவே ஒடி அடைகிறது.

புகழ்தேட ஆசை பிறக்கும் போதே அவன் ஆழத்தில் விழ ஆரம்பித்து விடுகிறன். புகழ்தானக வந்து சிலரை அடைவதுமுண்டு. பெரியோர்கள் அப்பொழுதும் அதை மகிழ்ந்து வரவேற்பதில்லை உலகுபெறும் பயனைக் கருதிக் கருத்தின்றி இருப்பர்.

அவர்கள் ஈஸ்வர நியதியை உணர்ந்து தெளிந்தவர்கள். ஈஸ்வரி நியதி-விதி.

இந்த உடம்புர வாழ்வு, சார்பு எல்லாமே நாம் முன் பிறவிகளில்தேடிக்கொண்டு வந்தவை. அவற்றில் அணுவைக்கூடத் தள்ளிவிட முடியாது. வில்லிலிருந்தும் விடுபட்ட அம்பே போல பிராரத்வ நிகழ்ச்சிகளை நிறுத்தவோ தடுக்கவோ முடியாது. எடுத்த உடம்புக்கமைந்த நிகழ்ச்சிகள் முடிந்த அந்தக்கணமே உடம்பு விழும் என்று சாஸ்திரங்கள் பேசுகின்றன.

அவர்களுடைய பிற்கால வாழ்வு, பயங்கரமான கொடிய நோய்கள் நீங்காதவாறு அமைந்தது. அவர்கள் தூக்கமின்றிக் கழித்த இரவுகள் பல, படுக்

**க. தி. சம்பந்தன்**

கவே முடியாத நிலையில் கழித்த பகல் இரவுகள் பல.

அந்த நிலையிலும் இளஞ் சிரிப்போடு மலர்ந்த முகத்தோடு சொல்லுவார்கள்: 'பிராரத்வம் கழியட்டும்; கழியட்டும்'

அவர்கள் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச்சான்றவர். குருசாஸ்திரஞானம் நிறைந்து விரிந்து அமைந்து ஒடுங்கப் பெற்றகுணசௌந்தரிய முடைய அறிஞர்.

பிராரவத் நிகழ்ச்சிகளைக் கருத்தான்றி நிகழவிடும் பக்குவநிலை அவர்களை வந்தடைந்துவிட்டது.

அவர்கள் இருந்த சூழலில் அமிர்தமயமான ஆன்மத்வ ஒளி இடையிடின்றி வீசிக் கொண்டிருந்தது.

அவர்களது ஆசி ஜன்மாந்திரங்களிலும் காக்கும் கவசமாகி நிலைத்து நிற்கிறது. அவர்கள் நாம் சில ஜன்மங்களில் செய்த தவப்பயன்.

## வாழ்க!
## பண்டிதமணி பாரம்பரியம்

பண்டிதமணியவர்களின் நினைவாக அரியதொரு மலர் மலர்கிறது. மலர்விப்பவர் மாணவபரம்பரையினர்.

பண்டிதமணியவர்கள் பாக்கியசாலி; தக்கார். அவரைநன்றி பாராட்டி விழாவெடுக்கும் அவர்மாணவ பரம்பரை—எச்சம்—இதைநிருபிக்கிறது பண்டிதமணியவர்களின் நூல்களும் அவர் எச்சங்களாய் என்றும் நின்று நிலவி அம்மேதையின் பெருமையைப் பறைசாற்றியவாறேயிருக்கும்! சந்தேகமில்லை.

பண்டிதமணியவர்கள் எழுதி இதுவரை நூலுருப் பெருத கட்டுரைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இருபத்தேழு கட்டுரைகளும் செந்தமிழ்க்களஞ்சியம் என்ற தலைப்பில்—நூலுருவில்—இன்று வெளியிடப்படுகின்றன.

தமிழ் ஆர்வலர்க்கு மலரும், களஞ்சியமும் காலமெல்லாங்களிப்பூட்டும்; ஆய்வாளர்க்கோ இவை பட்டமளிக்கும்; பயன் பல நல்கும்.

பண்டிதமணியவர்களது ஆக்கங்கள் அத்தனையும் நூலுருப் பெறவேண்டும்

மகான் என்று மிக்க ஆராமையோடு அவர்கள் போற்றிய பேரா. கைலாசபதி அவர்களின்சிந்தனைகள்எழுத்தாக்கங்கள் நூலுருப் பெறவேண்டும்

யாழ். பல்கலைக்கழகத்திற் பண்டிதமணி நினைவு நிதியம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.
—இவை தமிழ் கூறு நல்லுலகின் நீண்ட நாள்ஏக்கம்; எதிர்பார்ப்பு

இன்றைய விழா இவ் எதிர்பார்ப்பை முற்றுவிக்கும் முயற்சிகளுக்கோர் கால்கோளாய் அமையவேண்டும்.

பண்டிதமணியவர்கள் எமது இலக்கிய, சமய பாரம்பரியங்கள் செழுமையுறவென ஆற்றிய பணிகள் அளப்பரியவை அவற்றையெல்லாம் நன்றியுடன் நினைவு கூரும் திருப்பாற்கடல் பண்டிதமணி மணங்கமழும் மலராய் இன்று மலர்கிறது. வாழ்க! பண்டிதமணி பாரம்பரியம்.

க. உமாமகேஸ்வரன்

# குருதரிசனம்

பண்டிதர் ஐயா அவர்களது தரிசனத்தைப் பெற்றவர்களில் குழந்தைக் கவிஞர் அழவள்ளியப்பா அவர்களும் ஒருவர். குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா எழுதிய கடிதத்தில்,

'தங்களைப் போன்று ஆழ்ந்த புலமையும் ஆராய்ச்சித் திறமையும் உடையவர்கள் மேன்மேலும் பல நூல்களை இயற்றித் தந்து தமிழுலகும் மக்களும் நலம் பெற உதவ வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகின்றேன். அடியேன் நூலுக்கு, வாழ்த்து வழங்கியிருக்கிறீர்கள். பண்டிதமணி அவர்களது வாழ்த்துப் பெற்ற நான் உண்மையிலே பாக்கியசாலிதான்.

தங்களன்புள்ள,
அழ வள்ளியப்பா
68-11-06

என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

பாணந்துறை இலிம்பே மகாவித்தியாலயாதிபதி டி.டி. நாணயக்காரஇன்றைய விழாவைப் பற்றிக் கேள்விப்பட்டு 89-07-04ம் திகதி பின்வருமாறு எழுதினர்.

அவர் மேல் கண்வைத்தது சுான்தாமதம் திடீரென்று இமயமலை அடிவாரங்களில் இருக்குமெனக் கூறப்படும் 'தண்டக, போன்ற ஆரண்யங்களில் காணும் ஆச்சிரமங்களில் வீற்றிருக்கும் ரிஷிகளின் மீது வேகமாகப் பறந்து சென்றது; மயக்கம் அடைந்தேன். மயக்கம் தெளிந்த

**அ. பஞ்சாட்சரம்**

உடனே அவரின் திருப்பாதங்களைத் தொட்டுவணங்கினேன்.

தமிழார்வமுள்ள
மொழிவழிச்செம்மல்
டி. டி நாணயக்கார

எல்லா இனமக்களாலும் பாராட்டப்பட்டவர்கள் பண்டிதர் ஐயா அவர்கள். பண்டிதர் ஐயா அவர்கள் பெருமையை மேற்கண்டவண்ணம் பலரும் எடுத்துக்கூறுவதைக் கேட்கும்போது உள்ளம் பூரிக்கத் தானேசெய்யும்.



## அறியாயோ?

தூவி மயில்கடல் போல அதன்மிசை
ஞாயி றெனவரும் உருவாலும்
தோளில் அசைகடம் பாலும் அடியவர்
தூவும் பிறமலர் வகையாலும்
ஆவி உனதடி மேவி சிறிதும்வி
டாது சுழலுவ தறியாயோ
ஆகம் உனதரு ளான கடலிடை
ஆடல் புரிவது தெரியாதோ
தேவர் படுதுயர் யாவும் பொடிபட
சேனை யொடுகளம் புகுநாளில்
தீய அவுணர்கள் மாய நெடுவரை
சாய அயில்விடு மயில்வீரா
கோயில் களில் அழ கான வடிவுள
கோலம் அமைநல்லை அமர்வோனே
கூடும் அடியவர் பாடும் இசைமழை
ஊடு நனைகிற பெருமாளே

—சோ. பத்மநாதன்




# ஜீவ காருண்யம்

கோபாலன் ஒரு வைர வியாபாரி. அவன் வைரங்களைச் செதுக்கி செப்பஞ் செய்து விற்பவன். அவனுடைய வீட்டில் கோபாலனும் அவன் மனைவியும் ஒருசந்நியாசியாரும் இருந்து வந்தனர். அவன் ஒரு மிகவும் அழகிய சேவலையும் வளர்த்து வந்தான். ஒரு நாள் கோபாலன் ஒரு சிறிய வைரத்தைச் செதுக்கிக் கொண்டிருந்தான். அப்போது அவன் கையில் ஆயுதம் கீறி இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது அவன் அதனைக்கவனியாது தன்னுடைய வேலையிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

அப்போது சேவகன் ஒருவன் அவனிடம்வந்து இராசா அவனை அழைப்பதாகச் சொன்னன். உடனே கோபாலன் வைரத்தை அப்படியே வைத்து விட்டுச் சேவகனுடன் அரண்மனைக்குச் சென்ருன். அவன் வளர்த்துவந்த சேவல் இரத்தம் தோய்ந்த வைரத்தைக் சண்டது. அதை ஒருதுண்டு இறைச்சியென நினைத்து விழுங்கிவிட்டது.

கோபாலன் திரும்பிவந்து பார்த்தான். வைரத்தைக் காணவில்லை. மனைவியிடம் கேட்டான். அவள் தனக்குத் தெரியாது, என்று சொன்னுள். சந்நியாசியிடம் கேட்டுப் பார்த்தான். அவர் ஒன்றும் பேசாது தியானத்தில் இருந்தார். கோபாலன் அவர்மீதுசந்தேகங்கொண்டான். கோபாலன் அவர் மீது கொண்ட சந்தேகம் கோபமாகமாறியது. முன் பின் யோசியாமல் அச் சந்நியாசியாரை அடித்தான். அவன் மனைவி எவ்வளவோ கூறியும், தடுத்தும் கோபாலன் கேட்கவில்லை. அவரும் அடியைப் பொறுத்துக் கொண்டிருந்தார் அப்பொழுதும் அவர் ஒன்றுமே பேசவில்லை

சந்நியாசியாரின் தேகத்திலிருந்து இரத்தம் பெருகியது. அப்பொழுது அந்தச் சேவல் அங்கே வந்தது அது கீழே பெருகிய இரத்தத்தை குடித்தது கோபாலன்சேவலைக் காலினல் உதைத்து தடியால் அடித்தான். சேவல் இறந்துவிட்டது. சந்நியாசியார் சேவல்இறந்ததைக் கண்டு நிடுக்குற்ருர். தம்பி நிறுத்து அந்த சேவலின் வயிற்றைக்கிழித்துப்பார். அங்கே நீ தேடிய வைரம் இருக்கும்' என்ருர். கோபாலன் உடனே வயிற்றைக்கிழித்துப் பார்த்தான் அங்கே வைரம் இருந்தது.

கோபாலன் சந்நியாசியாரின் பாதத்தில் வீழ்ந்து வணங்கித்தான்செய்தபிழையைப் பொறுக்கும்படிவேண்டினன். பின்பு அவன் சுவாமி தாங்கள் இதை ஏன்முன்பே சொல்லவில்லை' என்று கேட்டான். அவர் தம்பி நான் இதைச்சொல்லியிருந்தால் உடனே நீ இந்தச் சேவலைக் கொன்றிருப்பாய். அது இறப்பதிலும் நான் அடிவாங்குவது மேலல்லவா?' என்றுசொல்லிக்கொண்டு அடியின்வேதனையால் உயிர்துறந்தார்.

முன்னரே உண்மையைச் சொன்னல் சேவலின் உயிர் போய்விடும், என்று சந்நியாசியார் எண்ணினர், அதனல் தன் உயிரையே இழந்துவிட்டார். தன் உயிரிலும்பார்க்க பிறஉயிர்களிடத்தில் அன்பு வைத்தலே ஜீவகாருண்யம்.

த. காஞ்சன
அங்கத்தவர் இலக்கம்-44

# அம்மா

பால் தருவாள் அம்மா
பழம் தருவாள் அம்மா
கால் முகத்தைக் கழுவிக்
கட்டி முத்தம் தருவாள்

விடியற்காலை எழுவாள்
விறகு தேடி வருவாள்
குடியிருக்கும் வீட்டைக்
கூட்டிச் சுத்தம் செய்வாள்

அன்புடனே அழைப்பாள்
அரவணைத்து மகிழ்வாள்
பண்பு மொழி பகர்வாள்
பாசத்தையே சொரிவாள்

கண்ணைப் போலக்காப்பாள்
கவலை யாவும் களைவாள்
விண்மதியைக் காட்டி
வேடிக்கையும் செய்வாள்

அரிய வார்த்தை சொல்லி
அனுப்பி வைப்பாள் பள்ளி
பெரியவனய வளர்ந்து அவளின்
பெயர் விளங்க வைப்பேன்

பி. பி. அந்தோனிப்பிள்ளை

# நரியும் பெண்பிள்ளையும்

ஒருதாய் தனது சிறிய மகள் அழும்போதெல்லாம் "உன்னை நான் நரியிடம் பிடித்துக் கொடுப்பேன் என்று பயமுறுத்துவாள். இதை அந்த வழியாற் போகும் நரியொன்று அடிக்கடி கேட்டது. மகள் அழகான பெண்ணுக வளர்ந்த போது நரியானது அவளைக் கூட்டிச் செல்ல வந்தது. அப்போது அவளுடைய தந்தை நரியிடம் நாங்கள் இப்போது அவளை உனக்குக் கொடுக்க முடியாது ஏனெனில் அவளுக்கு சீதனத்தையும் நாங்கள் சேகரிக வேண்டும் என்ருன் சிறிது காலத்துக்குப் பின்பு நரி அங்கு வந்தது. தாய் தந்தையார் ஒரு பை நிறையச் சீதனத்தையும் மகளையும் நரியிடம் ஒப்படைத்தனர். நரி பையை வாங்கித் தோளிலே போட்டுக் கொண்டு பெண்ணையும் கூட்டிக்கொண்டுசென்றது. போகும் வழியில் பொறுமையின்றி பையினுள் என்ன இருக்கும் என்பதைப் பார்க்க ஆவல் கொண்டது. ஒரு மரத்தடிக்குச் சென்று பையை அவிழ்த்தது. அப்பொழுது பையினுள்ளிருந்து ஒரு பெரிய கறுப்பு நாய் பெரும் சத்தத்துடன் வெளியே பாய்ந்தது உடனே நரி ஒரே ஓட்டமாக ஓடித் தப்பியது அது திரும்பவும் வரவில்லை

இ றூபநேச ஜீவகுமார்
அங்கத்தவர் இல:127

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்:- ..............................................

வயது:- ..............................................

பாடசாலையின்
பெயர்:- ..............................................

கல்விகற்கும் வகுப்பு: ..............................................

வீட்டு முகவரி: ..............................................

கையொப்பம்: ..............................................

மேலுள்ள விவரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

..................... திகதி

..................... பெற்ருர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினன்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்ருக நிரப்பி அனுப்ப வேண்டும்.)

# சிலேடை அணிவகைகள்

ஒருசொல் பல பொருள் தருவது இலக்கியத்தில் சிலேடைஅணி எனப்படும்

| | | |
|---|---|---|
| கண்ணுடி | = | பளிங்கு |
| கள் + நாடி | = | கள் விரும்பி |
| அறிவில்லாதவன் | = | அறிவற்றவன் |
| அறிவில்+ஆதவன் | = | அறிவில் சிறந்தவன் |
| கூடப்படித்தவன் | = | அதிகம் படித்தவன் |
| கூடப்படித்தவன் | = | உடன் படித்தவன் |
| திருக்கை | = | ஒருவகை மீன் |
| திரு+கை | = | அழகியகை |
| பாரியார் | = | மனைவி |
| பாரி+யார் | = | பாரிஎன்பவர்யார்? |
| பிண்ணக்கு | = | நெய் நீக்கியசக்கை |
| பிள்+நாக்கு | = | பிளவுடையநாக்கு |
| நங்கை | = | பெண்களுட் சிறந்தவள் |
| நம்+கை | = | நமது கை |
| மணியஞ்சாகிறது | = | மணியம்சாகிறது |
| மணி+அஞ்சாகிறது | = | மணி ஐந்து ஆகிறது |
| மன்ருடி | = | பிறரைஇரந்துகேட்பவன் |
| மன்று+ஆடி | = | சபையிலே ஆடுபவன் |
| மாதங்கம் | = | யானை |
| மா+தங்கம் | = | பெரிய தங்கம் |
| மாது+அங்கம் | = | பெண்ணினுடையஅங்கம் |
| என்தலை விதிவசம் | = | என் தலைவியின்திவசம் |
| என்தலை+விதிவசம் | = | எனது ஊழ்வினைப்பயன் |
| கிணற்றடி | = | கிணற்றிற்கு அருகில் |
| கிணற்று+அடி | = | கிணற்றின் அடி |
| கவியரசு | = | குரங்கின் தலைவன் |
| கவி+அரசு | = | கவிகளிற் சிறந்தவன் |
| வழிப்போக்கர்கள் அருந்துமிடம் | = | வழிப்போக்கர் அருந்துமிடம் |
| வழிப்போக்கர்+கள் +அருந்துமிடம் | = | வழிப்போக்கர்கள் அருந்துமிடம் |
| கல்வியிலாதவன் | = | கல்விஅறிவில்லாதவன் |
| கல்வியில்+ஆதவன் | = | கல்வியில் சூரியனைப் போன்றவன் |

வரதன் (அச்சுவேலி)

# பூந்தோட்டம் அங்கத்தவர்

இலக்கம் 416 செகதீஸ்வரன் ஸ்ரீதரன்
வயது 13, வேலாயுதம் மகா வித்தியாலயம் பருத்தித்துறை

இலக்கம் 417 பாலசுப்பிரமணியம் முரளிதரன்
வயது 12, அ. மி. த. க பாடசாலை இணுவில்

இலக்கம் 418 நல்லையா வசந்தி
வயது 13, அ. மி. த.க வித்தியாலயம் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

இலக்கம் 419 பொன்னுத்துரை நாகதேவா
வயது 12, சிறீ விக்னேஸ்வர வித்தியாலயம் யாழ்ப்பாணம்

இலக்கம் 420 மு. செல்வராசா றஜிதா
வயது 12, சென்ற் திரேசா மகளிர் மகா வித்தியாலயம் இளிநொச்சி

இலக்கம் 421 என் பாலசுப்பிரமணியம் பிரசாத்
வயது 11, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம்

இலக்கம் 422 இ. கந்தசாமி சசிகுமார்
வயது 08, பிளவத்தை அமெ. மிஷன் தமிழ்கலவன் பாடசாலை வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டை

இலக்கம் 423 தாரணி தவநாயகம்
வயது 06, சின்னத்தம்பி வித்தியாலயம் அல்வாய் தெற்கு, அல்வாய்

இலக்கம் 424 சுப்பிரமணியம் முகுந்தகுமார்
வயது 13, கனகரத்தினம் ம ம. வித்தியாலயம் யாழ்ப்பாணம்

இலக்கம் 425 செல்லச்துரை நவசோதிமலர்
வயது 12, ஆண்டான்குளம் றே. க. த. க. பாடசாலை அடம்பன்.

# பேயும் விவசாயியும்

ஒரு நாள் ஒரு பேயானது விவசாயி ஒருவனது வீட்டினுள் ஒடிச்சென்று அங்கிருந்த கட்டிலுக்கடியில் ஒளிந்து கொண்டது. பசிக்களையுடன் வீட்டிற்கு வந்த விவசாயி 'எனக்கு ஒரு பேயைத்தின்னும் அளவுக்கு பசியாக இருக்கிறது' என்ருன். கட்டிலுக்கடியில் இருந்தபேய் இதைக்கேட்டு நடுங்கியது. விவசாயியின் மனைவி 'சோறு சமைத்து முடிய சிறிது நேரமாகும். ஆகவே கட்டிலுக்கடியில் இருக்கும் இளநீரை வெட்டிக் குடியும்' என்று கூறினன். உடனே அவன் தனது பெரிய கத்தியை எடுத்துக் கொண்டு கட்டிலுக்கடியில் குனிந்தான். பேய் ஒலமிட்டுக் கொண்டு வெளியே வந்தது.

'ஐயோ! எசமானே என்னைக் கொல்லாதீர்கள். நான் தங்களுக்காக எதையும் செய்யக்காத்திருக்கிறேன்.' என்று கெஞ்சியது. அதற்கு விவசாயி 'அப்படியானல் நீ எனக்கு தினமும் ஒரு மூடை சோளம் கொண்டு வந்து தரவேண்டும். அப்போது நான் உன்னைக் கொல்ல மாட்டேன்' என்ருன். பேயும் தனது உயிருக்கு அஞ்சி விவசாயி சொன்னபடியே செய்தது.

நாடோடிக் கதையிலிருந்து

இரத்தினசபாபதி
சுரேரூபன்

# கவி அரங்கம்

## தராதரங்கள்

ஆண் வர்க்கமே
உங்கள் பார்வையில்
எங்களுக்கு
வடிவழகும் வேண்டும்
வரதட்சணையும் வேண்டும்
ஆனால்உங்கள்
தராதரங்களை
நீவிர் ஏன்
சிந்திப்பதில்லை.

பு. சுரேஷ்

## நம்பிக்கை

ஏன் மறந்தாய்
அன்று ஏற்றிய
அன்புத் தீயால் நான்
அணுவாக எரிகின்றேன்
நீ
நிலா என்றேன்
கரு மேகத்தில் உன்னை
மறைத்து விட்டாய்
ஆலய தீபம் என்றேன்
என் வாழ்வையே
இருளாக்கி விட்டாய்
என்
உயிர் என்மேல்
நடைப் பிணமாக்கி
விட்டாய்
உறக்கத்தை மறந்து
போன விழிகள்
உன்னை மறக்கவில்லை
என்
உயிரையே
இழக்கத் தயங்கவில்லை
ஆனால் உன்னை?
இன்றோ நாளையோ
என்னோடு சமாதியாவது
உன் நினைவுகளுமே
அங்கு கூட உனக்கு
ஆலயம் அமைத்து
வைப்பேன் அப்போதாவது
நீ வருவாய்......
இது என்
நம்பிக்கை

இரா றஜீகரன்

## சாத்தியமில்லை

கண்ணே—
உனக்காக நான்
காத்திருந்த நாட்கள்
வேதனைக் காம்புகளில்
விரக்தி மலர்களை
மலரவிட்டு உதிர
விட்டப்படியால்,
உன்னைத்தேடி
நானே புறப்பட்டு
விட்டேன்
ஆனால்—
உன்
இதயச் சிறையில்
கைதியாகி
ஏங்கித் தவிக்கும்
எனக்கு
இனியும் உனது
ஆறுதல் மொழி
கிடைக்காது!
ஏனெனில்—
சீதன அரக்கன்
என்
தாய் தந்தையரைப்
பற்றிப், பிடித்துள்ளதால்
இனி நாம் சந்திப்பது
சாத்திய மில்லை

அரசடி பூ. நவம்

## மாறுதல்

சட்டைகளை மாற்றலாம்
சட்டங்களை மாற்றலாம்
சடங்குகளை மாற்றலாம்
சம்பிர தாயங்களை மாற்ற
லாம்
உப்புக் கூடினால்
புளியை மாற்றலாம்
ஆனால்-
ஒன்றை மட்டும்
மாற்ற முடியாமல்
பெண்கள் அவதிப்
படுகிறார்கள்
அதுதான் மானம்.

செல்வந்தி மகாலிங்கம்

## இயற்கையின் கோலங்கள்

மாலைக் காலத் தடிவானம்
மஞ்சள் தேய்த்து முகமினுக்கி
வேலைக் களைப்பால் வரும்துணையை
வாவென்றழைக்கும் பெண்ணேபோல்
கோலம் காட்டிக் குளிர்வாடைக்
காற்றை வீசிச் செந்நிறத்தில்
சேலை சுற்றிச் சூரியனை
வரவேற் கிறதே பாருங்கள்!

கதிரோ னுடனே வானமகள்
கூடும் இன்பச் சேர்க்கையைவெண்
மதியும் காண ஆவலுற்று
மெல்ல எட்டிப் பார்க்கின்றாள்
இதனைப் பார்த்துப் பொறுக்காமல்
இனிய தென்றல் மென்காற்றும்
புதிதாய் முகிலைக் கொடுவந்து
போர்த்து அதனை மறைக்கின்றாள்

வண்ண நிலவின் செயல்கண்டு
வானில் தோன்றும் தாரகைகள்
கண்ணைச் சிமிட்டிப் பரிகசிக்கும்
கள்ளத் தனத்தை இகழ்ந்துரைக்கும்
வெண்ணி லாவும் அதனாலே
வெட்கத் தோடு தலைகுனிந்து
மண்ணை நோக்கும் பார்வையெனும்
கதிரைப் பாய்ச்சும் ஒளியாக்கும்

வெள்ளம் போல ஒளிபாய
வியந்து நின்றேன் அவ்வேளை
உள்ளத் தழுக்கா றுற்றவன் போல்
இருண்ட கரிய முகிற்கூட்டம்
மெள்ள மெள்ள வானத்தை
மறைத்து முற்றாய் மூடியதே
தெள்ளத் தெளிவாய் இதுவரைக்கும்
தெரிந்த காட்சி இனியெங்கே?

பா. மகாலிங்கசிவம்

## முல்லையின் அழகுக் காட்சி

முல்லையின் பூக்க ளாலே
மூடிய புதரின் கிட்ட
இருந்துமே பார்ப் பவர்க்கு
எழிலுடை பந்தர் போலும்
தொலைவினில் நின்று பார்த்தால்
தோன்றுமே வெள்ளைப் புள்ளி
கரும்பச்சை உள்ள ஒன்றில்
காட்டிடும் அழக தாகும்
முல்லையின் மாலைக் காட்சி
முழுவதும் அழகு காணும்
கதிரவன் மலையின் பின்னால்
கண்களை மூடும் காட்சி
பறவைகள் இரையைத் தேடிப்
பறந்துமே கூடு சேரும்
கழுத்துமே நீண்டு தோன்றும்
கலையது பெண்ணைச் சேரும்
முல்லையும் வாய் திறந்து
முறுவலைக் காட்டும் காட்சி
தோன்றிப்பூ மலர்ந்து நின்று
தோன்றுமே புதர் மறைத்து
பசுக்களின் கழுத்தில் தொங்கும்
பலமணி ஒலிக்கும் ஓசை
ஆயர்கள் குழலில் ஊதும்
அழகிய ஓசை சேரும்

வ. யோகரனந்தசிவம்

## அன்பின் அளவு

என்னுடைய நிறை
எண்பது கிலோ
என்கிறது தராசு
உன்னை நினைத்ததும்
நூறு கிலோவாகிறது
என்ன காரணம்
என்று-
டாக்டரைக் கேட்க
அது
உன்மீதுள்ள
அன்பின் அளவாம்.
சத்தியமாக
உன்னை காணமுன்
என்னுடைய நிறை
எண்பது கிலோ தான்.

சவா - சண்முகதாசன்

## நிலைமாறும் உலகில்

மேடுபள்ளங்கள்
இன்பதுன்பங்கள்
எத்தனை யெத்தனையோ
மாற்றங்கள்
விண்மீன்களைப் போல்
மனதில்
எண்ணங்களுக்கோ
எண்ணிக்கையில்லை.
நிலையற்ற வாழ்வில்
நிலைக்கும் என்ற கனவு
கலிந்துவிட்டதென்று
கண் விழித்துப்
பார்த்தபோது;
இலவங்காய்கள் வெடித்துப்
பஞ்சு பறக்கின்றது.

சி. சாந்தலட்சுமி

## மோதல் எதற்காக?

ஆணினமே!,
பெண்ணினமே!
ஏனோ
மோதுகின்றீர்
சீதனக் கொடுமைக்கு
இருவருமே காரணமாய்
இருக்கையிலே
உங்களுக்குள் நீங்கள்
விண்வாதம் புரிவதுமேனோ!
உங்களை அறிந்து
உண்மையை உணர்ந்து
நடந்திடுவீரெனில்
ஒழிந்திடும் கொடுமை
ஓர் ஆணைப்பற்றி
பெண், நினைப்பதெல்லாம்
அழகுள்ளவனாக,
அறிவுள்ளவனாக,
அன்புள்ளவனாக.
ஆண்மையுள்ளவனாக,
இத்தனையும் இருந்தால்
போதுமா? அத்துடனே
பட்டம் பதவி
பகட்டான வாழ்வு...
ஒரு பெண்ணைப்பற்றி
ஆண் நினைப்பதெல்லாம்
அச்சம் மடம்
நாணம் பயிர்ப்பு
என்னும் நகைகளுடன்
அழகுள்ளவளாக
அன்புள்ளவளாக
அறிவுள்ளவளாக
இத்தனையும் மட்டுமல்ல?
எத்தனை இலட்சத்துடன்?
எவ்வளவு நகைகளுடன்?
எப்படியான வீட்டுடனே?
வருகின்றாய் எனக்
கேட்கிறான்
எனவே;
பெண்ணினமே!
உன் பிழையை உணர்ந்து
பட்டம் பதவி
படாடோபம்...விட்டு
தேவையானவற்றை
நாடிடுவாய்!
ஆணினமே!
உன்குறை உணர்ந்து
அன்பெனும் பண்பை
அறிவுடன் வளர்த்து
பணத்துடன் நீயும்
நகையினை விட்டு
நங்கையவளை
மணப்பதாலே
ஒழிந்திடும் நாட்டில்
சீதனக் கொடுமை.
சீதனக் கொடுமைக்கு
இருவருமே காரணமாய்
இருக்கையில்
வீணே உமக்குள்
மோதுவதுமேனோ?

இளவாலையூர் நாவரசன்

## காதலிலும் வேண்டும்

கண்கள்
கலந்தாலோசித்து
புன்னகைகள்
புரிந்துணர்ந்து
இதயங்கள்
கைகுலுக்கிய பின்னும்
வார்த்தைகள்
பரிமாறப்படாமையால்
தடைப்பட்டு
போயிருக்கும்
காதலிலும்
தாராளமயமாக்கலை
அறிமுகப்படுத்துவோம்.

மல்கம் முரளிதரன்

## இன்ரவியூ இல்லாமலே..

அன்பே!
உன் விழிகள் என்னும்
அஞ்சற் பெட்டிக்குள்
உன் இதய வாசலின்
முகவரியிட்டு
'காதல் விண்ணப்பம்' ஒன்று
அஞ்சல் செய்தேன்
அதன் பின்
உன் வதனத்தில் மலர்ந்த
புன்னகை மலர்களை
'அக் நொலெச்மென்ட்' ஆக
எண்ணினேன்
ஆனாலும்
'இன்ரவியூவிற்'கான
கடிதம்
இன்னும் வரலையே?
ஓ...... ஒருவேளை
உன் புன்னகை மலர்கள்
'இன்ரவியூ' இல்லாமலே
நான் 'செலெக்ட்டட்' ஆன
தற்கான
அறிவித்தல்களோ!
குழம்பிப் போயுள்ளேன்,
பெண்ணே
புரிய வைக்கமாட்டாயா

புலோலியூர் சந்திரசேகர்

## நினைத்து வரமாட்டாயோ

வெண்ணிலவு சுடர் விட
என்னை விட வேண்டுமோ
என்னினைவு உன்னில் வரத்
தூது விட வேண்டுமோ?

ஆசையோடு அமைத்த கூடு
அழிந்து போக நேருமோ
நேசம் வைத்த உன் நினைவு
மறைவதென்ன நடக்குமோ?

வாசமொடு பூத்தபூ—உடன்
மண்ணில் விழல் ஆகுமோ
வாழ்க்கைப் பூ உதிர்ந்து
வாடி விழல் நேருமோ?

கண்ணில் நீர் இருந்தும்—விழி
வறண்டு போக வேண்டுமோ
கருகிப் போன பூவாய் நானும்
காற்றிலே போவதாகுமோ?

கவிதையிலே காதல் சொன்னாய்
அவை தொலைந்தின்று போனதா?
உனைக் காவுகின்ற என் இதயம்
நொறுங்கி இன்று போவதா?

நேற்று வரை நினைத்திருந்தாய்
நினைவு மாறிப் போனதா
பாத்திருந்து தவிப்பதென்ன
நான் செய்த பாவமா?

தூக்கம் இல்லை துயரம் கொண்டேன்
நீக்கி விட மாட்டாயா
நின் நினைவைச் சுமக்குமென்னை
நினைத்து வர மாட்டாயா?

ஜெயந்தி ஜெய்சங்கர்

கோகிலா மகேந்திரன் மஹாஜனக் கல்லூரி ஆசிரியை, பழைய மாணவி, மஹாஜனக் கல்லூரியின் மகா வாக்கியம் (Motto) உனை நீ அறி கோகிலாவின் உள்ளத்தில் நீண்ட நாள் ஊறிய சிந்தனையின் வெளிப்பாடு இது.

# உனை நீ அறி

இருட்டில் ஓசை எதுவுமின்றிக் காற்றையும் தொலைத்துவிட்டுக் கல்லுப்போல நின்ற முற்றத்து மல்லிகையின் மூலவேர் வரையில் ஒரு முள்ளுப்போலத் துயரமும் விரக்தியும் ஊன்றிக்கிடந்தன.

என் மனசிலும் அப்படித்தான்!

அடிக்கடியும் அதிகமாயும் மனந்திறந்தும் சிரித்தல், சான்றோரின் நன்மதிப்பைப் பெறல், நேர்மையான விமர்சகர்களின் பாராட்டைத் தேடிக்கொள்ளல், போலி நண்பர்களின் கருத்தை மனதில் வாங்காதிருத்தல், அழகை ரசித்தல், பிறமனிதர்களில் நல்லவற்றை மட்டுமே காணுதல், ஓர் அழகிய குழந்தையால் அருமையான தோட்டத்தினால் அல்லது சிறிதே மாற்றப்பட்ட கழக அமைப்பினால் உலகை ஓர் அங்குலம் உயர்வாக்குதல், -நீ வாழ்ந்தமையால் உலகில் குறைந்த பட்சம் ஓர் உயிர் தானும் நன்மை அடைந்தது என உணர்தல்- இதுவே ஒரு வெற்றிகரமான வாழ்வு.

'நான் இங்கே ஏன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்?'

சமுதாயச் சூழலில் நிலவும் கொடுமைகளால் உள்ளுக்குள் அழுதுவடியும் என் மௌனத்தின் மென்மையை வசனங்கள் கொச்சைப்படுத்தி விடலாம் என்பதால் யாருடனும் பேசாமல் இருந்தேன்.

போது ஏற்பட்டிருக்கும் தேவை- மன அமைதிதான்!

தேடத் தேட [ஓடிப்போகும் அந்த மன அமைதியைப் பெறுவது எப்படி?

இருட்டு மெல்ல விலகிக்கொண்டு வந்தது! கண்ணுக்கெட்டிய தூரத்துக் கள்ளிச் செடிகள் வளர்ந்த வெட்டைக் காணியில் விதவைகள் போல் நிற்கும் பட்ட மரங்கள் அவற்றிற்கு ஆறுதல் சொல்ல வந்திருக்கும் ''சௌக்கியமோ?' குருவிகள்!

அந்தக் குருவிகளின் பெயர் எனக்குத் தெரியாது அவை கூவுகின்றபோது ஏற்படும் ஒலி ''சௌ...க்..கியமோ?'' என்று சொல்லிப் பார்க்கும் போது அப்படியே பொருந்திப் போவதால்...நானும் மகனும் சேர்ந்து அவற்றிற்கு வைத்த பெயர் ''சௌக்கியமோ?'' குருவிகள்!

அவை இந்த விடிகாலையில் ...யாரைச் சௌக்கியம் விசாரிக்கின்றன? அவை அந்தப் பட்ட மரங்களையும் கள்ளிகளையுமே விசாரிப்பதுபோல் இருக்கின்றது. எங்களை— மனிதர்களை அல்ல!

''உங்களை— மனிதர்களை சுயநலவாதிகளை மனத்தில் வஞ்சக எண்ணம் கொண்டு எப்போதும் செயற்படுகிற உங்களை— நாங்கள் ஏன் சுகம் விசாரிக்க வேண்டும்?'' என்று அவை என்னைக் கேட்பது

'எனது வாழ்வின் இலட்சியம் என்ன?' எதிரொலியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் போது, வேறொரு குரல் கேட்பது போல கவிஞர் சோ. ப. அவர்கள் தனது மன ஆத்திரம் முழுவதையும் கொட்டித் தீர்த்த வரிகள் சில. பொறி தட்டியது போல் மனதில் வந்தன:

'காசு தேடுதல் இங்கொரு இலட்சியம் கடலைத் தாண்டுதல்கூட இலட்சியம், வீசு காற்றையும் கட்டிப் போட்டொரு பிஸ்னஸ் செய்தல் இன்னொரு இலட்சியம் ஊசியின்முனை நுழையக் கூடிய ஒவ்வொரு நாட்டையும் தேடித் தேடிப்போய் ஒசி வாழ்க்கை வாழ்ந்திடல் ஆகிய உயர்ந்த இலட்சியம் தமிழருக்குள...'

நிச்சயமாகக் கவிஞரின் ஆத்திரப் பற்களில் அகப்படும் தமிழர்களில் நான் இருக்க மாட்டேன். கடலைத் தாண்டுகிற நினைவு எனக்கு மனதில் ஒருபோதும் வந்ததில்லை. ஆகவே அந்த ஒசி வாழ்க்கை என்கிற அகதி வாழ்க்கை பற்றிய பிரச்சினையும் இல்லை. காசு தேடுவதில் நான் எப்போதும் தோல்வியே கண்டிருக்கிறேன். ஆகவே பிஸ்னஸ் எனக்கு ஒருபோதும் பொருந்திவர முடியாத சொல்!

சரி, எனது கல்வி என் மனதில் எழுந்திருக்கும் கேள்விக்குப் பதில் சொல்லுமா? பிரின்ஸ்ரன் பல்கலைக்கழகத்தின் தலைவராக இருந்த ஜோன் ஜி. ஹிபன் ஒரு முறை சொன்னார்;

'கல்வி என்பது வாழ்வின் தேவைகளை எதிர் கொள்ளும் ஆற்றலே'

வாழ்வின் தேவை- இன்றைய வாழ்வின் தேவை- சுற்றிலும் கொடுமைகளும் வன்முறைகளும் நிறைந்து எமது மண்ணின் மக்கள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் உளத் தாக்கமடைந்து விரக்தியின் விளிம்பில் உட்கார்ந்திருக்கும்

போல ஒரு கற்பனை.

கேட்டாலும் கூட நான் பதில் சொல்ல முடியாது காத்திரமான கேள்விதானே!

மனதிலே பிழியப் பிழிய வேதனை கொப்பளித்தது மனிதனுக்கும் இந்தக் குருவிக்கும் என்ன வேறுபாடு? மனிதனின் தேவைகள் எவை? குருவியின் தேவைகள் எவை? குருவி ஏன் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசவில்லை?

உள்ளே ஓடிச் சென்று உளவியல் நூல் ஒன்றைத் தேடி எடுத்தேன்; மனிதனின் தேவைகள் எவை? என்று பார்த்தேன்

உடல் நலமும் உயிர் வாழ்வைத் தொடரலும்.

உணவு, உறக்கம்

பணமும் பணத்தால் வாங்கக் கூடிய பொருள்களும்,

சந்ததியை தொடருதல்,

பாலியல் திருப்தி,

அடுத்த பரம்பரையின் நல்வாழ்வு,

தான் ஏதோ ஒரு வகையில் முக்கியம் என்ற உணர்வு இவைதான்...

இப்போது அந்தக் குருவிகள் ''முக்கியமோ? ''முக்..கிய...மோ?'' என்று கூறுவது போல் கேட்டது. அதைப் பார்த்துச் சிந்தித்தவாறே இருந்த நான் நேரப் பாதையில் நெடுந் தூரம் சென்றுவிட்டேன்.

நாலும் எட்டுந் தான் கூடாத எண்கள்! பணமும் பணத்தால் வாங்கும் பொருள்களும்-தான் ஏதோ ஒரு வகையில் முக்கியம் என்ற உணர்வு- இந்த இரண்டு தேவைகளுந்தான் மனிதனைக் குருவியில் இருந்து வேறு படுத்துகின்றன. இந்த இரு தேவைகளுந்தான் மனிதனைக் கொடுமை நிறைந்தவனாகவும் மாற்றுகின்றன.

குதிரைத் திடலில் குதிரைகள் ஓடுகின்றன. ஒருகுதிரை முதலாவதாக வந்துவிட்டதென்று மற்றக் குதிரைகள் எரிச்சல்படுவதில்லை. அந்தக் குதிரை ஏதும் போதைப் பொருள் பயன்படுத்தியதா என்று தேடித் தேடி அறிவதும் இல்லை.

முதலாவதாக வருகிற குதிரையும் தான் போதைப் பொருளைப்பயன்படுத்தியாவது முதலாவதாக வர வேண்டும் என்று ஒருபோதும் நினைப்பதுமில்லை- தான் முதலாக வந்துவிட்டேன் என்று இறுமாப்புக்கொண்டு அலைவதும் இல்லை.

குதிரை மேல் பணம் கட்டிய மனிதன் படும்பாடு! தான் ஏதோ ஒருவகையில் முக்கியமானவனாக இருக்க வேண்டும் என்ற உணர்வினாலே தான் மனித சமுதாயத்தில் நாகரிக வளர்ச்சி ஏற்பட்டது. இந்த உணர்வினாலே தான் விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கள் அனைத்தும் நிகழ்ந்தன இதே உணர்வினாலே தான் கல்வி அறிவு குறைந்த வறுமைப் பிடியில் உலைந்த-எழுதுவினைஞன் ஒருவன் சட்ட நூல்கள் சிலவற்றைத் தேடிப்படித்தான். 'ஏபிரகாம்லிங்கன்' என உலகப் புகழ்பெற்றான். எனவே இந்த உணர்வினால் ஒரு நன்மையும் ஏற்படப் போவதில்லை என்று சொல்ல முடியாது. ஆனால்,

இந்த உணர்வு எல்லை மீறும் போது?

''நான் மட்டுமே முக்கியமானவனாக இருக்க வேண்டும்' என்ற வெறியாகும் போது...?

கரு மேகங்கள் ஆங்காங்கே வேவு பார்த்தன. வருஷத்தின் வாற் பகுதி ஆதலால் மழை மெதுவாகத் தூறத்தொடங்கியிருந்தது. கொஞ்சம் வெளித்திருந்த தரையில் மீண்டும் இருள் பரவத் தொடங்கியது. என் மனதில் கேள்விக்கான விடை இன்னும் தெளிவாகவில்லை.

சமயம் இக் கேள்விக்கு எப்படிப் பதில் சொல்லும்? அது மிக இலகுவாய்ச் சொல்லிவிடும்!

''கடமையைச்செய், பலனை எதிர்பாராதே!'' என்று கீதை சொல்லும் சமயம் மிக இலகுவாய்,

''வேண்டத்தக்க தறிவோய் நீ... வேண்ட முழுதும் தருவோய் நீ...'' என்று சொல்லிவிடும். ''உனது இலட்சியம் அவனை அடைதலே'' என்று கூறும் 'அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே'' என்றும், ''எமக்கு இந்த உடம்பு கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்றும் எழுத்தில் அழகாய் இருக்கும்.

''நீ கடவுளின் கரங்களில் இடப்பட்ட கருவி என்று நினைத்துக்கொள். உன்னை எப்படிப் பயன்படுத்துவது என்பது அவனுக்குத் தெரியும். நீ 'சும்மா இரு! அது போதும்' என்று அழுத்தமாய் உணர்ந்தும்.

## கோகிலா மகேந்திரன்

'Thou art the potter
I'm the clay
Mould me and make me
As to thy will''

என்று தான் கிறிஸ்துவ பிரார்த்தனைக் கீதமும் பாடும்.

அப்படிச் சும்மா இருந்துவிடுவது அவ்வளவு சுலபமானதாய் இல்லையே?

மழை நின்று மஞ்சள் வெயில் சிந்தும் காலை மெதுவாக எட்டிப் பார்த்தது.

''உன் வாழ்க்கை ஏட்டைப் புரட்டிப்பார். நீ உனக்காக வாழ்ந்த நாட்கள் பலவற்றை நிச்சயமாகக் காண்பாய். ஆனல் பிறருக்கென்று நீ எத்தனை நாள்களை அர்ப்பணித்திருக்கிறாய்? எண்ணிச் சொல்ல உன்னால் முடியுமா?''

உள்ளிருந்து ஒரு குரல்!

பொருளற்ற வெறும் பிண்டமாய் அழகற்றுப்போயிருந்த உலகில் திடீரென ஓர் ஒளிக்கீற்றுத் தெரிந்தது.

நான் எழுந்து வீதிக்கு வந்தேன்.

# வளரும் பயிருக்கு

## மாசூப்பியல்களின் மகிமை

தேன்மொழி:-அண்ணா, அன்று எங்கள் சிறுவர் நாடகத்திற்கு நல்ல விமர்சனம் சொன்னீர்கள். ஆனால் ஒன்று சொல்லவில்லை!

அறிவண்ணன்:- என்ன? என்ன சொல்லவில்லை?

தேன்மொழி:- நடிகர்களில் யாருடைய நடிப்பு உச்சம் என்று கூறவில்லை!

தமிழ்நிலா:- அதாவது சிறந்த நடிகருக்கு ஒரு பரிசு வழங்க வேண்டும் என்கிறாள் தேன்மொழி.

அறிவண்ணன்:- இந்தியாவின் தேசியப் பறவைதான்'ரொப்'

அன்பரசன்:- மயிலாக நடித்த இளவழகனுக்குத்தான் பரிசு.

தேன்மொழி:- என்ன பரிசு கொடுப்போம்?

அன்பரசன்:- உடைஞ்ச சோடாப் போத்தல் ஒன்று கொடுப்போம்... (சிரித்தல்)

அறிவண்ணன்:- பரிசு என்று வந்தால், சொக்கிளேற், விளையாட்டுப் பொருள் என்று கொடுப்பதைவிட, ஒரு நல்ல புத்தகம் வாங்கிக் கொடுக்கலாம்.

தமிழ்நிலா:- சரி, இளவழகனுக்கு ஒரு நாடகப் புத்தகம் வாங்கிக் கொடுப்போம். (எல்லாரும் கைதட்டுகிறார்கள்)

தேன்மொழி:- இந்தியாவின் தேசியப் பறவை மயில். அவுஸ்திரேலியாவின் தேசிய விலங்கு எது அண்ணா?

அன்பரசன்:- எனககுத் தெயும் கங்காரு!

இள:- கங்காரு ஒரு முலையூட்டிதானே அண்ணா?

அறிவண்ணன்:- முலையூட்டிதான் கங்காருவைப் போன்ற விலங்குகளை மாசூப்பியல்கள் (Marsupials) என்று சொல்கிறார்கள்.

தேன்மொழி:- கங்காருவைப் போன்ற விலங்குகள் என்றால்... கங்காருவைப் போல வேறு விலங்குகளும் இருக்கின்றனவா?

அறிவண்ணன்:- இருக்கின்றன கோலாக்கரடி, தாஸ்மேனியன் ஓநாய்மோல், வரி எறும்பு தின்னி ஆகியவையும் மாசூப்பியல்கள் தான்.

தமிழ்நிலா:- இவற்றின் வயிறுகளில் பை இருக்கும் இல்லையா?

அறிவண்ணன்:- இவற்றின் குட்டிகள் ஆரம்ப நிலையில் பிறந்துவிடும். அதனால் சிறிது காலத்திற்குத் தாயின் வயிற்றில் உள்ள பையில் தங்கி இருக்கும்.

அன்பரசன்:- மாசூப்பியல்கள் அவுஸ்திரேலியாவை விட வேறு எங்கே வாழ்கின்றன?

அறிவண்ணன்:- அவுஸ்திரேலியா, அமெரிக்காவின் தென் பகுதி, மத்திய பகுதி ஆகிய இடங்களில் மட்டும் தான் அவை இப்போது வாழ்கின்றன.

இளவழகன்:- ஆதியில் வேறு இடங்களிலும் வாழ்ந்திருக்கின்றனவா?

அறிவண்ணன்:- ஆம் ஐரோப்பா, ஆசியா, தென் அமெரிக்கா, ஆகிய இடங்களிலெல்லாம் அவை வாழ்ந்திருக்கின்றன.

தேன்மொழி:- அப்படியானல் இப்போது ஏன் அவை அவ்விடங்களில் காணப்படுவதில்லை?

அறிவண்ணன்:- ஏனைய முலையூட்டிகள் கூர்ப்படைந்து பெருகியபோது, அவற்றோடு போட்டியிட்டு வாழமுடியாமல் அழிந்து போயினவாம்.

தமிழ்நிலா:- ஐயோ பாவங்கள்!

அறிவண்ணன்:- உயிர் வாழ்வுக்கான போட்டியில் வல்லமை கூடியவை வாழும் ஏனையவை அழியும் என்பது தான் டார்வினுடைய கூர்ப்புக் கொள்கையின் முக்கிய கருத்தும்கூட!

அன்பரசன்:- மனிதர்களுக்கும் இது பொருந்துமா அண்ணா?

அறிவண்ணன்:- பொருந்தத்தான் வேண்டும். ஏனெனில் மனிதனும் ஒரு விலங்குதான்.

இளவழகன்:- அப்படியானல் அவை அழிந்துபோகாமல் எப்படி இன்னும் வாழ்கின்றன.

அறிவண்ணன்:- அவுஸ்திரேலியாவும், தென் அமெரிக்காவும் ஏனைய கண்டங்களில் இருந்து நீண்ட காலமாகத் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தன.

ஏனைய கண்டங்களில் நடைபெற்ற முலையூட்டிகளின் கூர்ப்பும் ஆட்சியும் இந்த இரு கண்டங்களையும் பாதிக்கவில்லை.

தேன்மொழி:- அப்படியானல் அவுஸ்திரேலியாவில் இப்போதும் மாசூப்பியல்களை விட வேறு முலையூட்டிகள் இல்லையா?

அறிவண்ணன்:- இருக்கின்றன. அவை மிகவும் பிற்காலத்தில் மனிதனால் கொண்டு செல்லப்பட்ட முலையூட்டிகள் தான்.

தமிழ்நிலா:- அவுஸ்திரேலியாவில் முயல்கள் தொல்லை பெரிய தொல்லை என்று சொல்கிறார்களே.

அறிவண்ணன்:- முயல்களை மனிதனே அவுஸ்திரேலியாவில் அறிமுகம் செய்தான்- ஆனால் இன்று அவற்றின் அபரிமிதமான பெருக்கத்தை அவனாலேயே கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறது.

அன்பரசன்:- ஏனைய முலையூட்டிகளின் அறிமுகத்தால் ஒரு காலத்தில் அவுஸ்திரேலியாவிலும் மாசூப்பியல்கள் அழிந்துவிடும் நிலை ஏற்படலாமோ?

அறிவண்ணன்:-ஏற்படலாம். புதிய விலங்குகளை அவுஸ்திரேலியாவிற்குள் கொண்டு செல்வதற்குக் கடுமையான தடை இருக்கிறது. அவுஸ்திரேலியஅரசு விழிப்பாகவே இருக்கிறது ஆனாலும் என்ன

### விழிசைக் குயில்

நடைபெறும் என்று நாம் நிச்சயமாய்க் கூறமுடியாது.

இளவழகன்:- கங்காரு என்ன சாப்பிடும் அண்ணா?

அறிவண்ணன்:- கங்காரு ஒரு தாவர உண்ணி.

தேன்மொழி: வெண் மாசூப்பியல்களும் சைவமா?

அறிவண்ணன்: இல்லை தாஸ்மேனியன்ஓநாய்முழ இறைச்சி தின்னி வரி எறும்பு தின்னியின் பெயரைப்பார்த்தால் தெரியும் என்ன சாப்பிடும் என்று மோல் பூச்சிகளை உண்ணும்.

(கூட்டத்தில் இருந்து வெளியேறிய அன்பரசன் சிறிய தென்னையில் ஏறுகிறான்)

தமிழ்நிலா: என்ன இவன் கோலாக்கரடி மாதிரி விறுவிறென்று ஏறுகிறான்?

இளவழகன்: அண்ணாவுக்கு இளநீர் தரப்போகிறான்.

திருமணத்தரகர் ஒருவர் தமது உழைப்பினால் மாடிவீடு கட்டியிருக்கிறார்; கார் வைத்திருக்கிறார் என்றால் அது கேட்பவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம்.

அப்படி ஒரு ஆச்சரியத்தை ஏற்படுத்தியவர் தரகர் சின்னத்தம்பி. ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு திருமணத்தைச் செய் என்பார்கள். ஆனால் தரகர் சின்னத்தம்பியோ இரண்டு மூன்று பொய்களை மட்டும் சொல்லியே திருமணங்களை ஒப்பேற்றி விடுவார். பெண்களைப் பெற்றோர் மத்தியில் இவருக்கு ஒரு தனி மதிப்பு.

தொழிலைத் தொடங்கிய காலத்தில் தாமே தமது புத்திசாலித்தனத்தால் தயாரித்து ஜாதக் குறிப்புக்களை வைத்துக் கொண்டே சின்னத்தம்பி சம்பாதிக்கத் தொடங்கி விட்டார்.

ஊரில் எந்த எந்த வீட்டில் பெண்கள் திருமணப்பருவத்தில் இருக்கிறார்கள் என்பதை விசாரித்து அறிந்து கொள்வார். மெல்ல மெல்ல ஒவ்வொரு வீட்டுக்கும் செல்வார். 'உங்கடை மேளின்ரை வயதும் ஏறிக் கொண்டே போகுது. இப்படி அசமந்தமாய் இருக்கிறதே? என்பார். அதற்கு அவர்கள் 'என்ன சின்னத்தம்பி செய்யிறது காலம் வரேல்லையே' என்பார்கள். உடனே சின்னத்தம்பி 'நான் வந்திட்டாக் காலம் வந்திட்டுது எண்டது தான் கருத்துக்கண்டியளோ!' என்பார்.

எதிராளியை வாய் திறக்க விடாமலே தொடர்வார் 'தின்னவேலியிலை ஒரு டாக்குத்தர்ப்பெடியன் இருக்கிறான் அவனுடைய குறிப்பை கொண்டரட்டே'

எந்தப் பெற்றோர் தான் வேண்டாம் என்பார்கள் 'உடனே குறிப்பைக் கொண்டாருங்கோ' என்பார்கள்.

# ஏன்னைச் சிஷ்யனாக ஏற்றுக்கொள்



'அந்தடாக்குத் தர்ப்பெடியன்ரை குடும்பத்துக்குப் பழக்மான ஆள் ஒண்டு பக்கத்திலை இருக்குது. அந்தாளையும் கூட்டிக்கொண்டு நான் தின்னவேலிக்குப்போகவேணும். கலியாணம் முடிய முந்தி ஒரு சதமும் தர வேண்டாம்.' தந்தாலும் நான் வேண்டன். தின்னவேலிக்கு இரண்டுபேர் போட்டு வர போறவாற சிலவையும் சாப்பாட்டுச் சிலவையும் தந்தால்...' இழுப்பார் சின்னத்தம்பி; ஏதோ கொஞ்சம் கைமாறும்.

இப்படி ஒரு நாளில் ஊரிற் பத்துப் பேரிடம் காசு வாங்கி விடுவார். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவார். மனைவி சுவையாகச் சமைத்து வைப்பாள். வயிறுரச் சாப்பிட்டு விட்டு உறங்குவார். மாலையில் தான் தயாரித்து வைத்திருக்கும் போலிக்குறிப்பின் பிரதிகளை ஒவ்வொருவீட்டிலும் கொடுப்பார். சில நாள்களுக்கு இப்படியே தரகுத் தொழில் நடைபெறும். பின்பு வேறு பத்து வீடு, அடுத்து வேறு பத்து வீடு ஆளில்லாத போலி ஜாதகக் குறிப்பை வைத்துக் கொண்டே இவர் தொழில் நடக்கும்ஜாதகம் இவருக்கிருக்கும் போது என்ன கவலை. இப்படித்தான் இவர் திருவிளையாடல் புரியும் போது உண்மையான ஜாதகக்குறிப்பு ஒன்று இவரிடம் வந்து மாட்டிக்கொண்டது.

வழக்கம்போலச் சின்னத்தம்பி தொழிலுக்குப் புறப்பட்டார்

'சின்னத்தம்பி ஒரு உதவி' என்றபடி எதிரில் வந்தார் ஒருவர். வெயிலில் வேர்க்க விறு விறுக்க வந்ததால் வந்த கிழவருக்குசிரைத் மூச்சிரைத்தது. உதவுறதுதானே என்ரைதொழில் என்றார் சின்னத்தம்பி, வந்தவர் 'சின்னத்தம்பி என்ரைமோள் ஒருத்தனைகாதலிக்கிறாள்' சொல்லி முடிக்கு முன்னரே காதலிக்கிறாளா? காதலிக்கிறவைத்தானே தரகர்த் தொழிலுக்கே எதிரியள். அவைதானே எங்கடை பிழைப்பையே கெடுக்கிறவை' இந்த ஒண்டிலை நான் உதவேலாது கண்டியளோ' பின்வாங்கினார் சின்னத்தம்பி.

'சின்னத்தம்பி அவசரப்படாதை! என்ரை மேளின்ரை காதலன்ரை தேப்பன் தாய் காதல்த் திருமணத்தை ஒரு நாளும் விரும்பாயினம் காதலெண்டாலேஅவை காறித்துப்புவினம்காதல்கலியாணம்எண்டாலும் ஊரை உலகத்துக்குப் பேசிச் செய்யிற கலியாணம் எண்டுகாட்டிப்போட வேணும் மேளின்ரை குறிப்பைத்தாறன் என்று பரிதாபகரமாகக் கெஞ்சினார்கிழவர் சின்னத்தம்பிக்கு ஆனையிலை ஏறினபுளுகம் திருமணத்தை வெகுசுலபமாக

**எஸ் ஆர். சுந்தரம்**

ஒப்பேற்றிப் பெருந்தொகைத் தரகுப்பணத்தை மாப்பிளை பெண்பகுதியார் என்ற இரு பிரிவினடரிமும் கறந்து விட்டார் சின்னத்தம்பி. தரகர் சின்னத்தம்பியின் வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது அந்தத் திருமணம். அதற்குப்பிறகு உண்மையான ஜாதகக் குறிப்புக்களை வைத்துக் கொண்டே தொழிலில் வெளுத்துவாங்கத் தொடங்கினார் சின்னத்தம்பி,

சீதன அடிப்படையிலேயே சின்னத் தம்பிக்குப் தரகுப் பணம் கிடைத்தது. எனவே சீதனத்தின்ரேட்டைச்சின்னத்தம்பியே உயர்த்தத் தொடங்கினார். ஒரு லட்சம் காசு சீதனம் வாங்கிக் கொடுத்தால் சின்னத்தம்பிக்கு ஐயாயிரம் கொமிஷன். இரண்டுலட்சம் மூன்று லட்சம் என்று கூடக் கூடக் கொமிஷனும் கூடும், அதுமட்டுமல்ல,யாழ்ப்பாணத்தின் சீதன உயர்வுக்குச் சின்னத்தம்பி ஆற்றிய ஒப்பிலாப் பணிபற்றி எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்தில் ஆராவது ஆராய்ந்து டொக்டர் பட்டம் பெறுவதற்கான ஒருவாய்ப்பையும் சின்னத் தம்பி ஏற்படுத்திவிட்டார். பெண்களின் கண்ணீரைப் பற்றி எல்லாம் அவர் கவலைப்படுவதில்லை. தொழிலையே கண்ணாகக்கொண்ட ஒருவர் கண்ணீரைப் பற்றிக் கவலைப் பட்டால் தொழில் என்ன ஆகும்.

தமது அயாரா உழைப்பாலும் தொழில் நுட்பத்திறமையாலும் புகழின் எவரெஸ்டில் சின்னத்தம்பி கொடிநாட்டி விட்டார். ஓய்வுபெறலாமா அல்லது தொழிலைத் தொடருவோமா என்றுதீவிரமாகஅவர் சிந்தித்துக் கொண்டிருந்த ஒருமாலைப் பொழுதில் நவீன உடை அணிந்த டிப்ரொப் இளைஞன் ஒருவன் வந்தான் எல்லோரையும் போலவே அந்த இளைஞனையும் சின்னத் தம்பிவரவேற்ற உட்காருங்கள் என்று கதிரையைக் காட்டினார், இளைஞன்உட்காரவில்லை; மறுத்தான். அந்தக்காலத்தில் ஆசிரியருக்கு முன்னிற்கும் அப்பாவி மாணவனைப் போல் மிக அடக்க ஒடுக்கமாக நின்றான்.

(வளரும்)

# உமிச்சாம்பரின் பயன்பாடு

**பேராசிரியர்**
**வி. கே. கணேசலிங்கம்**

உமிச்சாம்பரின் பயன்பாட்டின் தரவுகள் இங்கு தரப்பட்டுள்ளன. மேலதிகத்தரவுகளையும் அறிவுரைகளையும் இலங்கைவிஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். சிறிய தொழிற்சாலைகளுக்கு இவை பெரிதும் பயன்படும்.

வருடா வருடம் இந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெருந்தொகையான உமி பெறப்படுகின்றது. கடந்த சில வருடங்களாக உமியின் இலாபகரமான பயன்பாட்டிற்கான பரிசோதனைகள் விஞ்ஞானிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்வேறு பயன்பாடுகள் அறியப்பட்ட போதிலும் கட்டிடப் பொருளாக உமி கணிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. போட்லண்ட் (Portland) சிமெந்துக்கான தேவை அதிகரிப்பினால் உமிச்சாம்பரைப் பயன்படுத்திக் குறைந்த செலவில் சிமெந்துப் பொருள்களை உற்பத்தியாக்குவதிலும். அதன் தரத்தை மேம்படுத்துவதிலும் இன்று விசேட அக்கறை காட்டப் படுகின்றது.

## உமிச்சாம்பர்

உமிச்சாம்பர் நிறையால் அண்ணளவாக உமியின் 20% மாகக் காணப்படுகின்றது. உமிச்சாம்பரில் உள்ள காபனின் (Corbon) அளவு மாறுபடலாம். இது உமியின் தன்மையில் தங்கியுள்ளது உயர்ந்தளவில் காபனைக் கொண்டுள்ள சாம்பர் கறுப்பு நிறமாக இருக்கும். குறைந்தளவில் காபனைக் கொண்டது சாம்பல் நிறமாகவோ மென்சிவப்பு நிறமாகவோ அல்லது வெள்ளை நிறமாகவோ காணப்படும். உயர்ந்த அளவில் காபனைக் கொண்டுள்ள வகை கரி (Char) என அழைக்கப்படும். இது 1.5%ற்கும் மேலான காபனைக் கொண்டிருக்கலாம்.

## சிமெந்துப் பொருளின் உற்பத்தி

குறைந்தளவிற் காபனைக் கொணடுள்ள உமிச் சாம்பர் எரிமலைச் சாம்பரின் இயல்புகளைக் (Pozzolanic properties) கொண்டிருக்கும். எனவே இந்த உமிச்சாம்பர் சிமேந்துப் பொருள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட முடியும். இந்த உற்பத்தியை 'Pozzolana' சிமெந்து என அழைக்கப்படும். போட்லண்ட் சிமெந்து உற்பத்தியாக்குவதற்கு உயர்ந்தளவு சக்தி தேவைப்படுகின்றது போட்லண்ட் சிமெந்துக்கான தேவை அதிகரித்துள்ளதால் உமிச்சாம்பரில் இருந்து குறைந்த செலவில் சிமெந்துப்பொருள் தயாரிப்பதற்கும் அதன் தரத்தை உயர்த்துவதற்கும் விசேட அக்கறை காட்டப்பட்டுள்ளது.

உமி மீதான ஆராய்ச்சிகள் பல மேற்கொள்ளப்படும் போதிலும்உபயோகிக்கப்படும் மூலப்பொருளின் வகையைப் பொறுத்து மூன்று விதமான உற்பத்தி முறைகளைக் குறிப்பிடலாம்.

1. அரிசி உமிச்சாம்பர். நீற்றுத சுண்ணும்பு (Ca O puick lime) அல்லது நீரேற்றப்பட்ட சுண்ணும்பு (Ca $[OH]_2$-hydrated lime) போன்ற பொருள்களைப் பொருத்தமான விகிதத்தில் சேர்த்துக் கலவையை வேண்டிய அளவு அரைக்கும் முறையை அடிப்படையாகக் கொண்டது. நீரேற்றப்பட்ட சுண்ணும்பைப் பயன்படுத்தித் தயாரிக்கும் போது இந்தச் சிமெந்தின் தரம் சிறந்ததாக இருக்கிறது வர்த்தக ரீதியிலான உற்பத்திக்கு இந்த முறை மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

உமியைத் திறந்த வெளியிலோ அல்லது சூளைகளிலோ எரிப்பதன் மூலம் அரிசி உமிச்சாம்பாரைப் பெற முடியும். உமிச்சாம்பரினதும், கல்சியப் பொருளினதும் (Calcarious material) கலவையை அரைப்பதற்காக ஒரு உருளை மில் (ball mill) பாவிக்கப்படல் வேண்டும்.

இங்ஙனம் தயாரிக்கப்பட்ட சிமெந்தின் வலு போட்லண்ட் சிமெந்துக்கும் மேசனரி (masonary) சிமெந்துக்கும் இடைப்பட்டதாகக் காணப்படும். உறுதியாகும் நேரம் பெரும்பாலும் போட்லண்ட் சிமெந்து உறுதியாகும் நேரத்தை ஒத்திருக்கும் இச் சிமெந்து நீர்க்கசிவைத் தடுப்பதற்கும் கால்வாய்களுக்குப் பூசுவதற்கும் அவற்றின் உட்புறப்படையாகச் சாந்து பூசுவதற்குமான சிறந்த நீர்த் தடுப்பு இயல்புகளைக் கொண்டுள்ளது இச் சிமெந்து அமிலத்தடுப்பு இயல்புகளையும் கொண்டுள்ளது.

உமியினையும் கல்சியம் காபனேற்றையும் சேர்த்து அக்கலவையை எரிப்பது அரிசி, உமி, கல்சியம் காபனேற்று (தூளாக்கப்பட்ட சுண்ணும்புக் கல்) நீர் ஆகியவை சேர்ந்த கலவையினால் உருண்டையாகத் தயாரிக்கப்படும். இது பின்னர் திறந்த எரிப்புக்கு உள்ளாக்கப்படும். இவ்வாறு எரிக்கப்பட்ட உருண்டைகள் உருளை மில்களில் விரும்பிய அளவுக்கு அரைக்கப்படும்.

உமி, களிமண் (Clay), நீர் ஆகியவற்றை உபயோகித்து உருண்டைகளாகத் தயாரிப்பது. உருண்டைகள் பின்னர் எரிக்கப்பட்டு அதன் பின் உருளை மில்களில் அரைக்கப்பட்டு சிமெந்தும் பொருளாக்குவதற்காகப் பொருத்தமான விகிதத்தில் நீரேற்றப்பட்ட சுண்ணும்புடன் கலக்கப்படும்.

## உமிச்சாம்பரின் ஏனைய உபயோகங்கள்:

உமிச்சாம்பர் (5.6kg), உமி (8. 2 kg) போட்லண்ட் சிமெந்து (42.7kg) நீரேற்றப்பட்ட சுண்ணும்பு (22 .7 kg) ஆகியவற்றைகொண்டு'கொங்கிறிற்'துண்டங்களை (Concrete Blocks) உருவாக்க முடியும். சேர்க்கப்படும் நீரின் அளவு அந்தக் கலவையின் ஈரத்தன்மையிலும், சிமெந்துக்கான மொத்த விகிதத்திலும் தங்கியிருக்கும்.

மணல், சுண்ணும்பு, அரிசி, உமிச் சாம்பர் ஆகியவற்றை உபயோகித்துச் செங்கற்கள் (bricks) தயாரிக்க முடியும். கல்சியத்தின் பல்லின சிலிக்கேற்றுகளால் ஆன (Calcium hetro) Silicates) செங்கற்களையும் (Silicior) உமிக்கரியைப் பயன்படுத்தித் தயாரிக்க முடியும். இந்தக்கரி பூச்சிகளுக்கு ஒரு தடைப்பொருளாக அமைகின்றமையால் செங்கற்களைப் பூச்சிகள்தாக்கமாட்டா. இவை வெப்பத்தையும் குளிரையும் தாங்கக்கூடியதாக இருக்கும். இவை உயர் அழுத்த வலுவையும் (Crushing Strength) $[120 kg/cm^2]$ கொண்டிருக்கும். கொங்கிறிற்றின் உயர் அழுத்த வலு [Compressive Strgth[ உமிச்சாம்பரில் உள்ள வடிவமற்ற சிலிக்காவினால் ஏற்படுகின்றது. இந்த கொங்கிறீற் துண்டங்களும் செற்கற்களும் மிகவும் குறைந்த நிறமுடையவை யாவும் கையாளுவதற்கு எளிதானவையாகவும் இருக்கின்றன.

(Retractory matelal) உமிச்சாம்பர் உலகத்தின் பல பாகங்களிற் தடுப்புப் பொருளாகப் பயன்படுகிறது. பிரதான மூலப்பொருளாக உமிச்சாம்பரைப் பயன்படுத்தி அதனைக் களிமண், கல்சியத்தாலான பொருள்கள்(Calcarious material) சிமெந்து என்பவற்றுடன் கலந்து எரிப்பதன் மூலம் தடுப்புப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியும். இவ்வாறான தடுப்புப் பொருள்களிற் பெரும்பாலானவை $1200^0$c வெப்பநிலைக்குமேலும் உறுதியாக இருக்கும். இவற்றின் உற்பத்தி எகிப்து, ஜேர்மனி, ஜப்பான் முதலிய பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றது. வெவ்வேறு நாடுகளில் இதற்கு வெவ்வேறான பெயர்களும் வழங்கப்படுகின்றன. இந்தத் தடுப்புப் பொருள்களின் ஏனைய

14ஆம் பக்கம் பார்க்க

# வையகம் போல் வாழ்க!

பொதியமலை யூற்றற் புதச்செவ் வியநன்
னிதியமலர்த் தீந்தமிழ் நீர்மை-மதியணிசெய்
பண்டை யிலக்கியப் பண்டித மாமணியிற்
கண்டிங் குயர்ந்தனர்ம கார்.
முறைவழி மூதறிஞர் முன்னோர் கொடையாம்
நிறைமொழி வண்மை நெடிதே-இறைஒளி
தேருநுண் மாண்புலச் சேயோன் கணபதிப்
பேருணன் கோங்கினதோர் பேறு.
(சேயோன் கணபதி – கணபதிப்பிள்ளை)
சொல்லியற் செம்மைசால் தூய்மை சுவைக்கவெழில்
மெல்லியற்கன் னித்தொனி மேவு முறை-பல்லியற்
பண்புடன் கூடற் பழம்பலகைச் சங்கநெறி
வண்புலமை செய்நா வலன்.
உரையுவப்போர் உள்ளம் ஒளிமிளிர ஆய்வு
நிரையுறச் சிந்தை நிகழ்வில்—விரையவிழ்
செந்தமிழ்த் தேனுகரச் செய்பண் டிதமணி
தந்தகலை யின்னமுது தான்.
வாழிய பண்டித மாமணி செந்தமிழ்
ஆழியில் ஆர்கலை யாய்நிதி-வாழிய
தெய்வ வளாகத் திருநெல்வே லிக்குரவ
வையகம் போல்வாழ்க வான்.

ந. சிவப்பிரகாசம்

# வாழ்த்து

சிலசொல்லிப் பலவுணர்த்தும்
திருக்குறளின் தன்மையவாய்
நலவுரைகள் பலநவின்று
நலங்காட்டி நன்னூல்கள்
பலபடைத்த பண்டிதமா
மணியவரின் பண்புகளை
உலகுவப்ப எடுத்துரைக்கும்
உந்தமமாம் மலர்வாழி.
தமிழ்ப்பெரியார் தனங்கிளப்புத்
தந்ததவப் பேறுடையார்
அமிழ்தெனவே இனிதுரைக்கும்
ஆற்றல்மிகு புலமைமிக்கார்
இமிழ்கடல்சூ ழுலகினிலே
இவர்பெருமை எடுத்தியம்பும்
தமிழ்க்கலைகள் வளர்க்கும்பல்
கலைப்புலவோர் வாழியவே

மு. வைத்தியலிங்கம்

# வணங்குதற்குரியர்

கணபதிப் பிள்ளை படைத்தகட் டுரைகள்
களஞ்சிய மாய்வரும் களிப்பு,
நினைவினைப் போற்ற மலர்வரு கின்ற
நிறைவு, மற் றிங்குள அறிஞர்
அனைவருங் கூடிப் பண்டித மணியின்
அருமைகள் பெருமைகள் எல்லாம்
இனிவருந் தமிழர் தலைமுறைக் குணர்த்த
எழுந்ததால் வந்தபுத் துணர்ச்சி!
நாவலர் பெருமை நாட்டுதல் ஒன்று,
'நமக்கென வழிவழி யிந்த
ஈழநன் னாட்டில் வருமொரு மரபுண்'
டெனறிறு வுதல்பிறி தொன்று
நீள அத் துவித சிந்தனை நுழைந்து
நிமிர்ந்தமை ஒன்று-இவை மூலம்
வாழுமா மனிதர் பண்டித மணிநாம்
வணங்குதற் குரியபே ரறிஞர்!

சோ. ப

# நாவலர் அடிச்சுவட்டில்

கசடறக் கற்று கற்றதோடு நின்றுவிடாது அவ்வாறு ஒழுகிய சிலப் பெருந்தகை நமது மதிப்பிற்குரிய பண்டிதமணி ஐயா அவர்கள். இந்த இருபதாம் நூற்றுண்டிலும் எல்லோரும் போற்றும் உயந்த பண்புடையவராக வாழ்ந்தார். ஆசிரியகலாசாலையே இவரது சேவையாலுயர்ந்தது. பலர் பண்டிதராஞர்கள் இவர் 86 ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்து ஆயிரம் பிறை கண்ட பூரண ஆயுளைப் பெற்றமை ஈழத்து மக்கள் செய்த தவபேறும். இவரது இலக்கிய ரசிகத்தன்மையும் மிருதுவான பேச்சும் உள்ளத்தை என்றும் விட்டு நீங்கா.

மானின் சிஷ்ய பரம்பரையைப்பிரகாசிக்கச்செய்தவர் நாவலரின் அடிச்சுவட்டை அறிந்து அதை நம் நாட்டில் அனைவரும் அறிந்து கொள்ளவும் நாவலரின் பெருமையையும் நிலைபெறக் கூடியதாக வாழ்ந்தும் காட்டினுர்.

இவரது அறிவு ஆற்றல் நுண்ணறிவுக்குச் சான்று இவர் எழுதிய இருபதிற்கு மேற்பட்ட நூல்களே யாகும். இவர் நூல்களை வெளியிட்டு அனைவரும் பயன் பெறச்செய்வதே நாம் அவருக்குச் செய்யும் செய்நன்றியாகும் அந்நூல்களை வாசித்து அறிவைவிசாலமாக்குவது சாலச் சிறந்ததாகும். காலத்திஞல் உடம் பழிந்தாலும் காலத்திஞல்

பிரதிஷ்டாபூஷணம் சிவாகமஞானபானு
**சிவ ஸ்ரீ சுவாமிநாத பரமேசுவரக் குருக்கள்**

இலக்கியமாயினும், சித்தாந்த சாஸ்திரமாயினும் கேட்போர் ஐயம்நீங்கி ஆழமான அறிவைப்பெறுவர். இவ்வளவு சிறப்பும் அவரிடம் மேலோங்கி இருந்தமை அவரின் குரு பக்தியேயாகும். நாவலர் பெரு

அழியாத இவ்வரிய அறிவு நூல்கள் நம் அனைவர்க்கும் பயன் நல்க அன்னை நயினை நாகபூஷணி அருள் பாலிக்க வேண்டிக் கொள்கின்றேன். உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் லனைத்தே புலவர் தொழில்.

ஏறத்தாழ அரைநூற்றுண்டுக்கு முன்னர்சில புண்ணியாத் மாக்களின் பாத தூளி பட்ட மகத்துவத்தால் திருநெல்வேலிச் சைவ வித்தியாசாலை செழிப்புற்றுக் கொடிகட்டிப் பறந்த காலம்.

நான் மூன்றும் வகுப்பு மாணவன்.


பாடசாலையில் பெற்றூர் தின விழா ஒன்று அதி விமரிசையாகக் கொண்டாடப் படுகின்றது.

பல்வேறு கலை நிகழ்ச்சிகளோடு, பண்டிதமணி அவர்களின் சொற்பொழிவு விசேட நிகழ்ச்சியாக இடம் பெறுகிறது. அப்பொது பண்டிதமணி அவர்கள் பண்டிதமணி 'ஆகாத' காலம்தனிப் பண்டிதர்.

பண்டிதமணி அவர்களுக்குச் சிறுவர்களிடம், சின்னஞ்சிறிய பிள்ளைகளிடம் பெரும் நம்பிக்கையும் அக்கறையும். அதஞல், பிள்ளைகளை நோக்கியே அவர்களது சொற்பொழிவு நிகழ்ந்தது. வளர்ந்தோருக்கும் அச்சொற்பொழிவு ஓர் உந்நத பாடமாக, விருந்தாக அமைந்திருந்ததை இன்று என்ஞல் உணர முடிகிறது.

''தீராத விளையாட்டுப் பிள்ளை இதுவே அவர்கள் எடுத்துக்கொண்ட பொருள் ஓடி விளையாடு பாப்பா பாடியது யார்?'' இல் தொடங்கி, பாப்பா சமன் பிள்ளை எனச் சொல்லி, ''விளையாடுகிற பிள்ளைகளிலே பாரதியாருக்கு நிரம்பிய பிரியம்'' காட்டி, ''தீராத விளையாட்டுப் பிள்ளை ஒருவன். அவன் பெயர் கண்ணன்'' என்று கதை சொல்லத் தொடங்ஞர்கள் பண்டிதமணி அவர்கள்.

கண்ணன் கதைகளை, அவனுடைய லீலைகள் குறும்புகளையெல்லாம் படித்திருந்தோம் எமக்கு வாய்த்த ஆசிரியர்களும் சொல்லித் தந்தவர்கள் நல்ல நல்ல கதைகள் மீண்டும் மீண்டும் படிக்கலாம், கேட்கலாம். தெவிட்டா. பலாப் பழம் அறியாதார்க்குத் தொட்டாலே உறுத்துகிற



முள் நிறைந்த ஒரு பண்டம். அறிந்தவர்க்கு அது சுவை நிறைந்த சுளைகளையுடைய பழம் ஆராய்ந்தவர்க்குத் தேன் சொட்டுகிற, சுளை சுளையாய்ச் சுவை கொட்டுகிற கனி.

பண்டிதமணி அவர்களின் கைகளில் பாரதியாரின் ''தீராத விளையாட்டுப் பிள்ளை''க்குப் புதிய புதிய உருவங்கள் தோன்றின.

முள் நிறைந்த தடலைப் பிரித்து, குந்துகளைந்து, சுளைகளை எடுத்து அவற்றின் தேன் துளிகளைத் தம் சொற்களால் எமது உயிர், வரை சுவைக்கச் சொரிந்து எம்மைச் சொக்க வைத்தார்கள் அன்று பண்டிதராக இருந்த பண்டிதமணி அவர்கள்.

ஒவ்வொரு சொற்ருெடருக்கும், வரிக்கும், செய்யுளுக்கும் முதலில் ஒரு பொருள். பின்னர் சிந்திக்க வைக்கும் வேருெருபொருள் சிறுவராகிய எம் மனத்திலேயே அப் பொருள்கள் பசுமரதாணியாகின.

''தீராத விளையாட்டு'' எப்படி, எப்படி யானது ''தெருவிலே பெண்களுக்கு ஓயாததொல்லை'' யில் தெரு எது, பெண்கள் யார், தொல்லை என்ன என்பவற்றையெல்லாம் சிறுவருக்கும் தெளிந்ததேன் பாகு போலாக அள்ளி அள்ளி வழங்கிஞர்கள்.

''தின்னப் பழங்கொண்டு வருவான்'' இதில் பழம் எது, தின்னுதல் எப்படி என்பவற்ருேடு, ''பாதி தின்கின்றபோது தட்டிப் பறிப்பது'' ஏன் என்பவற்றுக்கெல்லாம் பண்டிதமணி அவர்கள் தந்த விளக்கம்-பொருள் அவர்களுக்கே உரிய வழியில்-இலக்கிய வழியில் அமைந்திருந்தமை காணச் சின்ன வயதிலேயே பாக்கியம் கிடைத்தது இன்றும் உள்ளே சுவைக்கிறது

இது நடந்தது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர். அந்தக் காலத்திலேயே மருளைப் பொருள் செய்

# இலக்கிய ரசனை

1936ஆம் ஆண்டிலே இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலே இலத்தின் கிரேக்க மொழிகள் கற்பிக்கும் துணைப்பேராசிரியர் ஒருவர் இருந்தார். அவரிடத்திலே பல வருடமாகப் பயன்படுத்திய குறிப்புக் கொப்பிகள் இருந்தன. தொடக்கத்திலேயே செப்பமாக எழுதிய குறிப்புக்கள். ஆதலால், தொடர்ந்து எல்லா வருடங்களுக்கும் அதே குறிப்பைப் பயன்படுத்தி வந்தார். இவருக்குக் கல்வி கற்பித்தல் முறையும் தெரியும். ஆனபடியால் இடைக்கிடை இரசமான பகிடியும் விடுவார். மாணவர் சிரித்துக்கொண்டு கவனஞ் செலுத்துவார்கள். அவருக்கும் நல்ல மதிப்புண்டு.

ஒருநாள் தற்செயலாகப் பேராசிரியரின் குறிப்புக் கொப்பிகள் மாணவரின் கையில் சிக்கிக்கொண்டன. அவர்கள் மறைவான ஓர் இடத்துக்குக் கொண்டு போய் பக்கம் பக்கமாக விரித்துப்பார்த்தார்கள், ஒவ்வொரு விடயம் எடுத்தாண்டு முடிவில், ''பகிடி'' என்று எழுதியிருக்கும். இப் அடுத்த விடயம் எடுத்தாண்டுமுடிவில் ''பகிடி'' என்று எழுதியிருக்கும், இப்படியாக ஒருமணி நேரப் பாடத்திற்கு ஐந்து பகிடிகள் இடம்பெற்றிருக்கும்.

இதுவே மாணவருக்குப் பெருஞ் சிரிப்பை விளைவித்தது எப்படியோ குறிப்புக் கொப்பிகள் பழையபடி இருந்த இடம் போய்விட்டன. அடுத்தநாள் பேராசிரியர் வகுப்புக் குறிப்புக் கொப்பிகளுடன் வந்தார். பாடம் தொடங்கி ஒரு விடயம் முடிகிற நேரம். மாணவர் தாமாகவே ''பகிடி'' எனத் தொடங்கி விட்டனர். சிலர் 'பழம் பகிடி' என்றனர். ஆசிரியரும் ஒரே கூட்டம் பகிடியை வருடாவருடம் சொல்லி சொல்லிவந்தது பிடிபட்டு விட்டது

அலருடைய பெருமைக்கு இழப்பு வராமல் புதிய குறிப்புக் கொப்பிகளையும் புதிய பகிடிகளையும் ஆயத்தஞ் செய்யத் தொடங்கிஞர். இந்தத் தருணத்தில் பழைய மாணவர் புதிய மாணவரைச் சந்தித்தனர். ஒரு புதிய இலக்கிய இரசனை நிகழ்ந்தது. குறிப்புக்களை ஒப்பிடுகையில் பகிடிகள் செயற்கையாகப் புகுத்தப்பட்டிருந்தன. எடுத்துக் கொண்ட பாடத்திற்குப் பொருத்தமில்லாதன வாகவும், சமயத்திற்கு மட்டும் சிரிப்பைக் கிளர்த்தக்கூடியனவாகவும் இருந்தன.

பண்டிதமணியின் பகிடிகள் மனதில் அழுத்தமாகப் படிவன. எடுத்த பொருளுடன் பின்னிப் பிணைந்து இருப்பன. எந்தப் பொருளையும் அவருடைய பகிடிக் கூடாக மீள மீள இரசிக்கலாம். இந்த இரசனை, புத்தக வாயிலாகப் படித்து உணருவதன்று. எடுத்த பொருளைப் படித்து விட்டு அதனைக் கற்பனை செய்து ஒப்புமை தேடித்தான் தான் சுயமாக இரசிப்பதே உண்மையான இரசனை. ஐயா இரசித்தார். அதை

## கோவைவாணன்

எங்களுக்கும் சுவைக்கத் தந்தார்.

இந்த விஷயத்தில் ஐயாவுக்கு ஐயாவே ஒப்பாவார். அச்சில் இன்னும் வாராத பாட்டு ஒன்றை இதுகால வரையும் நானே வைத்து இரசித்துக்கொண்டிருந்தேன். ஐயாவுக்குத் தொய்வூசி போடுபவர், டாக்டர் எஸ். சுப்பிரமணியம்( P S) அவர்கள் இவர் எனது உறவினர் என்று ஐயாவுக்குத்

# பண்டிதமணி சில நினைவுகள்

## சு. இராஜநாயகன்

யாது பொருளைப் பொருள் செய்கிற பண்டிதமணி அவர்களை, அவர்களது சிந்தனைகளை இன்று நாம் அண்ணாந்து பார்ப்பதும் இயலுமோ?

பண்டிதமணி அவர்களை ஓரளவாவது அறிந்திராத இடம்ஒன்றுண்டாயின் அது தமிழ் கூறும் நல்லுலகின் ஒரு பகுதியாய் இராது.

நக்கீரர் அடியொற்றி வந்த நாவலர் பரம்பரையினர் பண்டிதமணி அவர்கள் அநீதியைக் கண்டு சீறுகிற பொய்யடிமையில்லாப் புலமை அவர்களது தம் பரம்பரையினரின் தமிழ்த் தொண்டுகளை இருட்டடிப்புச் செய்த-செய்கிற ஒரு கூட்டம் தமிழகத்திலே இருப்பது கண்டு எள்ளி நகையாடி அக்கூட்டத்தின் 'பம்மாத்து'களை அம்பலப் படுத்தியவர்கள்.

ஆயினும், அக் கூட்டத்திலே சிலர் யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொள்ளும்போதெல்லாம்,—சைவர்கள் எக் கருமத்தைத் தொடங்கும் போதும் விநாயகரைத் தொழுதுதொடங்குவது போல—பண்டிதமணி அவர்களைக் காணவோ, விசாரிக்கவோ தவற மாட்டார்கள்.

'கணபதி அண்ணை' என்றோ, 'பண்டிதமணி ஐயா' என்றோ அழைப்பதையும் குறிப்பிடுவதையும் கேட்கிற பலசந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன.

ஒரு நிகழ்ச்சி:

நான் நேரிலே கண்டதும், கேட்டதும்.

1960-ம் ஆண்டில் என நினைவு, நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலில் திருவிழா. இராத் திருவிழா ஒன்றில் பண்டிதமணி அவர்கள் சொற்பொழிவு.

பண்டிதமணி அவர்களது சீடரும், எனது குருவுமாகிய திரு. சம்பந்தன் அவர்களும் வேறு சிலரும், நானுமாகக் காரில் சென்று கோயில்முன்னுள்ள குருக்களின் வீட்டில் இறங்கினோம். கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களும் அங்கே இருந்தார்கள்.

இரட்டிப்பு மகிழ்ச்சி.

கோயில் மண்டபத்திலும் வீதிகளிலும் வெகு சனத்திரள். பண்டிதமணி அவர்களது சொற்பொழிவு தொடங்கிற்று, முதல் நிமிடமே மக்கள் செவியமுது அருந்துகிறவர் போல மௌனிகளாயினர்.

பண்டிதமணி அவர்கள், கண்ணனிடம் கீதோபதேசம் பெற்ற அருச்சுனனைக் கண்ணப்பராக்கிக் காட்டுகிறார்கள். தமிழ் அமுதாகி எங்களுள்ளே இறங்கிக் கொண்டிருக்கிறது, முக்கால்மணி நேரம்.

ஒரு கணம், நீரருந்தப் போலும், பண்டிதமணி அவர்கள் தமது பேச்சினை இடைநிறுத்துகிறார்கள். இதனால் பேச்சின் பிடியிலிருந்து விடுபட்ட திரு. சம்பந்தன் அவர்கள் திரு. ஜகந்நாதனைக் கேட்டார்; (கேட்கக் கூடாத கேள்வி)

'பேச்சு எப்படி?'

(எனக்கு எரிகிறது. பண்டிதமணி பேச்சுக்கு நல்ல ஓர் உரைகல்!)

கி. வா. ஜ. படித்தவர். எம். ஏ, பி, ஓ எல், வித்துவான். தமிழில் நன்கு எழுதுகிறவர். எழுதிக்குவித்தவர். அவ்வாறானவர் அளித்த பதில் (அது பதிலா?) என்னைத் திணற வைத்தது.

'ஏனையா, உங்க ஊரிலே, குற்றியலுகாரம் இல்லையா? 'அன்பு' எங்கிறதை 'அன்பு' என்று கூறுகிறீர்களே!'

இதை நான் நினைவு கூரக் காரணம் தமிழகத்தவர் இருட்டடிப்புக்காரர் எனக் காட்டுவதல்ல. பலருக்குத் 'தமிழ்' ஒரு கருவி: அது காரியமல்ல; பண்டிதமணி அவர்களுக்குத் 'தமிழ்' கருவியல்ல, காரியம் என்பதைக் காட்டவே.

'பண்டிதமணி அவர்களின் யாகம்என்னுதலிற்றோ வெனின் தமிழ் நுதலிற்று.'

இன்னும் ஒரு நிகழ்ச்சி.

ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒருநாள், வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

திருவாளர்கள்; அம்பிகைபாகன், ஸ்ரீநிவாசன், சம்பந்தன், செந்திநாதன், சு. வேலுப்பிள்ளை முதலிய பல பிரமுகர்கள் கூடியிருந்தார்கள் என நினைப்பு. ஐம்பது அறுபது பேர் வரை இருந்திருப்பார்கள். கூட்டம் அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்க ஆதரவில் நடைபெற்றதாயிருக்கலாம்.

நிகழ்ச்சிநிரலில் ஒரேஒரு விடயம் மட்டுமே இடம் பெற்றது.

'பண்டிதமணி அவர்களுக்குக் கலாநிதிப் பட்டம்' கூட்டம் காலை தொடங்கி நண்பகல்வரைநீண்டுவிட்டது இடையில் புறப்பட்டுப் போய்ச் சபையைக் குழப்புகிறவர் எவரும் அங்கிருக்கவில்லை.

பண்டிதமணி அவர்களுக்கு இலங்கைப் பல்கலைக் கழகம் 'கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கவேண்டும் என்ற கருத்தை முன்வைத்துப் பலரும் பலவாறு பேசினார்கள்.

சு. வே. யும், நானும் கடைசி வாங்கில் இருந்தோம். (நாலைந்து தடவைகள் அவர் எனக்கும் தாம்பூலம்தந்துதவினார்).

பேச்சுக்களிலிருந்து சில முக்கிய விடயங்கள் தெளிவாகின.

- பண்டிதமணி அவர்களின் சீடர்கள் பலர் பண்டிதமணி அவர்களது பெயரை உச்சரிப்பதே அபசாரம் என எண்ணுகிற அளவுக்குப் பக்திகொண்டவர்கள்.
- பண்டிதமணி அவர்களோடு சில, பல தடவைகள் உரையாடிய தன் மூலம் அவர்கள் மேல் மிக்க மதிப்பும் பக்தியும் கொண்டவர் பலர்.
- பண்டிதமணி அவர்களுடைய பேச்சுக்களைக் கேட்டும், எழுத்துக்களைப் படித்தும் அவர்கள் மேல் பெருமதிப்புக் கொண்டவர் பலர்.

இவர்கள் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும், குடாநாட்டுக்கு வெளியே சீவன நிமித்தமும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இவர்கள் எல்லோரும். 'பண்டிதமணி அவர்களுக்குக் கலாநிதிப் பட்டம் எப்பொழுதோ வழங்கப்பட்டிருக்க வேண்டும்; இன்னுந் தாமதமேன்?' என்ற ஏகோபித்த கருத்தைத் தெரிவித்தனர்.

கருத்துரைகள் நண்பகலை

14ஆம் பக்கம் பார்க்க

பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபை ஆதரவில்

**இன்று பண்டிதமணி நினைவு மலர்**

வெளிவருகிறது

மலர்க் கட்டுரைகளில் இது ஒன்று

தெரியும். அவருக்குக் கீழ் வேலை செய்தவர்கள் பலருள் என் தாய்மாமனும் ஒருவர். இது ஐயாவுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், டாக்டருக்கும் இவர்களுக்கும் இடையிலான பேதத்தையும், உபசரித்து மரியாதை செய்யும் தாரதம்மியத்தையும் ஐயா கண்டு மனம் வருந்தி இலக்கியக் கண்ணால் கண்டு இரசித்திருக்கிறார்.

அப்போது அடியேன் மட்டக்களப்பில் மாகாண வித்தியாதிகாரி. எனக்குத் தன் நிலைமையை அறிவித்தால் நன்றாக இரசிப்பேன் என்று அவருக்குத் தெரியும் என்கிறார் ஐயா பாருங்கள்.

சாந்தஸ்வரூபியும் மகாப் பிரபுவும் ஆகிய டாக்டர் எஸ் சுப்பிரமணியம் அவர்களின் வைத்தியசாலையிலே உத்தியோகத்தர்களின் படாடோபங்கண்டு பாடியது.

பாற்கடல்மீன் பாசியையே
யுண்ணுங்கீழ் பால்கள்தாம்
மேற்படுவார் தம்பக்கல்
மேவியுமென்?
கோற் றேடிகேள்
கள்ளார் மலரருகே
காத்துக் கிடந்தாலும்
முள்ளாருக் குண்டோ
முருகு.
தங்களன்புள்ள
சி. கணபதிப்பிள்ளை
திரு. சை ஆ. க சாலை
11-01-51

கந்தப்பொடி வாசனையன்றோ கமழ்கின்றது! இந்தப்படி வாய்ந்த வாரும் ஜகத்திரே!

இங்கே "காத்துக்கிடந்த முள்ளார்" என்பதைப் பலமுறை படித்து இரசிக்கத் தோன்றுகிறது, இவர் இந்தப் பாட்டில் குறிப்பிடும் பாத்திரங்களிடம் இப்பாட்டைப் படிக்கக் கொடுத்தால் அவர்கள் எல்லோருமே தீர இரசிப்பர் ஆனால் தற்போது யாருமே உயிருடனில்லை.

# உண்மைச் சமயமும் கட்டுச் சமயமும்

உண்மைச் சமயம் ஒருவன் வாழ்க்கையிற்செறிந்து அவன் அறிவைத் தூண்டி நடத்தும்இலட்சியம்(ideal) ஆகும். இஃது ஒருகால் அவன் அறிவில் நன்கு வெளிப்பட்டு மிகுந்த ஆர்வத்தையூட்டிதொழிலைநடத்துவிப்பதுமுண்டு; அன்றி அறிவில் நன்கு விளங்காது நின்று அவனை இயக்குவதுமுண்டு. இனி, உலகத்து மக்கள் வாழ்க்கையைத் தூண்டும் இலட்சியங்களுள் பொருள், போகம், புகழ் எனவும் அழகு, உண்மை, நன்மை எனவும் பெரியோர்களால் வகுத்துக் கூறப்படும். இவை யாவும் எல்லோர் வாழ்க்கையினுங் காணப்படினும், இவற்றுளொவ்வொன்றுஒவ்வொருவர் வாழ்க்கையினும் சிறந்து காணப்படுதலின், அது அதுவே அவரவர் இலட்சியமெனப் பொதுவகையாற் கூறப்படுதல் தகும். அன்றியும் பெரிதும் பொருளையே இலட்சியமாகக் கொண்டவர் சமயம் இதுவெனவும், ஏனைப்புகழ், அழகு, உண்மை, நன்மை என்னும் இவற்றை இலட்சியமாகக் கொண்டவர் சமயம் இதுவெனவும் வரைந்து ஓதப்படுதலும் தகும். இவ்விதம் ஒவ்வொருவர் வாழ்க்கையையும் தூண்டும் இலட்சியங்களைக் கொண்டு அவரவர் சமயத்தை வரையறுப்பதே சிறந்த முறையாகும்.

நன்றி **வாலிபதூதன் (வயாவிளான்) 1934**

உலகத்துப் பொருள், போகம், புகழால் வரும் சாதாரண இன்பங்களைத் தம் இலட்சியமாகக் கொள்பவர்கள் சமயம் உலோகாயதம் எனப்படும். அறிவைத் தேடுவதிலும் அது வாழ்க்கையிற் பயன்படு மாற்றை ஆராய்வதிலும் கருத்துள்ளவர்கள் சமயம்புத்தம் எனப்படும். கோபம் மயக்கம் முதலிய குணங்களைத் திருத்தி நல்வழிப்படுத்துவதில் கருத்துடையவர்கள் சமயம் சமணம் எனப்படும். யாம் உலகத்து வாழக்கடவேம் எனும் உணர்ச்சி நீங்கி நமக்கு ஒன்றுஇலமென்னும் சிறுமைதப்பி, தாழ்வாகிய தன்மையினோடும் நிற்கும் நிலையினர்கள் சமயம் சைவ சமயமெனப்படும்.

'வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமைதப்பித் தாழ்வெனுந் தன்மையோடுஞ் சைவமாஞ் சமயஞ்சாரு மூழ் பெற லரிது...'

என்பது சிவஞானசித்தியார். எனவே இது சமயங்களுட் டலையாய தென்பது பெறப்படும். இவ்விதம் வாழ்க்கையின் இலட்சியம் பல்வேறு வகைப்பட்டு வருதலிற் சமயங்களும்பலவேறு வகையினவாகும்.

மகான் எனப் பண்டிதமணி மிக்க ஆராமையோடுபாராட்டும்பொ. கைலாசபதி அவர்களின் கட்டுரை ஒன்று இங்கு மறுபிரசுரமாகிறது.



ஈண்டுக் கூறப்பட்ட உலோகாயதம், புத்தம், சமணம், சைவம் எனும் சமயங்கள் வாழ்க்கையைத் தூண்டும் இலட்சியங்களாய உண்மைச் சமயங்களன்றி அவ்வப்பெயர் கொண்ட கட்டுச் சமயங்களல்ல.

இனிக்காலத்துக்குக் காலம் ஆண்டாண்டு தோன்றும் பெரியவர்களது அனுபவங்களையும் கடவுள், ஆன்மா, உலகம் முதலிய விஷயங்களைப்பற்றிப் பலர் செய்த ஆராய்ச்சிகளையும், உயர்ந்த அனுபவங்களைப் பெறுதற்குச் சாதனங்களாகக் காணப்படும் பயிற்சிகளையும் ஆதாரமாகக் கொண்டு எழுந்த புத்தசமயம் கிறிஸ்தவ சமயம்' முகமதுசமயம், சைவ சமயம் எனச் சாதாரணர்களால் வழங்கப்படுஞ் சமயங்கள் கட்டுச் சமயங்களெனப்படும். இவை கட்டுச் சமயங்களெனப் படுவது ஆங்காங்குள்ள பெரியோர்கள் பெரும்பாலாரது நன்மை நோக்கிக் கொள்கைகளையும் பயிற்சிகளையும் வகுத்துக் கட்டுவதனுலென்க. இவ்விதங் கட்டப்படும் கட்டுச்சமயக் கொள்கைகள் கிரியைகள் என்பவற்றுள் ஒரு சிலவற்றையே கொண்டு நடந்து வருபவர்கள் அவ்வச் சமயத்தவர்களெனப்படுகின்றனர் உதா

14ஆம் பக்கம் பார்க்க

# யாழ். சைவ சித்தாந்தக் கல்வி மரபு 1960 - 1985

# நாவலர் அவர் வழிவந்தோர் பணி

## திருமதி சு. இராமநாதன்
B. A., Dip - in - Ed.

யாழ்ப்பாணத்தில் 16-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுந்த விழிப்புணர்ச்சி தனிப்பட்ட அறிஞர்களது செல்வாக்கை மையமாகக் கொண்டிருந்தது. இவர்கள் அந்நியரது அரசியல் ஆதிபத்தியத்தை ஏற்றனர்; எதிர்க்கவில்லை. ஆயின் சமய கலாசாரத்துறைகளிலே தனித்துவத்தைப் பேண விழைந்தனர். கிறித்துவ சமயம் பரவுதலைத் தடை செய்து சைவ சமயக் கோட்பாடுகளை மீண்டும் நிலை நிறுத்துவதையே இவ்விழிப்புணர்ச்சி பிரதான குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

1842-ல் வண்ணார்பண்ணையிலுள்ள சைவ உயர்ந்தோர் குழாம் கிறிஸ்து மதத்தவரின் மதமாற்றும் போக்கினைத் தடுத்து நிறுத்திச் சைவசமயப் பாடசாலை ஒன்றை நிறுவவும் அச்சியந்திர சாலை ஒன்றை நிறுவிப் பத்திரிகை ஒன்றை வெளியிடவும் முனைந்தது. 1842-09-30-ல் இதற்கான ஒன்று கூடல் வண்ணார் பண்ணையில் நடந்ததாக 1842.10.20-ம் தேதி வியாழக்கிழமை மோனிங்ஸ்ரார்'' (Morning Star) இதழில் குறிப்பொன்று காணப்படுகிறது. இவ்வொன்றுகூடலும் தொடர்ந்து நடந்த சில ஒன்றுகூடல்களும் வண்ணார் பண்ணையைச் சைவசமய விழிப்புணர்ச்சியின் கேந்திர ஸ்தானமாகவும் நாவலரை இவ்வியக்கத்தின் நாயகராகவும் ஆக்கின.

1847-12-31-ல் வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலில் நாவலர் தமது முதலாவது சொற்பொழிவை ஆரம்பித்தார். 1848.01.13 தேதிய மோனிங்ஸ்ரார் (Morning-Star) இதழில் நாவலரின் முதற் சமயச் சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு வெளிவந்தது. நாவலர் எந்த அடிப்படையில் தமது சமயப் பணியை மேற்கொள்ளவிருக்கிறார் என்ற குறிப்பை அச்சொற்பொழிவிற் புலப்படுத்தியுள்ளார்.

''பாதிரிகளின் பசப்பு வார்த்தைகளுக்குப் பலியாகும் நமது சமயத்தவருக்கு நமது சமயத்தின் மேன்மையையும் கோட்பாடுகளையும் உணர்த்தவேண்டும்'' என்பதே நாவலரின் அன்றைய சொற்பெருக்கின் சாரமாகும். மற்றொரு விதமாகக் கூறின் சைவசித்தாந்தக் கல்வி மரபைப்பேணி மேலும் அது தொடர வழி வகுப்பதே நாவலரின் குறிக்கோளாயிருந்ததெனலாம்.

''சமயத்தில் முதலாம் சைவ வினா விடையை எடுத்துக் கொண்டால் அது வளர்ந்து சென்று சிவஞான போதச் சிற்றுரையில் முற்றும்'' எனப் பண்டிதமணி கூறுவது எழுத்திலும் அக்குறிக்கோள் பிரதிபலித்தமையைக் காட்டும்.

''நாவலரின் கல்விக் கொள்கை சமயச் சார்புடையது. எண்ணக்கரு வளர்ச்சிக் கிரமம் பற்றிய உணர்வு நாவலரின் பாடநூல் வரிசையிலே புலப்பட்டுத் தோன்றுகின்றது. முறைசாரக் கல்வி, வளர்ந்தோர் கல்வி என்பவற்றில் அதிகம் ஈடுபாடுகொண்ட நாவலர் சிறுவர்களையும் பொதுமக்களையும் சென்றடையத்தக்க வசன நடை ஒன்றை உருவாக்கினார். அவருடைய தமிழ் நேரடியானது. இயல்பான ஓட்டம் உடையது; உணர்ச்சிமயமாகவும் அறிவு ரீதியாகவும் இயங்குவது'' என்றெல்லாம் திரு.இ. முருகையன் அவர்கள் பாராட்டுவர்.

கல்விக்கூடங்களை அமைப்பதிலும் பாடநூல்களைஎழுதிப் பதிப்பதிலும் பழந்தமிழ் நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பதிலும் ஈடுபட்ட நாவலர் பாடசாலைக்கு வெளியிலும் கல்வி நிகழல் கூடும்; நிகழ வேண்டும் என்று கருதினார். 'வாழ்க்கைக்கான ஆயத்தம்' என்று கணிக்கப்படும் நியமக் கல்வியை ஊட்டுவதில் ஈடுபட்டதோடு அமையாது. முறைசாராக் கல்வியிலும் அவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். வளர்ந்தோரைத் தமது இருப்பிடத்துக்கு வருவித்து அவர்களுக்குக் கற்பித்தல், வளர்ந்தோர் கூடியிருக்கும் சபைகளிலே புராண விரிவுரை நிகழ்த்துதல், கோயில்களிற் சமயப் பிரசாரஞ் செய்தல், நூற்பயிற்சி அதிகம் இல்லாத சிறுவருக்கும் வளர்ந்தோர்க்கும் பயன்படும் வண்ணம் புராண வசனங்களை அச்சிட்டு வெளியிடல், நூற்பயிற்சி நிரம்பியவரும் மேன் மேலும் தம்மை நுண்ணறிவுமிக்கோராக்கிடப் பழைய செந்தமிழ் நூல்களை வெளியிடல், பொதுமக்களிடையே தவறான கருத்துக்கள் நடத்தைகள் காணப்படின் அவற்றுக்குப் பரிகாரமாகத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடல், கண்டனங்கள் மூலமும் போதனை மூலமும் சரியான கருத்துக்களை முன்வைத்தல் என்ற ஆறு முறைகளைத் தழுவி அவர் பணிசெய்தார்.

''வகுப்பறை, மாணவர், ஆசிரியர், கரும்பலகை, வெண்கட்டி என்னும் வழமையான சம்பிரமங்களுக்கு அப்பாலே எவ்வெவ் வகையிலெல்லாம் கல்வி ஊட்டப்படலாம் என்பதைத் தேடியறிந்து பயன்படுத்திய நாவலரை முறைசாராக் கல்வியின் முன்னோடி என்று வருணிப்பது முற்றிலும் பொருத்தமானதே'' எனத் திரு.இ முருகையன் பாராட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

''வண்ணார் பண்ணையிலுள்ள அச்சகத்திலிருந்து அஞ்ஞானத்திற்குச் சார்பாகவும் கிறிஸ்தவத்திற்கு விரோதமாகவும் நூலகளும் துண்டுப் பிரசுரங்களும் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்படுவது யாழ்ப்பாணத்தில் இப்பொழுது தோன்றியுள்ள ஒரு புதுமையாக இருக்கிறது'' என ஜூலை 1855இல் வெளிவந்த மிஷனரி ஹெறால்டில் எழுதி வண. மைக்ஸ் அவர்கள் வருந்துமளவுக்கும்,

''இதுவரைகாலமும் அவர்கள் மிஷனரிமாரின் முயற்சிகளை ஏளனத்துடன் பார்த்து வந்தனர். ஆனால் இப்பொழுதோ கிறிஸ்தவத்தின் உத்வேகத்துக்குக் கண்மூடிகளாக இராமல் தமது முறைமைகளைக் காப்பாற்றும் முயற்சியில் இறங்கியுள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு அச்சகத்தை அமைத்துப் பாடசாலைப் புத்தகங்களை வழங்கி வருகின்றனர். அப்பாடசாலைப் புத்தகங்கள் பெரும்பாலும் நாம் வழங்கும் நூல்களைப் போலவே இருக்கின்றன. ஆனால் அவற்றில் ஜீவனுள்ள மெய்யான ஒரே கடவுளின் பெயரை நீக்கிவிட்டுத் தமது கடவுளரின் பெயர்களைப் போடுகின்றனர் அவர்களிடம் பாடசாலைகளும் இருக்கின்றன அப் பாடசாலைகளுக்குத் தேவையான நிதியைத் திறமையாகவும் ஒழுங்காகவும் சேர்த்துவருகின்றனர்'' என மே 1851 மிஷனரி ஹெறால்டில் வண. உவில்லியம்ஸ்கடர் எழுதி ஏங்கும் அளவுக்கும் உத்வேகமிக்கவையாக நாவலரின் பணிகள் அமைந்தன.

நாவலர் செய்த மகத்தான தொண்டு தமது பணியைத் தொடரவல்ல மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்கியமையாகும்.

''நாவலரின் இராப் பாடசாலை திண்ணைப்பள்ளியின் இனத்தைச் சேர்ந்தது. அதன் பரம்பரை தான் உண்மைக் கல்விப் பரம்பரை'' எனப் பண்டிதை பொன். பாக்கியம் பாராட்டுகிறார்.

### செந்திநாதையர் [1848-1924]

இக்கல்விப் பரம்பரையில் சைவசிந்தாந்த மரபுக் கல்வியின் வளர்ச்சிக்குழைத்தவரென வியந்து பாராட்டுதற்குரியவர் காசிவாசி செந்திநாதையர் அவர்கள்.

ஐயர் நாவலரிடம் நேரே பாடங் கேட்டவரெனப் பண்டிதை பொன் பாக்கியம் குறிப்பிடுவர்:

'இங்கே இணுவில் நடராசையர் காசிவாசி செந்திநாதையர் அங்கே (தமிழ்நாட்டில்) திருவாடுதுறை ஆதீனத்து இரண்டாம் பட்டமாகிய நவசிவாயத் தம்பிரான் நாவலரிடம் சைவசித்தாந்தம் கற்றவர்கள்' என்கிறார் பண்டிதை தமது நாவலர் சரித்திர ஆராய்ச்சியில், பண்டிதமணியவர்களோ,

1887-ல்39-ம் வயதில் நாவலரின் மாணவரான இணுவில் நடராசையரிடம் சைவசித்தாந்தத்தைச் செந்திநாதையர் ஆழ்ந்து கற்றார். சித்தியாருக்கு ஞானப்பிரகாசர் செய்த உரை பாடங் கேட்கப்பட்டது என்கிறார்.

மேற்குறிப்பிட்ட இருவரில் யாரிடம் பாடங் கேட்டிருந்தாலும் செந்திநாதையர் நாவலரின் மாணவ பரம்பரையினர் என்பதில் எதுவித ஆக்ஷேபமும் ஏழநியாயமில்லை. நாவலருக்குப்பின் சைவசித்தாந்தக் கல்வி மரபு தழைத்தோங்கவெனச் செந்திநாதையர் செய்த பரமோபகாரம் சைவத்தமிழ் உலகால் என்றென்றும் நினைவு கூரப்படுமென்பதற்கையமில்லை.

நீலகண்ட பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பு, சிவஞான போத வசனாலங்கார தீபம், சைவவேதாந்தம், தேவாரம், வேதசாரம், வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப் படம், அதுபற்றிய வினாவிடை, கந்தபுராணநவ நீதம் என்பன இவர் செய்த நூல்களிற் குறிப்பிடத்தக்க சில.

1902-ல் திருப்பரங்குன்றத்திற் சைவசித்தாந்த வித்தியாசாலை ஒன்று நிறுவி மாணவர்களுக்குச் சைவ சித்தாந்தக் கல்வி புகட்டியவர் ஐயர்.

'சிவஞான சுவாமிகளுக்குப் பிறகு சைவ சித்தாந்தமென்றால் இங்கேயும் வடக்கேயும் அது செந்திநாத ஐயரின் விளைவே'.

'மாயவாத மாருதத்தை ஆசமனஞ் செய்வதற்கு ஐயர் ஓர் ஆதிசேஷனாகவே காட்சியளித்தார். என்றெல்லாம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஐயரைப் பாராட்டியிருப்பது முற்றிலும் பொருத்தமானதே.

'வியாசபகவானுக்கும் சங்கரருக்கும் தொடர்புண்டா?' என்றே ஐயருடைய ஆராய்ச்சி தொடங்கியது. 'பிரமசூத்திரத்துக்கும் சங்கர பாஷ்யத்துக்கும் தொடர்பு இல்லை என்ற முடிவை ஐயர் அவர்கள் முன் வைத்தார் 'ஏகாத்மவாதம் போதிப்பது சங்கர பாஷ்யமேயன்றி வியாசசூத்திரம் அன்று' என்ற கருத்தை நிறுவிய செந்திநாதையர் நமது யாழ்ப்பாணத்துச் சைவ சித்தாந்த கலாசாரம் இறந்துபடாமல் பாதுகாத்த பரமோபகாரி.

### வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை 1836-1902

நாவலர் மருகர் பொன்னம்பலபிள்ளை சைவசித்தாந்தக் கல்வி மரபுக்குப் புதிய பரிமாணம் ஒன்றை அளித்தவர் புராணபடன முறையை இங்கு புதிய முறையில் தழைத்தோங்கச் செய்ததன் மூலம் சைவ சித்தாந்தக்கல்வி ஓங்க அவர் வழியமைத்தார்.

'சில பெண்கள் பிறந்த அகத்திலும் பார்க்கப் புக்க அகத்திற் பிரகாசிக்கிறார்கள். அவ்வாறே கந்த புராணமும் பிறந்த அகத்திலும் பார்க்கப் புக்க அகமாகிய யாழ்ப்பாணத்திலே மிகமிகப் பிரகாசித்துப் பல நூற்றாண்டுகளாய்ப் பயன்பட்டு வந்திருக்கிறது'. எனக் கந்தபுராண கலாசாரம் என்ற நூல் பாராட்டுகிறது. இத்தகையதொரு பாராட்டுக்கு யாழ்ப்பாணம் உரித்தாவதற்குக் காரணராய் அமைந்தவர் வித்துவசிரோமணி.

'உட்பகை புறப்பகைகளையெல்லாம் களைந்து அவற்றை ஒதுக்குக் குடியிருக்கச் செய்து, சுத்த அத்வைத சைவசித்தாந்தத்தை நிலைநாட்டிய கந்த புராணம்' எனக் கந்தபுராணத்தைப் பாராட்டுவது வழக்கம். இக்கந்த புராண படனம் மூலம் நாவலர் காலத்திலும் அதன் பின்பும் சைவசித்தாந்தக் கல்விமரபு நிலைபெறப் பணிபுரிந்தவர்; வித்துவசிரோமணி அவர்கள்.நாவலர் போலவே மாணவர்களுக்குப் பாடம் சொல்லியும் புராண படனம் செய்தும் சைவசித்தாந்தக்கல்வி சிறக்க இவர் ஆற்றிய உவமையிலாப்பணி தனியாக ஆராயப்பட வேண்டியது ஒன்று. இவர் மாணவருள் ஒருவராகிய சபாபதி நாவலர் (1848-1903-திருவாவடுதுறை ஆதீன மகா வித்வானாய் (1815- 1876)) அமர்ந்து ஏறத்தாழ இருபது நூல்கள் வரையில் வெளியிட்டிருக்கிறார்.

சிதம்பர சபாநாத புராணம் (1885), சிவகர்ணாமிர்தம், சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், யேசுமத சங்கற்ப நிராகரணம் (1879), திராவிடப் பிரகாசிகை (1899), வைதிக காவிய தூஷணமறுப்பு முதலிய நூல்கள் அவற்றுட் குறிப்பிடத்தக்க சில. இந்த நூல்கள் மூலம் சைவசித்தாந்தக்கல்வி மரபுக்கு சபாபதி நாவலர் தம் பங்களிப்பைச் செய்திருக்கிறார் என்று கூறலாமே தவிரக் குறிப்பிடத்தக்கதாக இவர்பணி அமையவில்லை

வித்துவசிரோமணியின் மற்றொரு மாணவரான ம. க. வேற்பிள்ளை உரையாசிரியர் என வித்துவசிரோமணியாலேயே பாராட்டப்பட்டவர். சிதம்பரம் நாவலர் வித்தியாசாலை அதிபராக விளங்கியவர். திருவாதவூர் அடிகள் புராணத்துக்குச் சிறந்த உரை எழுதியவர். இவர் தமது ஆசிரியரான வித்துவ சிரோமணி போலவே பாடஞ் சொல்வதன் மூலமும், உரையாசிரியப் பணிமூலமும் சைவசித்தாந்தக் கல்வி மரபு நிலைபெற உழைத்தவர். புராணபடன மரபு தழைத்தோங்கி அதன் மூலம் சைவசிந்தாந்தக் கல்வி பரவத் துணை நின்றவர். இவரது திருவாதவூர் அடிகள் புராணம் சைவசித்தாந்த விளக்கங்கள் நிரம்பிய உரையாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதொன்று.

### சிவசங்கர பண்டிதர் (1829-1870)

'சென்ற மாதத்திய வாரமொன்றில் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் சைவர்களுட்கற்றோரும்,மற்றோரும் கூடிப் பரமத கண்டனஞ் சுயமதஸ்தாபனம் என்னும் அபிப்பிராயம் கொண்டு சிற்சில கூட்டநிருபஞ் செய்தார்கள் ஒருவாரம் பரமத கண்டனமும் அடுத்தவாரம் சுயமத ஸ்தாபனமும் செய்தார்கள் இச்சங்கத்துக்குஅக்கிராசனபதிசங்கரபண்டிதர்' இலங்காபிமானி பத்திரிகையில் 'ஓர் அன்பன்' என்ற புனை பெயரில் வெளிவந்த மேற்படி கடிதத்தால் நாவலர் வழியிற் சிவசங்கரபண்டிதர் சைவசித்தாந்தக் கல்வி மரபு செழிக்கப் பணியாற்றியவருட் குறிப்பிடத்தகுந்த ஒருவர் என்பது புலனாகும்.

கிறிஸ்து மத கண்டனம் (1882) மிலேச்ச மதவிகற்பம் சற்பிரசங்கம் முதலிய நூல்கள் வாயிலாகக் கிறிஸ்து மத கண்டனஞ் செய்து சைவசித்தாந்தக் கல்வி மரபை நிலைநாட்டியவர் சிவசங்கரபண்டிதர்.

'நாவலர் அரும்பெரும் சாதனைகளை நிறைவேற்றினாரென்றால் அவர் காலத்தில் வாழ்ந்த பண்டிதர் போன்றோரின் பாரிய சாதனைகளும் அவருக்குச் சாதகமாயிருந்தமை மனங்கொள்ள வேண்டியதொன்றாகும். நாவலர் இயக்கத்தின் கூறுகளையும் தன்மையையும் தெளிவாய்த் தெரிந்துகொள்வதற்குச் சங்கர பண்டிதர் பற்றிய நுண்ணாய்வுகள் பெரிதும் வேண்டப்படுவனவாகும்'

என நாவலரும் சிவசங்கர பண்டிதரும் எனும் ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடும் யோகேஸ்வரி கணேசலிங்கம்.

''யாழ்ப்பாணத்துக் கல்வி மரபில் பண்டிதருக்குத் தனியானதோர் இடமுண்டு''

என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு ''யாழ்ப்பாணத்துக் கல்வி மரபு'' என அவர் அடையில்லாது குறிப்பிடினும் அவர் குறிப்பிடும் கல்வி மரபு சைவசித்தாந்தக் கல்வி மரபே என்பது அக்காலப் பின்னணியை இணைத்து நோக்குவார்க்குப் புலனாகும் என்பதற்கு எதுவித ஐயமுமில்லை.

### சி. வை தாமோதரம்பிள்ளை (1832-1901)

''உண்மைகளைக் கடைப்பிடித்து உய்தல் வேண்டுமென்ற பேரவாவால் ஏறக்குறைய இருபது வருஷமாக ஒருபட்சத் துணிவு சிறிதுமில்லாது சைவ வேதாந்த, சித்தாந்த, ஸ்மார்த்த பௌத்த அருகாதி இந்து சமயங்களையும், கிரேக்க லுத்தேரிய, ரோமானிய, புரோத்தஸ்தானாதி, கிறிஸ்தவ சமயங்களையும் ஆராய்ந்து அடியேன் சைவமே இவற்றுளெல்லாம் சிறந்ததெனக் கொண்டேன்''

என விவிலிய விரோதப் பாயிரம் என்ற நூலில் எழுதித் தமது சைவ சமயாபிமானத்தைப் புலப்படுத்தியவர் சி வை. தாமோதரம்பிள்ளை ஆயின் ஆய்வாளர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களோ,

''சைவசமயத்தை வளர்க்க வேண்டும் என்னும் கோட்பாடுடையவராக சி. வை.

14ஆம் பக்கம் பார்க்க

# நாடகக் கலைஞர் நடிகமணி

## ஓர் கலந்துரையாடல்

**சதயன்**

89 08.12 சனிக்கிழமை மாலை மணி2.30 காங்கேயன்துறை நடேஸ்வராக் கல்லூரி மாடி. நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களின் 'கட் அவுட்' ஒன்று மண்டபத்தின் முன்புறத்தில் நிற்கிறது. நடிகமணியைக் கலை உலகு இழந்துவிட்ட கவலை அடிமனசில் இருந்த போதும், இரண்டு கைகளையும் நீட்டி ஏந்தி அந்தக் 'கட்அவுட்' புன்னகையை நாங்கள் மனம் நிறைய நிரப்பிக்கொள்ளலாம் போன்ற உணர்வு!

ஒரு முறை, மண்டபத்தில் நிறைந்திருப்போர் யார் என்று பார்க்கிறேன்.

நடிகமணியின் உறவினர்கள், நாடகநடிகர்கள், இரசிகர்கள், நாடகமும், அரங்கியலும் பாடத்தைப் பயிலும் மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்

பொறுமை, எவரையும் மதிக்கும் பண்பு' என்று கூறப்படுகின்ற மனிதத்துவப் பண்புகள் நடிகமணியின் வெற்றியில் எவ்வளவு பங்களிப்பைச் செய்தன?';

என்பது போன்ற கேள்விகளை முன் வைத்துக் கலந்துரையாடலை ஆரம்பித்தார்

களில் கையாண்டார்?'' என்ற கேள்வியையும் முன்வைத்தார்.

''டி. கே சண்முகம் அவர்களுக்குப் புகழ் தந்தது ஔவையார் பாத்திரம். கலையரசு சொர்ணலிங்கத்தை உயர்த்தியது கூனி. சிவாஜி கணேசன் கூட ஆரம்பத்தில்

முன்வைத்தகேள்விகளை மனதில் வரிசைப்படுத்தி, மெதுதாக எழுந்நார் காரை செ. சுந்தரம்பிள்ளை.

நடிகமணிக்குப் பதினறு வயதாக இருக்கும்போது, கருணலய பாகவகர் குழுவிலே சத்தியவான் சாவித்திரி நாடகத்திற்கு இவர் ஹார்மோனி

எழுத்தாளர் கோகிலா மகேந்திரன்.

அடுத்து மேடைக்கு வந்த கலைப்பேரரசு ஏ.ரிபொன்னுத்துரை அவர்கள் நடிகமணி உலகறிந்த நற்பண்பாளர் ''நாடகம் எப்படி அவரை நற்பண்பாளனுக்கியது?'' என்ற கேள்விக்கு நாம் இந்

பெண் பாத்திரத்துக்காகவே நாடகக் கம்பனியால் அழைக்கப்பட்டவர். நடிகமணி அவர்களும் ஆரம்பத்தில் சந்திரமதி போன்ற பாத்திரங்களில் ஜொலித்திருக்கிறர். ஆக, ஆரம்பத்தில் பெண்பாத்திரம் ஏற்று நடிப்பவர்கள் சிறந்த நடிகர்களாகும் வாய்ப்பு அதி

யம் வாசிக்க, நடித்துக்கொண்டிருந்த கிருஷ்ணசாமி ஐயர் நடிப்பையும் விட்டுவிட்டுப் பாடுவதையும் விட்டுவிட்டுப் பார்த்துக்கொண்டு நின்ற சம்பவத்தை ரஸமாக விபரித்து வைரமுத்துவின் இயல்பான திறமையே அவரது வெற்றியின் அடிப்படைக்காரணம் என்பதை அழுத்திஞர் தொடர்ந்து.

''தனக்கு முன்னே நடித்தவர்கள் மேடையை எப்படி அசிங்கப் படுத்திஞர்கள் என்பதை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்ட நடிகமணி தான் அத்தகைய தவறுகளைச் செய்யாதிருந்தார்.

நடிகமணியின் பாதையிலே இலங்கையர்கோனின் வருகை ஒரு திருப்பு முனையாக அமைய

கள்.

மஞ்சள் வெயில் மாலையில் இவர்கள் எல்லாம் கூடி நடிகமணியின் பணி பற்றிக் கலந்துரையாடப் போகிருர்கள்!

கலை இலக்கியக் களத்தின் நாடகத்துறை மாணவிகள் நால்வர் இனிமையான குரலிலே தமிழ் வாழ்த்துப் பாடுகின்றனர்.

முகத்தில் வாத்சல்யம் ததும்பும் புன்னகையுடன் தம்மூர் (காங்கேயன்துறை) வந்திருக்கும் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிருர் குறமகள். ''நடிகமணி மறைந்த பிறகுதான் நாங்கள் அவருக்கு முக்கியத்துவம் கொடுக்கிரேம் என்று யாரும் நினைக்க வேண்டாம். அவர் இருக்கும் போதே எங்களில் ஒருவராக இருந்தார். கலை இலக்கியக் களம் ஒழுங்கு செய்த எட்டாவது, பதினெட்டாவது நிகழ்வுகளே இதற்குச் சான்று. நாட்டின் அவலச் சூழ்நிலையால் அவற்றை நடத்த முடியாமற் போனது எமது துரதிர்ஷ்டம்''குறமகளைத் தொடர்ந்து தலைமையுரை நிகழ்த்துகிருர் கலாநிதி நா.சுப்பிரமணியன்:இச் சூழலில்(தெல்லிப்பழை- காங்கேயன்துறை) ஒரே காலத்தில் பிறந்து (1924) ஒரே காலத்தில் புகழ் பரப்பி, ஒரே காலத்தில் மறைந்தனர் இருவர் (1989)ஒருவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், மற்றவர் நடிகமணி. இவர்கள் இருவருக்குமிடையில் ஒரு புரிந்துணர்வு இருந்தது.

இயல்பான திறமைகளுடன் காணப்பட்ட நடிகமணியை படித்தவர் மத்தியில் அறிமுகம் செய்த பெருமை சு. வி. அவர்களைச் சாரும்.

அரங்கத்தை ஒழுங்காகப் பயின்றவர்கள், இயல்பாகவே அரங்கத்தைப் பயன்படுத்திய வைரமுத்து அவர்களைப் பற்றிக் கனதியாகக் கூறுகிருர்கள் என்ற விடயம் கவனிக்கத் தக்கது'' என்று கலந்துரையாடலுக்கான அறிமுகத்தைச் செய்கிருர் கலாநிதி அவர்கள்.

''நடிகமணியின் வெற்றிக்குக் காரணமாக அமைந்த விடயங்கள் எவை? நடிகமணி தொழில்முறை நாடகக்காரராக இருந்ததும், அவரது நாடகங்களில் நடித்தவர்கள் சாதாரண தொழிலாளராக இருந்ததும் அவரது வெற்றிக்கு உதவுபவையாக இருந்தனவா?

'அடக்கம், அமைதி, புன்சிரிப்பு, நுண்ணிய உணர்வு, பொருமையற்ற தன்மை, நேர்மை, சத்தியம், செய்தொழிலே, தெய்வம் எனக்கொள்ளும் பண்பு, எளிமை,

தக் கலந்துரையாடலில் விடை காணவேண்டும் என்ருர். நேரம்பற்றி எப்போதுமே பிரக்ஞையுடன் இருக்கும் கலைப்பேரரசு மிகக் குறுகிய நேரத்தில் தனது பங்களிப்பை முடித்துக்கொண்டார். அதிகாலையிலேயே குளித்துவிட்டு ளந்திருந்த என்னைக் குளிர்காற்றும் குளிப்பாட்டிக் கொண்டிருந்த வேளையில் அருமையான அன்னுசிப்பழத்துண்டு சேர்ந்த குளிர்பானம் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

அடுத்து எழுந்த அநு. வை. நாகராஜன் அவர்கள் மரபுவழியில் நின்றமையே நடிகமணியின் வெற்றிக்குப் பிரதான காரணமாக அமைந்தது என்று கூறி''வைரமுத்து அவர்கள் மரபுவழியோடு புதிய உத்தி முறைகளையும் கையாண்டாரா? எவ்வகை

கமா?''என்ஒருரு மிகுந்த ஆய்வுக்குரிய கேள்வியை முன்வைத்தார் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்.

வசந்தகான சபா நடிகர் வி. ரி. செல்வராஜாவை அழைத்தார்கள். ''அவர் ஒரு பரம்பரைக் கலைஞன்''என்று தொடங்கி ஒப்பனை இல்லாமல் காட்சியமைப்புக்கள் இல்லாமல் மேடையே கூட இல்லாமல் தாம் நடித்த சந்தர்ப்பங்களை நினைத்து, சக நடிகர்களைத் தமக்குச் சமமகாவே அவர் மதித்த பண்பை நிரூபிக்கும் காட்சிகள் ஒரு மின்னல் வெளிச்சம் போல நினைவில் அடிக்க மிகவும் உணர்ச்சிவசப்பட்டு, கண்களில் கொப்பளித்துச் சுரந்த கண்ணீரைச் சிரமப்பட்டு உள்வாங்கி அமர்ந்தார் அவர்.

கலந்துரையாடல் களைகட்ட உதவிய இவர்கள் அனைவரும்

அவர் தனது நாடகங்களுக்குப் பிரதி வைத்துக் கொண்டார். முடிந்தபோது காட்சி அமைப்பிலே மாற்றங்கள் செய்தார். பணம் சேர்த்தலுக்கு ஒருபோதும் முக்கியத்துவம் கொடுக்காது கலையை நேசித்தார்.

அடிமட்ட மக்கள் மத்தியில் பலமான இடம் ஒன்றைப் பெற்றிருந்த அவருக்குத்தாஞ, இலங்கையர் கோன், வித்தியானந்தன் ஆகியோரால் மேல்

14ஆம் பக்கம் பார்க்க

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

**20-08-1989 — 26-08-1989**

**மேடம்:** வாக்கு வல்லபம், பெரியோராசி, வாகன சுகம், பெண்களாலுதவி, எண்ணியது நடக்கும், வெளியூர்ப் பிரயாணம், பணவரவு, உயர் பதவி, மனையலங்காரம், மன்னராலுதவி, பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள், புகழ் தேடி வரும், புண்ணிய வழிபாடு.

**இடபம்:** வாக்கு வசீகரம், விவாக நிச்சயம், பெரியோராசி, புகழ் தேடிவரும், உயர் பதவி, உத்தமர்கள் உறவு, வாகன சுகம், வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம், தேடியவர் வருகை, புது மனைச் சிறப்பு.

**மிதுனம்:** உயர் பதவி,உத்தமர்கள் வருகை, பிரிந்த காதலர் ஒன்று சேருவர்,மூத்த சகோதர வழியுதவி, வாகன மாற்றம், விவாக நிச்சயம், வணிகர்கள் கடல்தொழில் செய்வோர் இலாபம், புதுத் தொழில்.

**கடகம்:** பிதா வழியுதவி, பெரியோராசி, புண்ணிய வழிபாடு.இராஜ மரியாதை,புதுத் தொழில், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்த காதலர் ஒன்று சேருதல், மாமன் வழியுதவி, தூரதேசம் போனவர்கள் வருகை.

**சிங்கம்;** உடல்ரோகம், வாகன நஷ்டம், வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம்,புதுத்தொழில், புண்ணிய வழிபாடு, விவாகத் தடை, பிரயாண அலைச்சல், இளையசகோதர வழியுதவி, மனைமூலம் இடமாறரம்.

**கன்னி:** உயர்பதவி,வாகன சுகம்,கல்வியால் மகிழ்ச்சி பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள், வெளிநாட்டுப்பிரயாண சுகம், புகழ் தேடிவரும், இளைய சகோதர வழியுதவி, மாமன் வழியுதவி, கலைஞர்கள் கௌரவிக்கப்படல், காதலர்மகிழ்ச்சி.

**துலாம்:** சத்துருபயம்,இடமாற்றம், வணிகர்கள் வாகன மாற்றம், பெரியோருதவி, எண்ணியகாரியம் தடை, தூரதேசப் பிரயாணம், மனைமாற்றம், இராஜ பயம், வணிகர்கள் கடல் தொழில் இயந்திர தொழில் செய்வோர் சமபலன்.

**விருச்சிகம்:** புகழ் தேடி வரும், புண்ணிய வழிபாடு, பெரியோராசி,வாக்குப் பலிதம்,வணிகர்கள்கடல்தொழில் செய்வோர் இலாபம், வெளியூர் போனவர்கள் வருகை, புத்திர வழி மகிழ்ச்சி, புதுத் தொழில்.

**தனுசு:** விவாக நிச்சயம், புகழ் தேடிவரும், உயர்பதவி, கல்வியால் தொழில், பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள், வாகன மாற்றம், தேடியவர் வருகை, கலைஞர்கள், வைத்தியர்,சோதிடர் கௌரவம்.

**மகரம்** உயர் பதவி, உத்தமர்கள் உறவு, கல்வியால் தொழில், காதலர் மகிழ்ச்சி, எண்ணியது நடக்கும், பெரியோராலுதவி.இளையசகோதர வழிப்பகை, வெளியூர் செய்தியால் நன்மை, வணிகர்கள் இலாபம், புதுத்தொழில்.

**கும்பம்** தொழில் மாற்றம்,பிரிந்த காதலர் ஒன்று சேருதல், வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம், விவாக நிச்சயம், உயர் பதவி,வாகன சுகம்,

**மீனம்** விவாக நிச்சயம், பெரியோராசி, புகழ் தேடி வரும், புதுத்தொழில், இளைய சகோதரவழியுதவி, சுகஜீவியம், வணிகர்கள் கடல் தொழில் செய்வோர்இலாபம், வருமான உயர்வு, வாக்கு வசீகரம்.

# யார் உயர்ந்தவர்?

வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த வண்டியின் (மினிபஸ்) முன் சக்கர ரயர் வெடித்தது. நெடுந்தூரப் பயணத்தின் நடுவில் ரயர் இப்படிச் சதி செய்ததை இயந்திரத்தால் பொறுக்க முடியவில்லை மூண்ட கோபக்கனல் வார்த்தைகளாக வெடித்துச் சிதறியது. 'உங்கள் இனமே இப்படித்தான்...!' அவசர அலுவலங்களுக்கு புறப்பட்ட பிரயாணிகள் எல்லாம் திடீரென வெடித்து தவிக்க விட்டாயே!

அண்ணு ..! நீங்கள் அறியாமல் பேசுகிறீர்கள்... நாங்கள் உங்களை மட்டுமன்றி முழுவண்டியையும் சுமந்து கொண்டு சுற்றிச் சுழல்வதால் தானே வண்டிப்பயணமே நடைபெறுகிறது. கல்லும், முள்ளும், குன்றும், குழியும் தாண்டும் எமது வேதனையை நீங்கள் மறந்தே விட்டீர்களா...? அமைதியான குரலில் வெடித்த ரயர் பேசியது.

'என்ன கதை அளக்கிருயா...? கர்வத்துடன் கர்ஜித்தது இயந்திரம்.

'அண்ணு! கோபிக்காதீர்கள். பெறுமதியையோ, நிலையையோ வைத்த ஒருபொருளை மதிப்பிடுவது தவறு. அதன் தேவையைக் கருத்திற்கொண்டு கணிப்பது தானே புத்திசாலித்தனம்... உப்பு பெறுமதி குறைவானதாயிருந்தும் உப்பில்லாப்பண்டம் குப்பையிலே என்று பெரியோர் உரைத்ததை நீங்கள் அறியவில்லையா...?'

## உருவகம்

'ஓகோ! தத்துவம் வேறு பேசுகிருயா...?'

'தத்துவம் இல்லையண்ணு உண்மை. உலகில் மேலோர் கீழோர் என்ற வகுப்பு வாதம் கூட இப்படித்தானே'

'அப்போ நீதான் உயர்ந்தவஞ.'

'நான் அப்படிச்சொல்லவில்லையே. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கடமையைச் செய்கிரேம். கடமையைச் சரிவரச் செய்பவர்களே உயர்ந்தவர்கள்.'

'அப்படியென்ருல் நீதானே தாழ்ந்தவன் என்பதை உணர்ந்தது விட்டாயா...?' இயந்திரம் தலைக்கனத்துடன் சிரித்தது.

'இல்லை அண்ணு. உடலில் வலுவிருக்கும் வரை கடமையைச் செய்தேன். வலுவிழுந்தவுடன் வெடித்துச் சிதறிவிட்டேன். இது எனது சக்திக்கு அப்பாற்பட்டது. அது உங்களுக்கும் பொருந்தும் தானே!' வெடித்த ரயர் இரக்கமாகப் பதில் சொன்னது.

வளலாய்

**ரஞ்சன்**

இயந்திரம் ஆழமாகச் சிந்தித்து விட்டுப் பேசியது. 'தம்பி என்னை மன்னித்து விடு ஆத்திரத்தில் அறிவை இழந்து உன்னை ஏசிவிட்டேன்... இவ்வுலகமே இப்படித்தானே இயங்குகிறது. இதனை உணராமல்தானே மனிதன் உயர்வு தாழ்வு என்று சஞ்சலப்படுகின்ருன்.'

'அது மனிதனின் அறியாமை நாங்கள் கடமையைச் செய்வோம். அது மனிதனுக்கே பாடமாக அமையட்டும்' இயந்திரத்தை சமாதானப்படுத்திய ரயர் மௌனத்தில் மூழ்கியது.

# எழுத்துச் சீர்திருத்தமும் அலுவலக உபகரணமும்

வ. கோவிந்தபிள்ளை

எழுத்துச் சீர்திருத்தம் எவ்வகையில் தமிழிலுள்ள ரெலிபிறின்ரர், தட்டெழுத்து இயந்திரம் போன்ற இன்னேரன்ன அலுவலக உபகரணங்களுக்கு நன்மையை உண்டு பண்ணுகின்றது என்பது விளங்கிக் கொள்ள வேண்டியதொன்று. இவ்வெழுத்துச் சீர்திருத்தம் மேற்கூறியவற்றிற்கு நன்மை பண்ணுமெனின் அது ஒரு சமுதாயத்தின் தொழில் வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமையும் என்பதிலும் பண்பாட்டு வளர்ச்சியை எடுத்துக் காட்டும் என்பதிலும் ஐயமில்லை.

தமிழ்த் தட்டெழுத்து இயந்திரம் ஆங்கிலத் தட்டெழுத்து இயந்திரத்தினைப் போன்று சம அளவுக் கட்டைகளையே கொண்டுள்ளது. இவ்வியந்திரங்கள் (ஆங்கிலமும் தமிழும்) இயக்கப்படும் முறையும் இவற்றிற் பொறிக்கப்படும் சொற்களை எண்ணிக் கணக்கெடுக்கும் முறையும் ஒரு சீரினவே. இவ்வகையில் ஆங்கிலத்திற் பொறிக்கக்கூடிய அளவுசொற்களை அல்லது கிட்டத்தட்ட அத்தொகைச் சொற்களைத் தமிழிலே ஏன் பொறிக்க முடியாதிருக்கின்றது என்பதை நுணுகி ஆராய்ந்தபொழுது தமிழ்த் தட்டெழுத்திற்குப் புதியதொரு விசைப்பலகை (KEY BOARD) யின் இன்றியமையாமையையும் தமிழ் நெடுங்கணக்கில் இப்பொழுது இருக்கும் எழுத்து மாற்றங்களின் இன்றியமையாமையையும் உணரமுடிந்தது.

தமிழ் நெடுங்கணக்கின் வரிவடிவங்கள் வெவ்வேறு வகையின வாக அமைந்துள்ளமையினலே எழுத்துக்கள் அனைத்தையும் ஒரேபாங்கில் அமைக்க முடியாது. விசைப்பலகையில் கீழும் மேலுமாக அமைக்க வேண்டிய நிலை ஏற்படலாயிற்று. இதனல் மேல் வரிசை எழுத்துக்கள் ஒவ்வொன்றினையும் பொறிப்பதற்கு இவ்விரண்டுமுறை கட்டைகளைப் பொறிக்க வேண்டியுள்ளது. ஒன்று எழுத்துடைய கட்டை; மற்றையது மாற்றமுக்கிவிசை (Shift Key) ஆகும்.

இப்பொழுது நடைமுறையிலிருக்கும் தமிழ்த்தட்டெழுத்து இயந்திரத்தில் 40,000 எழுத்துகள் அடங்கிய விடயமொன்றனைப் பொறிக்கின்றபொழுது கிட்டத்தட்ட 5395 முறை மாற்றமுக்கி விசைகளை உபயோகிக்க வேண்டியுள்ளது. இது கிட்டத்தட்ட ஒருவரின் 1/8 க்கு மேற்பட்ட வேலையை வீண் விரயமாக்குவதுடன் அவரது சக்தியையும் விரயமாக்குகின்றது இன்னும் தெளிவுறக்கூறின் தட்டெழுத்தாளர் ஒருவர் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள் தமிழ்த்தட்டெழுத்துப் பொறியில் பணியாற்றுகின்றபொழுது ஒருமணித்தியாலத்திற்கு மேற்பட மாற்றமுக்கி விசையை உபயோகித்தலிலேயே இவரது காலம் வீணே செலவழிக்கப்படுகின்றது. எனவே இவரது வாழ்நாளில் எத்தனை ஆயிரம் மணித்தியாலங்கள் வீணே கழிக்கப்படுகின்றது என்பதை அறிஞர்களும் ஆர்வலர்களும் அவதானிக்க மறந்து விடக்கூடாது.

நடைமுறையில் உள்ள தமிழ்த்தட்டெழுத்து இயந்திரத்தில் வரிகளின் கீழே நீண்ட நேர் கோடு இடும் (Under Seore) சக, தர போன்ற அடையாளங்கள் எவையும் இல்லை. ஏனெனில் எழுத்துகளின் எண்ணிக்கை கட்டைகளை காட்டிலும் அதிகமாக விருந்ததால் இவற்றை அமைத்தற்கு முடியாதிருந்தது. உதாரணமாக தமிழ்த் தட்டெழுத்திற் பொறிப்பவர் ஒருவர் கட்டுரைத்தலைப்பினை அல்லது பந்தி ஒன்றினை இடையிட்டற்ற நீண்ட நேர் கோட்டாற் கோடிடவேண்டுமெனின் ஆங்கிலத் தட்டெழுத்து இயந்திரத்திலிட்டே கோடிட வேண்டும். இல்லையேல் எழுதுகருவியாற் கோடிடவேண்டும். இவ்வாறு செயற்படுவதன் சிரமமும் காலவிரயமும் சொல்லுந்தரமன்று.

இவ்வடையாளங்களின் இன்றியமையாமையை உணர்ந்தே 1971 இற் புதிய விசைப்பலகை அமைப்பொன்றனை உருவாக்கிய பொழுது இவ்வடையாளங்களை அப் புதிய விசைப்பலகை அமைப்பில் இடம்பெறச் செய்தேன். இம்மாற்றங்களைச் செய்தற்கு நடைமுறைக்கு மாறுபாடு ஏற்படாவகையில் எழுத்துச்சீர் திருத்த முறையைப் பின்பற்றி சில மாற்றங்களை மேற்கொண்டேன். இவற்றினை-The Tamil typewrting System A Critqiue of Existing Key Board and a Proposal என்னும் எனது நூலிற் காணலாம். இவை மாத்திரமின்றி எழுத்துச் சீர்திருத்தத்தினை நடைமுறைக்குக் கொண்டுவரின் அதனல் ஏற்படக்கூடிய நன்மைகள் அலுவலக உபகரணங்களைப் பொறுத்தவரையிற் அளவிடற்கரியது என்றே கூறவேண்டும். இச்சீர்திருத்தமுறை எவ்வித பாதிப்பையும் மொழிக்கு ஏற்படுத்தப்போவதில்லை.

1979 பெப்ரவரி கலைமகளில் வெளிவந்த 'எழுத்துச்சீர் திருத்தத்தால் தமிழ்த்தட்டெழுத்திற்கு நன்மையுண்டா' என்ற கட்டுரை தமிழ்த் தட்டெழுத்தார்களை மாத்திரமன்றி பல அறிஞர்களையும் பிறரையுங்கூடத் தவறான பாதையில் இட்டுச் சென்றுள்ளது - செல்கின்றது என்பதனை அதனை அடியொற்றி அறிஞர்கள் கூறும் கருத்துக்களைச் செவிமடுக்கும் போது தெள்ளிதின் விளங்குகின்றது.

இக்கட்டுரை எழுத்துச் சீர்திருத்தத்தைக் காட்டிலும் தமிழகவரசுதமிழ்த்தட்டெழுத்துப் பயின்றவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்புக்களை வழங்கவில்லை என்ற குறைபாட்டினைச் சுட்டிக்காட்டுவதாகவே அமைத்துள்ளதெனின் மிகையாகாது. இதனலேயே ஆசிரியர்.

'இந்த நிலையில் தமிழ்த் தட்டச்சுக்காக எனத் தமிழ்எழுத்துச் சீர்திருத்தம் செய்ய முன் வந்திருப்பது வேதனைப்படத் தக்க ஒன்ருகும்' என பிரலாபிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இனி இவர் கூறும் எழுத்துச் சீர்திருத்தக்குறைபாடு பற்றி சிறிது நோக்குவோம்.

'இப்போது 'ஐ' என்பதற்கு ஒரு முறை தட்டினுல் போதும். இனி 'அய்' என்பதற்கு 'அ' வுக்கு ஒருமுறை 'ய' வின் மேலுள்ள புள்ளிக்குஒரு முறை யாவுக்கு ஒருமுறை ஆகமூன்று முறைகள் தட்டவேண்டும் அதுபோல் 'ஔ' என்பதற்கு இரண்டு முறைகள் என்ருல், இப்போது 'அவ்' எனபதற்கு மூன்று முறைகள் தட்டவேண்டும்.' ணை, லை, ளை, னை, என்பவற்றை இரண்டு இரண்டு முறைகள் தட்ட வேண்டும் என்ருல், இப்போதுணை,லை, ளை, னை, இரண்டு முறைகளே தட்டவேண்டும். இவற்றில் தட்டும் முயற்சி எதுவும் குறைவில்லை. அதேநேரத்தில் 'ணு''ரு'ணு' ஆகிய மூன்றுக்கும் ஒவ்வொருமுறை தட்டினுல் போதும். இப்போதோ ணா, றா, னா எனஇரண்டுஇரண்டு முறைகள் தட்டியாக வேண்டும். ஆக எல்லாவற்றுக்குமாக முன்பு 14 முறைகள் விசையைத் தட்டியதற்குப் பதிலாக இப்போது 20 முறைகள் தட்டும்படி ஏற்படுகிறது. அடுத்து தட்டச்சுச்செய்கிற பக்கம் அதிகரிக்கப்போகின்றது. அளவு குறைந்துவிடும். இதைத்தவிரக் காலச்சேமிப்பு ஏற்படாது. தட்டச்சாளர்களின் சிரமம் குறையவும் இடமில்லை.'

மேலே இக்கட்டுரையாசிரியர் கூறியுள்ளது போன்று 'ஐ' என்ற எழுத்தையோ அல்லது ணு ரு,ணு என்ற எழுத்துக்களையோ ஒவ்வொருமுறை தட்டுவதனற் பொறித்து விடமுடியாது. ஏனெனில் இவ்வெழுத்துக்கள் 'க''த'என்றும் எழுத்துக்களைப் போலல்லாது நிகழ்வுகள் (Frequencies) குறைவுற்றுள்ளதால்,விசைப்பலகையின் மேற்பாகத்தில் இடம் பெற்றுள்ளன மேற்பாக எழுத்துக்களை பொறிக்கின்றபொழுது மாற்றமுக்கி விசைக்கு ஒருமுறையும்எழுத்துக்களுக்கு ஒரு முறையுமாக இருமுறைகள் கட்டைகளைப் பொறித்தல் வேண்டுமேயொழிய ஒரு முறையிலே பொறித்தல் இயலாது. கீழ்வரிசையில் உள்ள எழுத்துக்களை மாத்திரமே ஒரு தட்டிற்பொறிக்கமுடியும்.

எனவே ண. ற. ன. அ என்னும் இவ்வெழுத்துக்களுக்கு'ா' அரவு இட்டும் ணை லை, ளை, னை என்பவற்றிற்கு 'ஐ' கார இணைப்பைக் குறிக்கும் தலைக் குறிகுப் பதிலாக சங்கிலிக் கொம்பிட்டும் எழுதும் மரபு பின்பற்றப்படும்பொழுது ஐந்து எழுத்துக் களுக்குரிய இடங்கள் இன்றியமையாததெனக் கருதப்படும் குறியீடுகளையும் பின்னங்களையும் அமைத்தற்கு வழிவகுக்கும் என்பது மறுக்கமுடியாததே.

எனவே கட்டுரையாசிரியர் 14 முறைகள் என்று முன்னர் கூறியது போலல்லாது ஐ,ஔ, ணு,ரு,ணு,ணை,லை,ளை,னை' என்னும்9 எழுத்துக்களைப்பொறிக்க 18 முறைகள் தட்டுதல் வேண்டும். ஐ.ஔ என்பன அய்-அவ் எனப் பொறிக்கப்படின் அவற்றிற்குமாத்திரம்ஒவ்வொருதட்டுக்கள் கூடுதலாகப் பொறித்தல் வேண்டும்-இவை இப்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. எனவே மேலதிகப் பொறிப்புக்களுக்கு இடம் இல்லை.இவ்விரு எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வருவன. 'ஐ' என்றும் எழுத்து40,000 எழுத்துக்களில் எட்டுமுறையேஇடம் பெற்றுள்ளது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஆனல், இவ்வித சிரமைப்பு மேற்கொள்ளப்படும் பொழுது தேவையான குறியீடுகள் அமைக்கப்பட்ட பின்னர் விரல்களுக்குள் நேரடியாகவும் வசதியாகவும் அடங்காது புறம்பாக அமைக்கப்பட்டுள்ள எழுத்துகளையெனினும் விரல்களுக்குள் நேரடியாக அடங்கக் கூடியவகையில் அமைக்க முடியும் என்பதும் மறுக்க முடியாததே. எனவே தமிழகவரசு தமிழ்த்தட்டெழுத்துப் பயின்றவர்களைக் கவனிக்காததே எழுத்துக்சீர்திருத்தத்தில் அக் கட்டுரையாசிரியருக்குக் காழ்ப்புணர்வு ஏற்படக் காரணமாயிற்றென்பது கண்கூடு.

இதேபோன்று தமிழகத்தில் நடைபெற்ற அனைத்துலகத்தமிழராய்ச்சி மகாநாட்டின் பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற 'கலைக் கோல' நிகழ்ச்சியில் இடம்பெற்ற கருத்துப்பரிமாறலிலும்.

முன்னையவரை அடியொற்றி எழுத்துச்சீர்திருத்தம் எனக் கருதி நடைமுறைக்குக்கொண்டுவந்துள்ள 'ணு, ரு, ணு' என்னும் எழுத்துகளுக்கு'ா' இட்டு எழுவது பக்க அதிகரிப்பினை உண்டுபண்ணும் எனக் கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது. 'பக்க அதிகரிப்பு' என்று கூறியதைச் செவிமடுத்த பலர் இதனைப் பலபக்க அதிகரிப்புகள் உண்டாகலாம் என்று கருதத் தவறியிரார். எனவே முதலில் இவ்வெழுத்துக்களின் பயன்பாடுபற்றிச்சிறிது நோக்குவோம். 40,000 எழுத்துக்களடங்கிய விடயத்தினைப் பொறிக்கின்றபொழுது.ணு,ரு, ணு? ஆ என்பவை முறையே 9,125, 149, 176 முறைகளே இடம் பெறுகின்றன. (முற்காட்டிய எனது நூலின் முதலாம் இரண்டாம் அட்டவணைகளில் தமிழ் எழுத்துக்களினதும் குறியீடுகளினதும் நிகழ்வுகளை எடுத்துக் காட்டியுள்ளேன்.)எனவே மொத்தத்தில் 50முதல் 60பக்கங்கள் வரையுள்ள ஒருவிடயத்தில் 10முதல் 12வரிகள் அதாவது கிட்டத்தட்ட ஒரு சிறு பந்தி அமைப்பில் அதிகரிப்பினை ஏற்படுத்தலாம். அதைவிட ணு,ரு,ணு,ஆ என்ற எழுத்துகளுக்கு'ா'அரவு இட்டு எழுதுவதனுல் பக்கக் கணக்கில் பக்க அதிகரிப்பு ஏற்படமாட்டாது. எனவே பக்க அதிகரிப்பென்பது ஐயப்பாட்டினுலெழுந்த திரிபெனவே பொருந்துவதாகும். இதனுலேயே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள-கொண்டுவரபபடவிருக்கும் எழுத்துச் சீர்திருத்தத்தினைவிட ள,நழன, றழர என்பவற்றிலே மாற்றம் முக்கியம் என அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தமைக்குக் காரணமாகலாம்

மேலும் இந்த எழுத்துச்சீர் திருத்தம் பற்றித் தமிழகவரசு ஈழத்தவர்களுடனே மலேசியர்களுடனே கலந்தாலோசிக்கத் தவறிவிட்டது என்றவொரு சிறு காழ்ப்புணர்வு கலைக் கோல நிகழ்ச்சியிலே சிலரது கருத்துப் பரிமாறலிலே தொனிப்பதை அவதானிக்கக் கூடியதாகவுமிருக்கின்றது.

எனவே எழுத்துச்சீர்திருத்தத்தினை புறக்காரணம் இன்றி அகக்காரணம் கொண்டு எதிர்ப்பது நன்மை பயவாதாதலால் இதனைக் காழ்ப்புணர்வின்றி அணுகுவதோடு எமது அரசுக்கும் அறிவித்து அரசினுல் வெளியிடப்படும் பாடநூல்களில் இம்மாற்றங்களைப் பிள்ளைகளின் நன்மைகருதியெனினும் மேற்கொள்ள பேராசிரியர்களும் பேரறிஞர்களும் முயல்வார்களாகுக.

# இலக்கியத்தில் இனியதொடர்

'நின்
எறியரோக்கியசிறு செங்குவளை
ஈயென இரப்பவு மொல்லாள்'
(பதிற்றுப்பத்து)

புலவர் ம.பார்வதிநாதசிவம்

காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பாற் புலவர் வீரத்தைப் பாடுவதில் வல்லவர். அதே நேரத்தில் உள இயல் உண்மைகளையும் சிறப்புறக் கூறக் கூடியவர். பதிற்றுப் பத்தில் ஆரும் பத்தை அவரே பாடியுள்ளார். ஆரும் பத்தில் பாடப்பெற்ற மன்னன் ஆடு கோட் பாட்டுச் சேரலாதன்.

சேரலாதன் ஒருநாள் ஆடல் மகளிரோடு தானும் சேர்ந்து ஆடிவிட்டு அந்தப்புரம் திரும்புகிருன். இதனை அறிந்த அரசிக்கு ஊடல் உண்டாகிறது. கோபம் அடைந்த அரசி தன் கையிலே இருந்த சிறு செங்குவளை மலரால் அரசனுக்கு எறிவதற்கு ஓங்கினுள். அரசனுடைய கை கொடுப்பதற்காக் கவியுமே அல்லாமல் பிறரிடம் இரப்பதற்காக என்றும் மலர்வதில்லை. அப்படியிருந்தும் ஓங்கிய மலரைக் கீழே விழாதவாறு காப்பதற்காக மலரை ஈவாய் என்று இரந்து மலர்கிறது. அரசி ஓங்கிய மலரை எறியவில்லை. ஆயினும் கோபத்தைப் புலப்படுத்த நீயார் என்ருள். மகளிரிடத்து மென்மை உடையவராகவும் போர்க் களத்தில் வன்மை உடையவராகவும் நடந்து கொள்தலே ஆடவர்க்குச் சிறப்பு.

போர்க்களத்தில் அஞ்சாது போர் புரியும் சேரலாதன் அந்தப் புரத்தில் மனைவியின் கோபத்துக்கு அஞ்சி அவள் எறிய ஓங்கிய குவளை மலருக்காக இரு கைகளையும் நீட்டி இரந்து நிற்கிருன். மனைவியின் நியாயமான கோபத்துக்கு அஞ்சிய சேரலாதனின் அன்புள்ளம் காக்கை பாடினியாரைப் பெரிதும் கவர்ந்துவிட்டது

அவன்மெல்லியல்பு வாய்ந்த மனைவியின் சிறுகோபத்துக்கும் அஞ்சுபவன். அதே வேளை அவள் கையில் இருக்கும் குவளைமலர் நிலத்தில் விழுந்தால் மலர்சிதைந்து விடுமோ என்று மலருக்காகவும் ஏங்குபவன். மங்கைக்கும் மலருக்கும் இரங்கும்நல்லுள்ளம் காக்கை பாடினியாரின் பாராட்டுக்குரியதாகிறது

# களஞ்சியம்

## லயம் பாட்டானது

அதி காலை.

'ஓம் ஓம்' எனத் தொடர்ச்சியாக வரும் பிரணவநாதம்—இது தில்லைச் சிற்றம்பலவனின் கண்டாமணி அழைப்பு.

தக்க காலம் வாய்த்திருக்கிறது. விரைந்து வாருங்கள், என்று அழைக்கிறது; 'ஈசன் மூலபண்டாரம் வழங்குகிறான் வந்து முந்துமினே' என்று கெஞ்சுகிறது.

ஆடலை வல்லான் கோயில் வாசலில் மக்கள் பலர் வணங்கி நிற்கின்றனர். நல்ல களையான தோற்றப் பொலிவுடன் இருவர்.

ஒருவர், பிரபல நாதஸ்வரக் கலைஞர் காருக்குறிச்சி அருணாசலம்; மற்றவர், தவில மேதை நீடாமங்கலம் ஷண்முகவடிவேல்,

கோவிலின் வடகிழ்த் திசையில் ஆயிரக்கால் மண்டபம் ஆயிரம் தூண்களையுடைய இந்த மண்டபம்; 'ராஜசபை' இங்கேதான் நடராஜப்பெருமான் உற்சவ காலங்களில் எழுந்தருளித் திருமஞ்சனம்கொண்டருளுவார்.

இன்று—

காருக்குறிச்சி, நீடாமங்கலம் தனது இசை அருவியால் எம் பெருமானுக்குத் திருமஞ்சனமாட்டுகின்றனர். அதனைத் தொடர்ந்து—அங்கே திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் அந்த நாதவெள்ளத்தில் மூழ்கி எழுகின்றனர் என்ன பேரானந்தம்!

இராகத்தின் பிரிவுகள் என்னென்ன உண்டோ அவை எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக காருக்குறிச்சியின் கருவித்துளைகள் வழியாக உள்ளே சென்றன; வெளியேற மனங்கொள்ளாது அங்கேயே உறங்கத் துடிக்கின்றன.

ராஜசபையில் நாதமஞ்சனம் காருக்குறிச்சி தியாகராஜ சுவாமிகளின் 'நகுமோமு' என்ற ஆபேரி ராகக் கீர்த்தனையை வாசித்துக் கொண்டிருக்கிறார்.

அடுக்கடுக்காக வந்த சங்கதிகளை நீடாமங்கலம் தமது தவில் அழகாகவழங்குகிறார். இதனை அவதானித்த காருக்குறிச்சி சரணத்தை வாசிக்காது விட்டுவிட்டார். நீடம்மங்கலம் ஷண்முகவடிவேல் அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்து முடித்தார். லயம் பாட்டானது! ஷண்முக வடிவேல் சரணம் என்றது

பிரபலதவில் வித்துவான் கார்த்திகேசு கணேசரத்தினம் (பெரிய கணேசு) வீட்டிலேதான் தங்கினார். தவில் மேதை விஸ்வலிங்கம் தட்சிணாமூர்த்தி ஷண்முகவடிவேலைச் சந்தித்தார்.

மிருதங்கச்சொற்கள் அத்தனையையும் அதேமிருதங்க நாதத்துடன் ஷண்முகவடிவேல் தவில் வாசித்ததைக் கண்ட தட்சிணாமூர்த்தி மலைத்தார். விளைவு,

தட்சிணாமூர்த்தி நீடாமங்கலத்தைச் சிக்கெனப் பிடித்துவிட்டார். மூன்று மாதங்கள் கழிந்தன...நீடாமங்கலத்தின்கண்கள் அகல விரிந்தன, தட்சிணாமூர்த்தியை நீடாமங்கலம் பின்பற்றத் தொடங்கினார், அந்தக் குறுகிய காலத்தில் நீடாமங்கலம்தான் தட்சிணாமூர்த்திக்குக் கரவாது வழி காட்டினார் என்று பெரிய கணேசு அவர்கள்சொல்லிச்சொல்லி மகிழ்வார்கள்,

இசைமஞ்சனத்தில் காருக்குறிச்சி அறுபத்தாறு நிமிடங்கள் ஹிந்தோள ராகத்தை வாசித்தது மறக்கமுடியாத ஒன்று ஹிந்தோளம் பஞ்சம வர்ஜராகம்; தைவதம் நுட்பசுருதி; ஸ்வரங்கள் எல்லாம் கோமள ஸ்வரங்கள், இந்த இராகத்தின் சிறப்பு.

உடலின் ஜுரத்தைத் தணிக்கும்; இதத்தைச்சேர்க்கும். மறுநாள் அதிகாலை நான்கு பதினைந்துக்குக் கச்சேரி நிறைவுற்றது, மீண்டும்

தில்லைச் சிற்றம்பலவனின் கண்டாமணி 'ஓம்' என்று ஒலிக்கிறது; பூபாளம் பாடுகிறது.

**தர்மபூபதி சிதம்பரநாதன் B. Music**

## மூலம் ஒன்று; மொழிபெயர்ப்பு இரண்டு

The difference between verse and poetry is like the difference between two dry cell batteries,, alike in appearence and at thesametime, one charged with electricity and the other dead.

VERNON KNOWLS

ஏதோ இரண்டு எலக்ட்ரிக் பாட்டரி, சாதாரணப் பார்வையில் ஒன்று போலத்தான் இருக்கும். ஒன்றைத் தொட்டால் சக்தி பிறக்கும்; மற்றொன்றைத் தொட்டால் சும்மா மண் ஆந்தை மாதிரி கிடக்கும் இது போலத்தான் கவிதைக்கும் செய்யுளுக்கும் உள்ள வித்தியாசம்.

தொ. மு.
பாஸ்கரத் தொண்டைமான்

கவிதைக்கும் செய்யுளுக்கும் உள்ள வித்தியாசம் மின்சாரம் பொதிந்த பாட்டரிக் குழலுக்கும், மின்சாரம் தீய்ந்துபோன குழலுக்கும் உள்ள வித்தியாசம்தான்.

சிதம்பர ரகுநாதன்

முதலாவது அண்ணன் செய்தது; மற்றையது தம்பி செய்தது. இதில்அப்பன், ஆன மொழிபெயர்ப்பு எது?

வி கேயூரன்

## ஒரு கேள்வி இரு பதில்கள்

அந்தஆச்சிரமத்தில்தங்கி இருப்போர் எக் காரியம் செய்யப் புகினும் தலைவரின் அனுமதியைப் பெறவேண்டும்:

ஒருநாள் ஆச்சிரமத்தில் தங்கியிருந்த இருவர் புகைப்பிடிக்க எண்ணி ஆச்சிரமத் தலைவரின் அநுமதியை நாடினர்—

அவர்களில் ஒருவர் தலைவரிடம் சென்று ''புகைப்பிடித்துக்கொண்டு தியானஞ் செய்யப் போகின்றேன்'' என்றார். அவருக்கு அநுமதி மறுக்கப்பட்டது,

தலையைத் தொங்கவிட்டவாறு வெளியே வந்த அவர் இரண்டாமவர் சுருள் சுருளாகப் புகைவிட்டனுபவித்துக் கொண்டிருப்பதைக் கண்டு ''உங்களுக்கு மட்டும் அநுமதி எப்படிக் கிடைத்தது'' என வினவினார்.

''தியானஞ் செய்கையில் புகைக்கலாமா? எனக் கேட்டேன். உடனே அநுமதி கிடைத்தது'' என்றார் இரண்டாமவர்.

## காலமறிந்து செய்யாத உதவி

பூனையொன்று உயரமான மரமொன்றில் எப்படியோ ஏறிவிட்டது. ஆனால் கீழே இறங்கத் தத்தளித்துக் கொண்டிருநதது.

இந்தச் செய்தி பத்திரிகைக் காரியாலயமொன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

ஆசிரியர் நிருபரையும் படப்பிடிப்பாளரையும் ஏணி ஒன்றுடன் அவ்விடத்துக்கு அனுப்பி வைத்தார்.

அவர்கள் அங்கு சென்றபோது பூனை தானாகவே கீழே இறங்கிவிட்டிருந்தது நிருபருக்கும் படப்பிடிப்பாளருக்கும் ஏமாற்றம்.

நிருபருக்கு ஒரு அற்புதமான யோசனை தோன்றியது. ஏணியை மரத்தில் சாத்தி அதன் மூலம் பூனையை மரத்தின் மேலே கொண்டு சென்றார்.

பின் பூனையைத் தான் காப்பாற்றி மரத்திலிருந்து கீழே கொண்டு வருவது போல் படப்பிடிப்பாளரைக் கொண்டு படம் பிடிக்கச் செய்தார்.

அடுத்த நாள் அந்தப் படத்தைப் பத்திரிகையில் வெளியிட்டுத் தங்கள் காருண்ய செயலைப் பற்றியும் தம்பட்டம் அடித்திருந்தார்கள்.

இந்தப் படமும் செய்தியும் வாசகர் மத்தியில் பெரும் பரபரப்பையும் வரவேற்பையும் ஏற்படுத்துமென ஆசிரியர் எதிர்பார்த்தார்.

ஆனல் நடந்ததோ வேறு. அன்று வெளிவந்த இன்னொரு பத்திரிகை நிருபர் பூனையை மரத்தில் ஏற்றுவதைப் படம் பிடித்துப் போட்டிருந்ததைப் பார்த்த ஆசிரியர்மூர்ச்சை அடைந்தார்.

## கடவுளை நம்பி கையைவிட மாட்டார்

மலைப்பாதையில் நடந்து கொண்டிருந்த ஒரு உல்லாசப் பயணி கால் தவறிப் பெரும் பள்ளத்தை நோக்கிக் கிடு கிடுவெனக் கீழே விழ்ந்து கொண்டிருக்கையில் மலைச்சரிவில் வளர்ந்திருந்த மரமொன்றின் கொப்பினைப் பற்றிக் கொண்டு அந்தரத்தில் தொங்கினார்.

பலமற்ற அந்தக் கொப்பு அவர் எடையைத் தாங்க முடியாது எந்த நிமிடம் ஒடிந்து விழுமோ என்ற நிலை. அவர் உயிர் அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

''மேலே யாராவது இருந்தால் எனக்கு உதவி செய்யுங்கள்'' என அவலக்குரல் எழுப்பினர்—

''யாமிருக்கப் பயமேன்? என்மேல் நம்பிக்கைவைத்து மரக்கொப்பிலிருந்து உங்கள் கரங்களை எடுங்கள்'' என்று மேலேயிருந்து அசரீரிக் குரல் ஒன்று கேட்டது—

''யார் நீங்கள்?'' என அவநம்பிக்கை தொனிக்க வினவினர் அந்தப் பயணி—

''நான் தான் கடவுள்'' எனப் பதில் வந்தது—

சற்றுச் சிந்தித்த பயணி மேலே வேறு யாருமில்லையா? என மீண்டும் குரல் கொடுத்தார்.

## கல்லறை வாசகம் ஒன்று

ஒலிவர் கோல்ட்ஸ்மித் ஆங்கிலக் கவிஞர்; நாவலாசிரியர்.

அவர் மறைந்தபொழுது கல்லறையில் என்ன வாசகத்தைப் பொறிக்கலாம் என்று அவர் நண்பர்கள் ஆராய்ந்தனர். வாசகத்தை எழுதும்பணி ஜோன்ஸனிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆங்கில மொழியைத் தம் எழுத்தால் வளம் படுத்திய கோல்ட்ஸ்மித் பற்றிய வாசகம் ஆங்கிலத்திலேயே அமைவது தான்முறை என்று பேர்க், கிபன், றெநோல்ட்ஸ் முதலிய அவர் நண்பர்கள் அபிப்பிராயப் பட்டனர்.

'இலத்தீன் அல்லாத வேறு மொழியில் எழுதி வெற்மினிஸ்டர் தேவாலயச் சுவரைக் களங்கப்படுத்தேன்' என்று அடம் பிடித்தார் ஜோன்ஸன். நண்பர்கள் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று.

ஜோன்ஸன் இலத்தீனில் எழுதிய வாசகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு இது தான்:

அவர் தொடா விஷயமென்றெதுவுமே இல்லை தொட்டவர் துலக்காப் பொருளெதும் இல்லை.

## ஓவியக் கலைஞரின் விவேகம்

ஓவியக் கலைஞர் ரவிவர்மாபம்பாயில் இருந்தபோர்து ஓர் ஆங்கிலப் பெண்மணி விருந்துக்கு அழைத்தாள். விருந்து முடிந்தபோது கடுமையான மழை பெய்து கொண்டிருந்தது. அந்தப் பெண்மணி அங்கு இருந்த அறையொன்றில் உள்ள குடையைக்காட்டி அதை எடுத்துச்செல்லுமாறு ரவிவர்மாவுக்குக் கூறினாள். ரவிவர்மா குடையை எடுக்க முயன்றபோது அது ஓவியம் என்பது தெரியவந்தது ரவிவர்மாவுக்குச் சங்கடமாக இருந்தது

சில வாரங்களின்பின் ஆங்கிலப்பெண்மணியை ரவிவர்மா விருந்துக்கு அழைத்தார். அப்பெண் ரவிவர்மா வீட்டிற்குச் சென்றதும் ஒரு விசாலமான அறையில் ஒரு மேசையைச் சுற்றிப் பலர் இருப்பதைக் கண்டாள். ''நீங்களும் அவர்களுடன் உட்காருங்கள்'' என்று ரவிவர்மா கூறியதும் ஆங்கிலப் பெண்மணி அறைக்குள் செல்ல அடி எடுத்து வைத்போது அது ஓர்ஓவியம் என்பதை அறிந்து வெட்கப்பட்டாள்.

## சிரிப்பென்னும் தெள்ளமுது

புத்தகப்பதிப்பாளர் (தன் பெண் காரியதரிசியிடம்) கண்ணே! உன்இதழில் என் முத்தத்தைப் பதிக்கலாமா?

காரியதரிசி: பதிப்பதில் எனக்கொன்றும் ஆட்சேபனையில்லை, ஆனல் தயவு செய்து அதை வெளியிட வேண்டாம்

கட்சிக்காரர்; நீங்கள் வயதில் மிகவும் இளையவராக இருக்கின்றீர் என் வழக்கை எடுத்து நடத்துவதற்கு உங்கள் அனுபவம் போதுமா என யோசிக்கிறேன்

வக்கீல்: உமது வழக்கு நடந்து கொண்டிருக்கையிலேயே எனக்குப் போதிய அனுபவம் ஏற்பட்டு விடுமென நினைக்கிறேன்

வைத்தியர்; உமது பிரச்சினை என்ன?

நோயாளி: அதை நீங்கள் கண்டுபிடிப்பதற்குத்தானே உங்களிடம் வந்தேன்.

வைத்தியர்: அப்படியானல் உங்களை வேறொரு வைத்தியரிடம் அனுப்புகிறேன் அவருக்குத்தான் கேள்வி கேட்காமலேயே நோயைக்கண்டு பிடிக்கும் திறமை உண்டு

:—யாரவர்?

மிருகவைத்தியர்

பெண்காசாளர்:- வர வர என் அழகு குறைகிறது.

முதலாளி:- அப்படி ஏன் சொல்கிறீர்கள்

பெண்காசாளர்:- முன்னரெல்லாம் எங்கள் ஆண் வாடிக்கைபாளர்கள் நான் கொடுக்கும் மீதிச் சில்லறைகளை எண்ணிப்பார்ப்பதில்லை ஆனல் இப்பொழுது எண்ணிப் பார்க்கிறார்கள்.

## யாழ். சைவ ..

[10ம்-பக்கத்தொடர்ச்சி]

தாமோதரம்பிள்ளை இருந்தாரென்பதற்குப் போதுமான ஆதாரங்களை அவரது வரலாற்றில் காண முடியவில்லை.''

என சி. வை. தாமோதரம்பிள்ளை– ஓர் ஆய்வு நோக்கு என்ற தம் ஆய்வுநூலிற் குறிப்பிடுவர். இம் மேற்கோளை அப்படியே "அமெரிக்க மிஷனும் இலங்கையில் தமிழ்வளர்ச்சியும்.என்ற நூலில் அநுவதித்து சி. வை. தாமோதரம்பிள்ளை சைவசமயத்தை வளர்க்கவில்லை; தமிழையே வளர்த்தாரென்பர் எஸ். ஜெபநேசன் ஆயின்,

''...அடியேனது உள்ளத்தில் பதிந்த சைவவித்து திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான், பரசமய கோளரி சபாபதி நாவலர் அவர்கள், சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பி. ஏ. பில் முதலியோருடைய சொற்பொழிவு கேட்கும் பேற்ருலும் என்னேடு உடனிருந்து சைவம் பயின்ற திரு. தெ. ச த. சுப்பிரமணியபிள்ளை, தெ. பொ. அறம்வளர்த்த நாதபிள்ளை முதலிய பேரறிஞர்களின் தோழமையாலும், துணையாலும் முளைத்து, வளர்ந்து என்னையும் சைவசித்தாந்தப் பணிபுரியும் திருவுடை ஒருவனுக்கிற்று.''

எனச் சித்தாந்தப் பேராசிரியர் தூத்துக்குடி ந. சிவகுருநாதபிள்ளை தமது சிவஞான சித்தியார் ஆராய்ச்சி நூல் முன்னுரையில் (மறுபதிப்பு பக்கம் 10–11) குறிப்பிடுவர். அதே நூலின் தோற்றுவாய் (பக்கம் 7) என்ற பகுதியில்,

''யாழ்ப்பாணம் வித்துவான் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் திருவாவடுதுறை ஆதீனம் 16ஆவது பட்டத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீல ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் அருளிய பதவுரையை (சித்தியார்) வெளியிட்டார்கள்''

எனவும் சிவகுருநாதபிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

நாவலர் வழியில் சி. வை. தாமோதரம்பிள்ளை சைவசித்தாந்தக் கல்விமரபு துலங்கவென ஆற்றிய பணிகள் ஆராய்ச்சியாளருக்கு மெட்டாத இருட்பிரதேசமாகவே உள்ளன என்பதனைத் தெளிந்துகொள்ள இவ்வெடுத்துக்காட்டுக்களே போதுமானவையாகும். அவர் சைவசித்தாந்தக் கல்விப் பணி பற்றிய ஆய்வு விரிவாக மேற்கொள்ளப்படுதல் அவசியமென்பதை இவ்விடத்திற் கட்டிக்காட்டல் பொருத்தம்.

### நா. கதிரவேற்பிள்ளை 1871 - 1907

செந்திநாதையர் போலவே மாயாவாதத்தைக் கண்டித்துச் சைவசித்தாந்தப் பெருமையை நிலைநிறுத்தத் தம் வாழ்நாளை அர்ப்பணித்தவர். மாயாவாத கண்டன சண்டமாருதம் சோமசுந்தர நாயகர் வேண்டுகோளுக் கிணங்கி மாயாவாத கண்டனம் புரிந்து செந்திநாதையர் தலைமையில் மாயாவாத தும்ச கோளரி என்ற பட்டம் பெற்றவர். இவரது சொற்பொழிவுகள் சைவசித்தாந்தக் கல்வி மரபு உயர்ச்சிபெற உதவின. அருட்பா, மருட்பா வழக்கில் இவர் பெற்ற வெற்றி தமிழ் வேதங்களின் உயர்வை மக்களுணர்ந்து அவற்றை ஓதுவதற்கு ஊக்கமளித்தது. அற்பாயுளில் இவர் மறைய நேர்ந்தது சைவ உலகின் துர்ப்பாக்கியமாகும்.

நாவலரின் நேரடி மாணவர்கள் நாவலரின் மாணவ பரம்பரையினர் எனக் குறிப்பிடத் தகுந்தோரின் சைவசித்தாந்தக் கல்விப் பணிகளும் அப்பணிகளாற் சைவசித்தாந்தக் கல்விமரபு போற்றப்பட்டவாறும் ஆராயப்பட்டன.

இனி, சைவசித்தாந்த மகா சமாஜம் திருப்பாதிரிப் புலியூரில் தோற்றுவிக்கப்பட்டதன் பின் (1905–07–07) ஈழத்தின் சைவசித்தாந்தக் கல்வி மரபில் ஏற்பட்ட மாற்றங்கள், வளர்ச்சிகள் குறித்து ஆராய்தல் பொருத்தமுடையதாகும்.

திருக்கோவலூர் ஆதீனம் ஞானியார் அடிகளின் தூண்டுதலால் சைவசித்தாந்த மகா சமாஜம் தோற்றுவிக்கப்பட்ட நாளில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் அந்த நிறுவனத்துக்கும் உள்ள தொடர்பு மிக மிக இறுக்கமானதாக இருந்து வருவது குறிப்பிடத்தகுந்தது. இந்த நிறுவனம் பன்னூற்றுக் கணக்கான சைவப்புலவர்களை உருவாக்கியது. ஆண்டுதோறும் சமாஜம் நடத்திய மாநாடுகளும் மாதந்தோறும் வெளியிட்டு வந்த சஞ்சிகை ஆகிய 'சித்தாந்தம்' திங்கள் ஏடும் சைவசித்தாந்தக் (கல்வி மரபு வேரூன்றப் பெரிதும் உதவின.

1960ம் ஆண்டில் சிதம்பரத்தில் நடந்த முதலாவது ஆண்டு விழாவில் தலைமை வகித்தவர் ஈழத்துப் பெரியாராகிய சேர். பொன் இராமநாதன் ஆவர். இவர் ஆறுமுக நாவலராற் சட்ட நிருபண சபைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட விதந்துரைக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1906 ம் ஆண்டில் மைரண்டி பெல்ப்ஸ் என்பாரின் வேண்டுகோளிற்கிணங்க அமெரிக்காவிற் சமயச் சொற்பொழிவுகளை இராமநாதன் நிகழ்த்தியுள்ளார்.

இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வரக் கல்லூரிகள் சைவ நெறியினர் கற்கவென அமைக்கப்பட்ட ஆங்கில உயர் கல்விக் கூடங்கள் 1975–ல் இருந்து யாழ் பல்கலைக்கழகமாக அவர் அமைத்த பரமேஸ்வரக் கல்விக்கழகம் பயன்தருவது குறிப்பிடத்தக்கது இராமநாதன் விரும்பியது போல் அது சைவசமய வளர்ச்சிக்குதவும் கலாசாரப் பல்கலைக்கழகமாக அமையவில்லை எனச் சிலர் குறைப்படுவதுண்டு. எனினும் இந்து நாகரிகத்துறை ஒன்று அங்கு அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இராமநாதனைத் தொடர்ந்து அம்பலவாணர் கனகசபை (1909) கா. பொன்னம்பலபிள்ளை (1912) அம்பலவாண நாவலர் (1915) சபாரத்தின முதலியார் (1916) சுவாமிநாத பண்டிதர் (1334)சுவாமி விபுலாநந்தர் (1935)வேலுப்பிள்ளை நாகலிங்கம் (1953) சேர். கந்தையா வைத்தியநாதன் (1954) சுப்பையா நடேசன் (1955) எனக் காலத்துக்குக் காலம் யாழ்ப்பாணச் சைவ சித்தாந்தக் கல்வி மரபில் ஊறித் திளைத்த பெரியோர் சமாஜ விழாக்களிலே தலைமை தாங்கியமை யாழ்ப்பாணத்துச் சைவசித்தாந்தக் கல்வி மரபுக்குத் தமிழ்நாட்டில் அளிக்கப்பட்ட கணிப்பு மிக்க கௌரவமாகக் கருதப்படின் அது தவருகாது.

சமாஜத்தின் மூன்ரும் ஆண்டு விழா 1948 ம் ஆண்டு முதன் முதலில் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தப்பட்டமையும் தொடர்ந்தும் 1950-ல் கொழும்பிலும் 1954–ல் திருக்கேதீஸ்வரத்திலும் சமாஜத்தின் பவளவிழா 1981–ல் தெல்லிப்பளையிலும் கொண்டாடப்பட்டமையும் நாவலரும் அவர் வழிவந்தோரும் ஆற்றிய பணியால் விளைந்த சைவசித்தாந்தக் கல்விமரபின் பெறுபேறே

---

## உமிச்சாம்பரின் ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புக்கள் குறைந்த உற்பத்திச் செலவு, குறைந்த நிறைவு, அமிலங்கள் காரங்கள் என்பவற்றிற்கான எதிர்ப்பு என்பனவாகும். இங்ஙனம் தயாரிக்கப்படும் தடுப்புப் பொருள்கள் வெப்பத்தை கடத்தாத இயல்பினைக் கொண்டிருப்பதால் இவை உலகளாவிய ரீதியில் உபயோகமாகின்றன.

## உண்மைச்

9–ம் பக்கத் தொடர்ச்சி

ரணமாக சைவ சமயத்தவர்களுடைய பயிற்சிகளுள் ஒன்ருகிய விபூதி தாரணஞ் செய்பவர்கள் அதனேடு சிவாலய தரிசனஞ் செய்பவர்கள், அவற்ருேடு சைவர்களுக்குரிய வேறு பயிற்சிகளையும் செய்பவர்கள் முதலாய பல திறத்தினரும் சைவர்களென்றே அழைக்கப்படுகின்றனர். இவ்வாறே ஏனைச் சமயங்களிலும் வைத்துக்காண்க.

மேற்கூறியவாற்ருல். ஒருவனதுஇலட்சியத்தை நோக்கிக் கொள்ளற் பாலதாய உண்மைச்சமயம் வேருயும் சமய சம்பந்தமான சில கிரியைகள்கொள்கைகளை அனுசரித்தல், மாத்திரையானே கொள்ளப்படும் கட்டுச் சமயம் வேருயுமிருத்தல் கூடுமென்பது எளிதின் உணர்ந்து கொள்ளலாகும். உதாரணமாக அறிவைத் தேடுதல்" அதனை உபயோகிக்கு மாற்றை ஆராய்தல் என்பவற்றில் கருத்துடையவன் ஒருவனது உண்மைச் சமயம் 'புத்தம்' அவனது கட்டுச் சமயம் கிறிஸ்தவசமயமாயேனும் முகமது சமயமாயேனும் சைவ சமயமாயேனும் அன்றிப் புத்தசமயமாயேனுமிருத்தல் கூடும். இன்னும் கட்டுச்சமயம் சம்பந்தப்பட்டவரையில் சைவர்களாயிருப்போரில் உண்மையிற் பலர் உலோகாயதராயும், சிலர் புத்தராயும், சிலர் சமணராயும் ஒரு சிலர் சைவராயுமிருத்தல் கூடும்.

இது காறும் கூறியவாற்ருல், மக்கள் தத்தம் கட்டுச் சமயங்களில் மித மிஞ்சிய அபிமானங்கொண்டு ஏனை கட்டுச்சமயிகள் யாவரையும் இகழ்தல் தகாதென்பதும், ஒவ்வொரு கட்டுச் சமயத்துவம் உலோகாயதர் முதற் சைவர்கள் ஈருகப் பல திறத்தினராய உண்மைச் சமயிகளிருத்தல் கூடுமென்பதும், மனத்துக்கொண்டு, அவ் வச்சமயத்திலுள்ள பெரியோர்களை மதித்துநடத்தல் வேண்டுமென்பதும், ஒவ்வொருவரும் தத்தம் உண்மைச் சமயம்–அஃதாவது வாழ்க்கையின் இலட்சியங்களைக் கொண்டு வரையறுக்கப்படுஞ் சமயம்– இதுவென்பதை இயன்றளவு ஆராய்ந்து தன்னிலைமை ஒரு சிறிதேனும் உயர்த்திக் கொள்வதற்கு ஏற்ற பயிற்சிகளைச் செய்து வருதல் வேண்டுமென்பதும் உய்த்துணர்ந்து கொள்ளற்பாலன.

## நாடகக் கலைஞர்...

11ஆம் பக்கத் தொடர்ச்சி

மட்ட அறிமுகம் கிடைத்தது'' என்று கூறி அமர்ந்தார்.

செக்கனும் நிமிடமும் இறந்து இறந்து பிறந்தன. மாணவர்கள் முக்கியமான விடயங்களைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தனர். சபை ஆழ்ந்த கிரகிப்புடன் மிக அமைதியாய் இருந்தது.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் குழந்தை ம. சண்முகலிங்கம் எழுந்தார்.

''நாடகம் நல்ல நடிகனை உருவாக்காவிட்டாலும் நல்ல மனிதர்களை உருவாக்க வேண்டும்'' என்ற முன்னுரையோடு தொடங்கியவர் தனது வழமையான நகைச்சுவை இழைந்த பாணியில் ஏராளமான கருத்துக்களைச் சொன்னர்.

''வைரமுத்துவின் அரங்கம்'' பற்றி விரிவான விளக்கம் தந்தார். மரபுவழியைப் பின்பற்றிய வசந்த கான சபா நடிகர்கள் புதியவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் நடிகமணிக்கு இருந்த ஆர்வத்தை வியந்தார். தனக்கென ஒரு நடிப்பு 'ஸ்ரைலை' ஏற்படுத்திக் கொண்ட வைரமுத்துவின் பாணி ஏனைய வசந்த கான சபா நடிகர்களிலும் தொற்றியுள்ளதை எடுத்துக் காட்டினர். மேடையில் அவர் கையாளும் சைகைகளைப் பற்றியும், கைப்பொருள்களை மிக இயல்பாகப் பாவிக்கும் முறைகளைப் பற்றியும் கூறினர்.

'பேட்டோல் பிரெச்ட்' இன் ''சரியானதுதான் அழகானது'' என்ற கொள்கை வைரமுத்துவிடம் உரமேறி நின்ற நிலையை விளக்கினர்

மக்கள் மேடையில் என்ன நடக்கிறது என்று பார்க்கப் போகவில்லை. வைரமுத்துவைப் பார்க்கப் போனர்கள். வைரமுத்து நடிப்பதைப் பார்க்கப் போனர்கள். வைரமுத்துவின் இசையைக் கேட்கப் போனர்கள் என்ருர்.

ஆரம்பத்தில் பெண் பாத்திரம் ஏற்று நடிப்பவர்கள் மிகையாக நடிக்கப் பயிற்சி பெறுவதால் அவர்களுடைய உடல் தளர்ந்து விடுகிறது (relaxeol) இது அவர்களின் சிறப்பான நடிப்பிற்கு உதவுவதாய் இருக்கலாமோ என்று வினவினர்.

முற்றிலும் புற நோக்கோடு காரை. சுந்தரம்பிள்ளை அவர்கள் வைரமுத்து அவர்களை ஆய்வு செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து அமர்ந்தார்.

செல்வன் நாவரசன் நன்றியுரை கூற வருகிருர். இயல்பாக வருகின்ற அழகான செந்தமிழில் வார்த்தைகளை அளந்து எல்லோருக்கும் நன்றி சொல்கிருர். அப்படியானல் கலந்துரையாடல் முடிந்து விட்டதா?

நேரம் 5. 15 தான் காட்டுகிறது. வழக்கமாக இலக்கியக் கூட்டங்களுக்குப் போனல் கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்து வருகிற நான் இந்த நாடகக் கூட்டத்திற்குப் போய்... ''இன்னும் கொஞ்ச நேரம் இருக்கலாம்'' என்ற உணர்வுடன் எழுந்தேன்.

முன் வாசலில் உயர்ந்து நின்ற மரங்களின் தளிர்க் குடை போர்த்த நிழலில் நடேஸ்வராக் கல்லூரி தனித்து நிற்க, நான் வெளியேறினேன்.

## பண்டிதமணி ..

9ஆம் பக்கத் தொடர்ச்சி

யும் தாண்டிவிட்டன. தாண்டிக் காய்க்குள் புகுந்தவன் போல. இதுவரை பேசாமலிருந்து, பண்டிதமணி அவர்கள் மேல் வர்ஷிக்கப்பட்ட பாராட்டுக்களைக் கேட்டுக் கொண்டிருந்த நான், ஒரு கேள்வியைமுன் வைத்தேன்;

'இங்கு மூன்று விடயங்கள் தொடர்புபடுகின்றன. ஒன்று பட்டம். இரண்டு பட்டப் பெறுபவர் மூன்று பட்ட மளிப்போர். பட்டம் பெறுவோரின் தகைமைக்கேற்ற பட்டத்தினை தக்கோர் வழங்கும்போது காரியம் முழுமை பெறும். பட்டம்பெறுவோரின் தகைமை உண்மையில் எமது விசாரணைகளுக்கு எட்டாதது. பட்டமும் பொருத்தமானதாய் இருக்கலாம் ஆனல் பட்டம் வழங்குவோரின் தகைமைபற்றி ஆராயவேண்டாமா? அவர்கள் ஏன் பட்டத்தை வழங்குகிருர்கள்? தாமாக மதித்து முன்வந்தா அன்றி எமது வேண்டுகோளுக்காகவா?'

கூட்டத்தில் ஒரு பரபரப்பு: சலசலப்பு 'பண்டிதமணி அவர்களுக்குப் பட்டமளிக்கும் கௌரவத்தைப் பல்கலைக்கழகம் தானகவே முன்வந்து பெற்றுக் கொள்ளட்டும். நாம் வேண்டுகோள் விடுக்க வேண்டிய அவசியமில்லை கலாநிதிப் பட்டம் இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன, பண்டிதமணி அவர்கள்எங்கள்பண்டிதமணியே' என்ற எண்ணம் மேலோங்கத் தொடங்கியது.

அந்த எண்ணத்தின் பிரதிபலிப்பாகவே என எண்ணுகிறேன். பண்டிதமணி அவர்களுக்கு இலங்கைப் பல்கலைக் கழகம் தானகவே முன்வந்து இலக்கிய .கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்து, தன் கௌரவத்தையும் உயர்த்திக் கொண்டது.

இக் கௌரவங்களுக்குப் பல்கலைக்கழக ஆளுநர் சபையில் அத்திவாரமிட்டவர் அமரர் பேராசிரியர் கைலாசபதி அவர்கள். அமரர் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் காரியம் நிறைவு பெற உழைத்த பெருமைக்குரியவர்.

பண்டிதமணி அவர்கள் மருளைப் பொருள் செய்யாதுபொருளைப் பொருள் செய்தவர்கள். நிறைமொழி மாந்தர். அவர்கள் கூறியன மந்திரம் போல்வன· அவர்கள் செய்தது புனித தமிழ் யாகம். அந்த யாக குண்டத்திலிருந்து பிறந்த தமிழ் அமுத கலசங்கள் ஏராளம். அவற்றைப் பயன் செய்வது நம் கடன்.

அறம் என்றதராசிலே எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கிற பண்டிதமணி அவர்களது மனிதாபிமானம் மிளிர்ந்த சந்தர்ப்பங்கள் பல, அவர்கள் மாணுக்கரின் வாயிலாகக்கேட்கும் போதெல்லாம் ஆனந்த பரவசம் உண்டாகும்,

அந்த நினைவுகளோடு, என்னை ஒத்த சிலருக்கு ஒரு கனவு பண்டிதமணி அவர்கள் சீவந்தாரய் இருந்த காலத்திலேயே அக் கனவு அடிக்கடி முளைத்ததுண்டு இன்றும் முளை கொள்கிறது. அதுபற்றி ஒருவரை ஒருவர் காணுகிறபோது கலந்துரையாடியது முண்டு. அக் கனவு நனவாக வேண்டும் என்பது எல்லோரதும் வேணவா.

அக் கனவு இரு நிலைகள் கொண்டது. ஒன்று ஆண்டுதோறும் யாழ். பல்கலைக் கழக

அநுசரணையோடு'' பண்டிதமணிநினைவுப் பேருரை'' நிகழ்வதற்கான அறக்கொடைநிதியம்உருவாதல். இரண்டு: யாழ். பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு, பட்டப் பின்படிப்பு, ஆராய்ச்சி என்ற மட்டங்களில்'' பண்டிதமணி நினைவுப் புலமைப் பரிசில்'' வழங்குவதற்கான நிதியம் உருவாதல். இப் புலமைப் பரிசில்கள் தமிழ்த் துறையிலோ, இந்து நாகரிகத் துறையிலோ அன்றிச் சமஸ்கிருதத் துறையிலோ அமையலாம் எனப் பலர் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

பண்டிதமணி அவர்களின் மேதைமை எதிர்காலப் பரம்பரைகளினூடாக நின்று பயன்தரத்தக்கன செய்தல் எமது கடன்.


**தான்சன் கல்வி நிலையம்**

கே. கே எஸ் ரேட் தெல்லிப்பழை

**O/L REVISION CLASS**
(மீட்டல் வகுப்பு)

விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
கணிதம் — திரு. மகேந்திரன் - மதி

ஆரம்பமாகியுள்ளது.

08277

# வடக்கு - கிழக்கு மாகாண அரசு பதவி வெற்றிடங்கள்

## வடக்கு - கிழக்கு மாகாண ஆங்கில தட்டெழுத்தாளர் சேவையில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 1989

வடக்கு - கிழக்கு மாகாண ஆங்கில தட்டெழுத்தாளர் சேவையில் சேரவிரும்பும் இரு பாலாருக்குமான போட்டிப் பரீட்சையொன்று பின்வரும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படவுள்ளது

**திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, பருத்தித்துறை, கல்முனை, வவுனியா.**

பரீட்சார்த்திகள் ஏதேனும் மூன்று பரீட்சை நிலையங்களை முன் விருப்ப அடிப்படையில் தெரிவு செய்யலாம்.

போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத ஏதேனும் பரீட்சை நிலையம் தள்ளுபடி செய்யப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

2. தகுதி

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள்

(அ) இலங்கைப் பிரஜையாயிருத்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்திகள் 18 வயதிற்குக் குறையாதவர்களாகவும் 40 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) நற்குணமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பிறந்தவராயிருத்தல் வேண்டும். அல்லது கடைசி விண்ணப்பத் தேதிக்கு முந்திய 6 வருட கால எல்லைக்குள் 3 வருடங்கள் தொடர்ச்சியாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வதிந்திருத்தல் வேண்டும். அல்லது தொடர்ச்சியாக 5 வருடங்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடுத்தரக் கல்வி பெற்றிருக்க வேண்டும். பரீட்சார்த்தியின் பெற்றோர்களில் எவராவது இடமாற்றத்திற்கு அடங்கிய அரச சேவையிலோ, உள்ளூராட்சிச் சேவையிலோ, கூட்டுத்தாபனங்களிலோ கடமையாற்றுபவராக அல்லது கடமையாற்றியவராக இருப்பின், அப்பெற்றோர் எவராவது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பிறந்திருப்பின் குறிப்பிட்ட பரீட்சார்த்தி தகுதி பெறுபவர் ஆவார்.

(உ) பின்வரும் தராதரங்களில் ஒன்றையாவது உடையவராயிருத்தல் வேண்டும்,

1) சிரேட்ட பாடசாலை சான்றிதழ் பரீட்சையில் ஆங்கிலமொழி அல்லது ஆங்கில இலக்கியம் ஒரு பாடமாகக் கொண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2) பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்திட்டம் (அ அல்லது ஆ) அல்லது ஆங்கில இலக்கியத்துடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும், (ஒரே தடவையில் குறைந்தது ஐந்து பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)
3) பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்திட்டம் (அ அல்லது ஆ) அல்லது ஆங்கில இலக்கியத்துடன் மேலும் இரண்டு பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இரு வருட ஆங்கில தட்டெழுத்து அனுபவம் கொண்ட சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
4) தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் ஆங்கிலத்தை முதல் அல்லது இரண்டாம் மொழியாகக் கொண்டு ஆறு பாடங்களில் ஏ அல்லது பி அல்லது சி தராதரத்தில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
5) அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் ஆங்கில மொழிமூலம் குறைந்தது எட்டாம் தரத்திலாவது சித்தியடைந்தவராயும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆங்கில தட்டெழுத்து இரண்டு வருடத்துக்கு அனுபவம் பெற்ற சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஊ) சிறந்த உடல்நலம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

3. வேதனத்திட்டம்

ரூபா 17,280—14×480—6×600—27,600

4. விண்ணப்பங்கள்:

(I) இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த விளம்பரத்தில் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய முழுத்தாளின் அரைத்தாளில் விண்ணப்பதாரர்களினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(II) விண்ணப்பங்கள் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு திருகோணமலை என்ற முகவரியிடப்பட்டு 8-09-1989 ஆம் திகதியோ அதற்கு முன்னரோ செயலாளருக்கு கிடைக்கக் கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்பமெதுவும் நிராகரிக்கப்படும் விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மாகாண ஆங்கில தட்டெழுத்தாளர் சேவைப் பரீட்சை" என தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(III) பரீட்சார்த்திகள் 40 ரூபா பெறுமதியான பரீட்சைக் கட்டணத்தை காசுக்கட்டளை மூலமாக அனுப்புதல் வேண்டும். காசுக்கட்டளையை "செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, திருகோணமலை" என பெறுதல் வேண்டும்.

(IV) விண்ணப்பங்கள் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படலாகாது.

(V) பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வருவோருள் யாரேனும் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

- (அ) சமாதான நீதிவான்
- (ஆ) சத்தியப்பிரமாண ஆணையாளர்
- (இ) வழக்கறிஞர்
- (ஈ) பிரசித்த நொத்தாரிசு
- (உ) அரசாங்க அல்லது உதவி பெறும் பாடசாலையின் அதிபர்
- (ஊ) கடற்படையை அல்லது வான்படையை அல்லது தரைப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர்.
- (எ) அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் வகிப்பவரும் ஆண்டொன்றுக்கு 24,000/- ரூபாவுக்குக் குறையாத திரட்டிய வேதனம் பெறுபவருமான அரசாங்க உத்தியோகத்தர்.
- (ஏ) பொலிஸ் சேவை கசற் நிரல் உத்தியோகத்தர்
- (ஐ) வழிபாட்டுத் தலமொன்றுக்கு பொறுப்பாகவுள்ள சமயக்குரு

5. பரீட்சைத் திட்டம்:-

இரண்டு பாகமாக இப்பரீட்சை நடாத்தப்படும். அவை

பாகம் (I) எழுத்துப் பரீட்சை (விபரங்கள் பின்னர் பிரசுரிக்கப்படும்)

பாகம் (II) வாய் மொழிப் பரீட்சை

6. ஏற்கனவே ஆங்கில தட்டெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி இருப்பவர்கள் அனைவரும் இவ்விளம்பரத்தில் உள்ள விண்ணப்பப்படிவத்தில் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டும்.

செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு - கிழக்கு மாகாணம்.

35, மக்கேசர் வீதி,
உவர்மலை, திருகோணமலை. 11 - 08 - 1989

---

கட்டிலக்கம்:-

## மாதிரி விண்ணப்பப்படிவம்

### வடக்கு - கிழக்கு மாகாண ஆங்கில தட்டெழுத்தாளர் சேவையில் II ஆம் வகுப்பின் (ஆ) பிரிவில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை

குறிப்பு:- (இப்படிவம் பரீட்சார்த்தியினால் செம்மையாகவும், தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்.)

1. 1 : 1 முதலெழுத்துக்களுடன் பெயர்:
   1 : 2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் அல்லது பெயர்கள்:-
   1 : 3 பால்:—
   1 ; 4 விவாகம் செய்தவரா / செய்யாதவரா:—
   1 ; 5 தேசிய இனம்:—
2. முகவரி—
   மாவட்டம்:—
3. விளம்பரத்தின் பகுதி 2 (ஈ) இன் பிரகாரம்
   பரீட்சார்த்தியின் பிறப்பு பெற்றோரின் வதிவிடம் பற்றிய விபரம்; —
4. பரீட்சார்த்தி விரும்பும் பரீட்சை நிலையங்கள்.—
   4 ; 1 1 ஆம் தெரிவு:—
   4 : 2 2 ஆம் தெரிவு:—
   4 : 3 3 ஆம் தெரிவு:—
5. 5 ; 1 பிறந்த திகதி:—
   5 ; 2 1989 - 09 - 08 இல் வயது
   வருடம்........... மாதம்........... நாட்கள்...........
6. கல்வித் தகைமைகள்:—
   6:1 விளம்பரத்தின் 2 (உ) (3) ஆம் பந்தியின்படி தகுதிபெறுபவராயின், அனுபவச் சான்றிதழ் பற்றிய விபரம் தருக:-
   6:2 பரீட்சையின் பெயர்:—
   6:3 பாடங்கள்:

| பாடங்கள் | சித்தியடைந்த வருடம் | பரீட்சை நிலையமும் சுட்டிலக்கமும் |
| --- | --- | --- |
| ............... | ... ...... | ............... |

   6:4 உயர் கல்வித் தகைமைகள்:-
   1. பரீட்சையின் பெயர்:-...........
   2. வருடம் :-..........
   3. சுட்டிலக்கம் :-...........
   4. பாடங்கள் :-..........
7. எப்போதாவது எக்குற்றத்திற்காகவேனும் நீர் குற்றத் தீர்ப்புப் பெற்றுள்ளீரா? அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா? அல்லது உமக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளதா? அவ்வாறாயின் திகதி தவறின் தன்மை, நீதிமன்றத்தின் பெயர், வழக்கு இலக்கம் என்பனவற்றைக் கூறுக:-
8. நான் தந்துள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு சரியானவையும் உண்மையானவையும் என்றும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.
9. 40/-ரூபா பெறுமதியுள்ள காசுக்கட்டளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. காசுக்கட்டளையின் இலக்கம்:-...........
   காசுக் கட்டளை பெறப்பட்ட
   தபாற்கந்தோர் பெயர் :-...........
   திகதி :-........... ........................—
   பரீட்சார்த்தியின் கையொப்பம்
10. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்:-
   நான் திரு./ திருவாட்டி / செல்வி........... என்பவர் தற்போது ...........இல் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார் என்றும்...........இல் தற்போது வதிகிறார் என்றும் எனக்கு நன்றாகத் தெரிந்தவர் என்றும் அவர் இவ் விண்ணப்பத்தில் தமது கையொப்பத்தை ..... ......ஆம் ஆண்டு........... மாதம்........ஆந் திகதி என்முன்னிலையில் இட்டாரென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

...............-.............
பரீட்சார்த்தியின் கையொப்பத்தை
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

பெயர் :—
முகவரி :—
நிலை :—
திகதி :—

80272

VARAMURASOLI REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA 20-08-1989 ஞாயிற்றுக்கிழமை

# மாணவர்களின் வகுப்பேற்றத்தை இடைநிறுத்த அரசு ஆலோசனை

(எப், சி. ஆர்.)

பாடசாலைகளில் அடுத்தவருடத்திற்கான மாணவர் வகுப்பேற்றத்தை இடைநிறுத்தி வைப்பதற்கு அரசு உயர் மட்டத்தில் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

அத்துடன் அடுத்த வருடத்தில் முதலாம் ஆண்டுக்குப் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதை தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

தென் பகுதியில் ஜே. வி. பியினரின் தொடர் நடவடிக்கைகள் காரணமாக இவ்வருடம் பாடசாலைகள் அனேகமான நாட்கள் மூடப்பட்டிருந்தன. இதனால் இவ்வருடத்துக்குரிய பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதே நிலை தொடர்ந்து வருவதனால் இவ்வருடத்திற்குரிய பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கால அவகாசம் வழங்கும் பொருட்டே அடுத்த வருடத்திற்கான வகுப்பேற்றத்தையும், முதலாம் ஆண்டுக்கான புதிய அனுமதியையும் இடைநிறுத்தி வைப்பதற்கு உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு ஒரு முடிவு எடுக்கப்படும் பட்சத்தில் இலங்கையின் கல்வி வரலாற்றில் பாரியதொரு பின்தள்ளல் ஏற்படுமென கல்விமான்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாநகர ஆணையாளர் அறிவிக்கிறார்

# நல்லூர்த் திருவிழாவுக்கு நகைகளுடன் வரவேண்டாம்

நல்லூர்த் திருவிழாவிற்குப் பக்தர்களின் வருகை அதிகரித்து வருவதையடுத்து நல்லூர்க் கோவிலையண்டியுள்ள பகுதிகளிலுள்ள வீதிகள் இன்றுமுதல் மாலை 6.30 மணிக்கே வாகனப் போக்குவரத்திற்காகத் திறந்து விடப்படும் என மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

எத்தனையோமுறை அறிவித்தும் பெண்கள் நகைகளை அணிந்து வருகிறார்கள். இது திருடர்களுக்கு வாய்ப்பாக அமைகிறது. நேற்றுக்கூடப் பல நகைகள் களவுபோயுள்ளன. எனவே இதனைத் தவிர்ப்பதற்காகப் பெண்கள் நகைகள் அணிவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும் என்றார்.

# அமலமரித் தியாகிகள் தலைவர் யாழ்ப்பாணம் வருகின்றார்

அமலமரித் தியாகிகளின் தலைவர் அதி வணக்கத்துக்குரிய மார்சல்லோ சாகோ இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இருபத்தி மூன்றாம்திகதி பிற்பகல் யாழ். புனித, மரியநாயகி பேராலயத்தில் இவர் வரவேற்கப்பட்டு, கூட்டுத் திருப்பலியில் பங்கு கொள்ளுவார்.

அதி வண. சாகோ அடிகள் கடந்த ஆறும்திகதி கொழும்பு வந்திருந்திருந்தார். இம்மாதம் இருபத்தியெட்டாம் திகதி வரை இவர் இலங்கையில் தங்கியிருப்பார்.

வடமாகாண அமலமரித் தியாகிகளையும், ஏனைய சபைகளைச்சேர்ந்த குருக்களையும் சந்திப்பதற்காக யாழ்ப்பாணம் வரும் இவர் இத்தாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

---

## வடக்குக்...

வடக்கு கிழக்கு மாகாண அரசு தென்னிலங்கை நிலைமைகளுக்காக வடக்குக் கிழக்கு மாணவர்களின் கல்வி பாதிக்கக்கூடாது என்பதைக் கவனத்தில் எடுத்து, எமது மாகாணஅரசின் கீழ் இயங்கும் சகல பாடசாலைகளையும் திறக்குமாறு விடுத்த பணிப்புரையின் பிரகாரம் வடகிழக்குமாகாணப் பாடசாலைகள் திறக்கப்பட்டுக் கிழக்கில் முழுமையாகவும், வடக்கில் மாணவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நொண்டிச சாட்டை முன்வைத்து ஏற்படுத்திய பயமுறுத்தல் காரணமாக ஒரு பகுதி மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்காமல் இருந்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல தனியார் கல்வி நிலையங்களும் (ரியூட்டரிகள்) திறக்கப்பட்டு, முன்னரிலும் பார்க்க அதிகமான மாணவர்கள் அக் கல்வி நிலையங்களிற் கல்வி பயின்று வருவதையும் எம்மால் நிதர்சனமாகக் காண முடிகின்றது. இதே சமயம் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பல புதிய கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

வடபகுதியில் உள்ள மகளிர் கல்லூரிகள் முழுமையாக நடைபெற்று வருவதும், கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கிய அம்சமாகும். இதே சமயம் ஆரம்பப் பாடசாலையிற் கல்வி கற்கும் சிறார்களையும் கூடப் பாடசாலைக்குச் செல்ல விடாது தடுக்கும் நடவடிக்கையானது தமிழ்பேசும் மாணவர்களைக் கல்வித் துறையிற் பல தசாப்தங்களுக்குப் பின்தள்ளவே உதவும் என்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

உலகுக்கு முன்னால் தென்னிலங்கையைப் போன்ற ஒரு குழப்பமான நிலையை வடக்குக் கிழக்கிலும் நிலவுகின்றது எனக் காட்ட முனையும் இலங்கை அரசுக்கு, முட்டுக்கொடுக்க முனையும் ஒரு குழுவினரின் கையாலாகாத நடவடிக்கையின் வெளிப்பாடே இத்தகைய வறட்டுத்தனமான பயமுறுத்தல்களாகும். இதற்குத் தமிழ் மக்களும், மாணவர்களும் துணைபோவார்களாயின் "அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட" கதையாகவே முடியும் என்பதனை அவர் இங்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆகவே, இன்றைய அரசியற் சூழ்நிலையிற் தமிழர்களை இனரீதியாக ஒடுக்க முனைந்த அரசும், கடந்தகாலத்திற் தரப்படுத்தல் மூலம் எமது மாணவர்களின் கல்வியைப் பாழடித்தும், தென்கிழக்காசியாவிற் தலைசிறந்த நூலகமாக விளங்கித் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்கிய யாழ். பொதுசன நூலகத்தைத் தீமூட்டி எரித்தும் திருப்தியடையாத பேரினவாதச சக்திகளும், இன்று தமிழர்களைக் கொண்டே தமிழ்பேசும் மாணவர்களின் கல்வியைப் பாழடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்பதைப் பொறுப்புள்ள பெற்றோர்களும், மாணவர்களும் சிந்தித்துச் செயலாற்றுமாறு வேண்டுகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அதிகாரப்பரவல்...

துள்ள இந்தப் பிரேரணைகள் இம் மாதம் 24-ம் திகதி வியாழக்கிழமை மாகாணசபையில் சமர்ப்பிக்கப்படும்.

நூற்றியிருபத்தொரு பக்கங்களில் தயாரிக்கப்பட்ட இந்தப் பிரேரணைகள் மாகாணசபையின் அங்கிகாரம் பெற்றபின்னர் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## புதிய பரிவர்த்தனை...

புக்கள் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் நிலையங்களுக்கும், தபால் நிலையங்களுக்கும் வழங்கப்படவுள்ளதாகத் தொலைத் தொடர்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## மின்தடை...

திருத்தப்படாததன் மர்மம் என்னவென்று அறிய முன்னணி விரும்புகிறது. வடகிழக்கு மாகாண மக்கள் அனைவரையும் குறிப்பாக அடிமட்ட விவசாயத் தொழிலாளர்களின் நாளாந்தச் சீவனோபாய வாழ்க்கை முற்றிலும் மின்தடை காரணமாகச் சீரழிந்துள்ளது.

ஏற்கனவே பல வழிகளிலும் தொல்லையுறும் மக்கள், மின்தடை என்பதும் தம்மீது விதிக்கப்பட்ட மறைமுகப் பொருளாதாரத் தடையா? என்ற வினாவை எழுப்ப வேண்டியுள்ளது.

தெற்கிலும் கிளர்ச்சிவாதிகளே இதற்குக் காரணமென அரசதரப்பிற் கூறப்பட்டாலும் அவர்கள் இதற்குப் பொறுப்பாக இல்லாதவிடத்து இலங்கை அரசுதான் இதற்குப்பொறுப்பு என்ற முடிவிற்கு நாம் வரவேண்டி நேரிடும். இவைபற்றி விவாதித்துத் தமிழ் பேசும் மக்கள் மின்தடை காரணமாக அடையும் சிரமங்களை நீக்க வேண்டும் என்பதற்காக ஈழவர் ஜனநாயக முன்னணி இலங்கை ஜனாதிபதியையும், மின்துறை அமைச்சரையும் சந்திக்கக் கோரியுள்ளது.

## கொழும்பு வேலைநிறுத்தத்தால்

# யாழ். ஆஸ்பத்திரிகளுக்கு நோயாளர் வருகை அதிகம்

கொழும்பில் உள்ள வைத்தியசாலைகளில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து வடபகுதியிலுள்ள தனியார் மற்றும் அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவோரின் தொகை திடீரென அதிகரித்துள்ளது.

கொழும்பில் அரசாங்க வைத்தியசாலைகளில் தற்பொழுது இடம்பெற்று வரும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக சில தனியார் வைத்தியசாலைகளிலும் வைத்தியசேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மற்றும் சில தனியார் வைத்திய நிலையங்களில் வைத்திய சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் கொழும்பில் அரசாங்க அல்லது தனியார் வைத்தியசாலைகளில் வைத்திய சேவைகளைப்பெற்றுக்கொள்ள முடியாத நிலையைத் தொடர்ந்து கொழும்பிற்கு வைத்திய சிகிச்சைக்காகச் சென்று வந்த பலர் தற்பொழுது இங்குள்ள வைத்தியசாலைகளிலேயே வைத்திய சேவைகளைப்பெற்று வருகின்றனர்.

அத்துடன் வடபகுதியில் தொடர்புடைய கொழும்பில் வதியும் சிலரும் வைத்திய சேவைக்காக இங்குள்ள வைத்தியசாலைகளை நாடி வரத் தொடங்கியுள்ளனர்.

## கொடியேற்றம்

மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இம்மாதம் இருபத்தொன்பதாம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

## படை விலகுதலை...

மாநாட்டில் பேசிய அவர் இத்தாக்குதல்களை முறியடிக்க இலங்கை அரசு இந்திய அரசுடன் இணைந்து கூட்டுமுயற்சி செய்யவேண்டும் எனவும் கூறினார்.

## ரயில்வே...

பாணம் வரவில்லை.

இதேவேளை ஆஸ்பத்திரியில் கைதான ஊழியர்கள் நேற்றுமுன்தினம் பிணையில் விடப்பட்டும் தொடர்ந்தும் ஆஸ்பத்திரிகளில் வேலைநிறுத்தம் தொடர்கிறது.

## ஜே. வி. பியின்...

கொடுக்கமாட்டார்கள் எனவும் மக்கள் இதற்கு ஆதரவு தருமாறும் கேட்டுள்ளனர்.

இதேவேளை தீவிரவாதக் குழுவினரையும் ஒரு வாரத்திற்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலம் யுத்த நிறுத்தம் செய்யுமாறு ஜனாதிபதி பிரேமதாஸ தம்மை மச் சந்தித்த முற்போக்கு முன்னணியினரிடம் கோரியுள்ளார்.

தீவிரவாதக்குழுவினருடன் தொடர்புடைய இந்த முற்போக்கு அணியினர் ஏழு அம்சக் கோரிக்கை ஒன்றையும் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தனர். இதில் சிலவற்றை அமுல் செய்ய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவேண்டும் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதற்காகச் சகல கட்சிகளுடனும் தாம் கலந்து ஆலோசனை செய்ததாகவும் ஜே வி. பி. உட்படச் சகல கட்சிகளும் இணைந்த 'அரசியல் நிர்ணய சபை' ஒன்றை நிறுவவும் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இன்று வானொலியில்

கடந்த பதினான்காம், பதினைந்தாம் திகதிகளில் மருதமடுத் திருப்பதியில் நடைபெற்ற வருடாந்த உற்சவ வேஸ்பர் திருப்பலி ஆராதனைகளின் தொகுப்பு நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணி தொடக்கம் 7 30 மணிவரை தமிழ்ச் சேவையில் ஒலிபரப்பாகும்.

இந்நிகழ்ச்சியைத் திரு வி. அன்ரனி மரியதாஸ் தொகுத்தளிக்கிறார். அன்ரனி இராசையா தயாரித்தளிக்கிறார்.

## இலங்கை வங்கி நல்லூரில் பந்தல்

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் இன்று இலங்கை வங்கியினால் தற்காலிக பந்தல் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இங்கு சேமிப்பு பத்திரங்கள், வெளிநாட்டுக் காசோலைகள் வைப்பிலிடல் போன்ற கருமங்கள் நடைபெறும். ஆனால் பணக்கொடுப்பனவுகளுக்கு இலங்கை வங்கியின் தலைமைப்பீடத்துடனேயே தொடர்பு கொள்ள வேண்டும் என இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

## நெல்லியடியில்...

தங்கள் கேட்டன. கன்பொல்லை வீதியில் புகைமண்டலம் தெரிந்ததாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவித்தனர். இச் சம்பவங்களால் கரவெட்டி, நெல்லியடிப் பகுதியில் பதற்றம் நிலவுகிறது.

இதே வேளை பருத்தித்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் செல்லத்துரை சத்தியவேணி (22) என்ற இளம் பெண் காயமடைந்து. மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## யாழ். வைத்தியசாலையில்...

வலது தோளில் முளைத்துள்ளது. மூன்று மாதங்களுக்கு முன் சிறுகாயாக இது காணப்பட்டதாகவும் பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து இந்த நிலையை அடைந்ததாகவும் அவ் வயோதிபர் தெரிவித்தார்.

ஆட்காட்டி விரலைப்போன்ற பருமனில் காணப்படும் இது தனது வேலைகளைச் செய்ய இடையூறாக இருப்பதாலும், பார்ப்பதற்கு அவலட்சணமாக இருப்பதாலும் இதனைச் சத்திரசிகிச்சை மூலம் அகற்றத்தான் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்ததாகவும் அவர் முரசொலிக்குத் தெரிவித்தார்.

இவருக்கான சத்திரசிகிச்சை நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ராண்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகம் பிரிவில் 20.08.89 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.